விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
கிளை நூலகம்
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 03 சனிக்கிழமை (19.08.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 243

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# இராணுவத்தாலேயே பாலச்சந்திரன் படுகொலை!

## எரிக் சொல்ஹெய்ம் குற்றச்சாட்டு



**(நோர்வே) விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன், படையினரால் பிடிக்கப்பட்டே படுகொலை செய்யப்பட்டார் என்று தாம் வலுவாக சந்தேகிப்பதாகவும், இது ஒரு மோசமான குற்றச் செயல் என்றும் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.**

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுக்களிலும், அமைதி முயற்சிகளிலும் நடுநிலையாளராகப் பங்கேற்ற எரிக் சொல்ஹெய்ம், அனைத்துலக ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே இவ்வாறு தெரி வித்துள்ளார்.

பிரபாகரன் எப்படிக் கொல்லப்பட்டார் என்றும் எனக்குத் தெரியவில்லை. எனினும், பிரபா 24☛

## கல்லறைக்கு அஞ்சலி செலுத்த
## இந்திய இராணுவ அதிகாரிகள் இன்று கோப்பாய் வருகை!




(யாழ்ப்பாணம்)

கோப்பாயில் 30 ஆண்டுகளுக்கு பின்னர் புனரமைக்கப்பட்ட இந்திய இராணுவ அதிகாரியின் கல்லறையில் இன்றைய தினம் அஞ்சலி நிகழ்வை நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் இலங்கை இராணுவத்தினர் இரவு பகலாக மேற்கொண்டுள்ளனர்.

கடந்த 1987 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கோப்பாய் தெற்கு இராஜ வீதியில் உள்ள வெள்ள வாய்கால் பிராயடி பகுதிக்கு அண்மையில் அமைந்திருந்த இந்திய 24☛

## லொத்தர் சபைகள் மீண்டும் நிதியமைச்சின் கீழ் வந்தன

(கொழும்பு)

தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை ஆகிய இரண்டு நிறுவனங்களும் நிதியமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

இது தொடர்பான அதி விஷேட அரச வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கையொப்பத் 24☛

## நாமலை விசாரிக்க உத்தரவு

(கொழும்பு)

நிதி மோசடி தொடர்பான விசாரணைப் பிரிவின் அதிகாரியொருவரை அச்சுறுத்தியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ள நாடாளு 23☛

## கீழே விழுந்த குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

கட்டட வேலை செய்து கொண்டிருந்த வேளை மேலிருந்து கீழே விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று 23☛

## பொது வாக்கெடுப்பு தே.திணைக்களம் தயார்

(கொழும்பு)

பொது வாக்கெடுப்பை நடத்தத் தீர்மானித்தால் அதை நடத்துவதற்கு தேர்தல்கள் திணைக்களம் தயாராக இருக்கின்றது என்று தேர்தல்க்ள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

வாக்கெடுப்பை நடத்த 23☛

## பிரபாகரனுடன் என்னால் அதிக நேரத்தை செலவிட முடியவில்லை

### சொல்ஹெய்ம் வருத்தம்

(நோர்வே)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் அதிக நேரத்தைச் என்னால் செலவிட முடியாமல் போனதற்காக வருந்துகிறேன் என்று, இலங்கை க்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.



விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான 24☛

## வடக்கில் தாதியர் நியமனம்; 104 பேரில் 46 பேரே பதிவு

### தாதியர் கல்லூரி அதிபர் விசனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் தாதியர் சேவைக்காக அரசினால் நியமனம் வழங்கப்பட்ட 104 பேரில் 46 பேரே இதுவரை தாதியர் கற்கைநெறிக்கு தமது பதிவுகளை மேற்கொண்டுள்ளனர் என தெரிவித்த தாதியர் கல்லூரி அதிபர் செல்வி வல்லிபுரநாதன் ரயுலாதேவி, கற்கை நெறி ஆரம்பிக்கவுள்ளதால் விரைவாக பதிவினை மேற்கொள்ள வேண்டும் எனவும் இணைய விரும்பாதவர்கள் முன்கூட்டியே அறிவிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

தாதியர் சேவையில் இணைவதற்கு அரசினால் நேர்முகப் 24☛

## புலிகள் சரணடையவுள்ளதை பஸிலுக்கு தெரியப்படுத்தினோம்

### எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு



(நோர்வே)

போரின் இறுதிக்கட்டத்தில், 2009ஆம் ஆண்டு மே 17ஆம் நாள், விடுதலைப் புலிகளின் சமாதான செயலக பணிப்பாளர் புலித்தேவனிடம் இருந்து தமக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. அதில் தாம் படையினரிடம் சரணடையவுள்ளதாக தெரிவித்தனர்.

எமது பக்கத்தில் இருந்து அரச தலைவர்களுக்கு சரணடைய விரும்பும் உங்களின் விருப்பம் தெரியப் படுத்தப்படும் என்று அவரிடம் நாம் கூறினோம். 24☛

## எதற்கெடுத்தாலும் புலி என பிரசாரம்

### லக்ஸ்மன் யாப்பா

(கொழும்பு)

வடக்கு சமூகத்தில் ஏற்படும் சில பிரச்சினைகளைக் காரணங்காட்டி எதற்கெடுத்தாலும் புலிகள் மீளத் தோற்றம் பெறுகின்றனர் எனப் பொய்ப் பிரசாரத்தை மேற்கொள்வதாக இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன விசனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தொடர் 23☛

## ரணிலே தொடர்ந்தும் பிரதமர் சுதந்திரக்கட்சி உறுதியளிப்பு!

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவி நீக்கிவிட்டு புதிய பிரதமரை நியமிக்கும் நோக்கமோ, தேவையோ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஏற்படவில்லையென அக்கட்சியின் பொதுச் செயலாளரும் விவசாய அமைச்சருமான துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், முக்கிய நோக்கங்களை அடைந்துகொள்ளும் நோக்கில் தேசிய அரசாங்கத்தை உருவாக்கியதாக சுட்டிக்காட்டினார்.

துமிந்த திசாநாயக்க மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற வகையில் தனித்து அரசாங்கம் ஒன்றை அமைப்பதே 23☛

## சர்வதேச நீதிபதிகளுக்கு அனுமதியில்லை

(கொழும்பு)

யுத்தக் குற்ற விசாரணைகள் நடத்தப்பட்டால் சர்வதேச நீதிபதிகளுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை என புதிதாக பதவியேற்றிருக்கும் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

அத்துடன் வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதுவராலயங்கள் மற்றும் உயர்ஸ்தானிகர் அலுவலகங்களில் காணப்படும் பௌதிக மற்றும் மனிதவள குறை 23☛

## யாழ்.மின்சார நிலைய வீதி கடைகளின் வர்த்தகர்களை நீதிமன்றில் 6-ம் திகதி ஆஜராக உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் இடிக்கப்படவிருந்த வியாபார நிலையங்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்றைய தினம் கொழும்பு நீதிமன்றத்தில் நடைபெற்ற நிலையில், எதிர்வரும் 6 ஆம் திகதி எதிராளிகளை மன்றில் தோன்றுமாறு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு மருத்துவ பீட மாணவர்களுக்கான மருத்துவ சிகிச்சைகள் கற்கை நிலையத்தை அமைப்பதற்காக மாநகரசபையால் வழங்கப்பட்டிருந்த காணியில் அமைக்கப்பட்டிருந்த வியாபார நிலையங்கள் நீதிமன்ற உத்தரவினையடுத்து அகற்றப்படுவதற்கான 24☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமி நீண்ட காலமாக துஷ்பிரயோகம்

## தாய் உட்பட மூவர் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி-சாந்தபுரம் பகுதியில் சிறுமி ஒருவரை நீண்டகாலமாக துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியமை தொடர்பில் மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றின் பிரகாரம், சிறுமியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவர் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது.

இதுபற்றி குறித்த சிறுமி பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

11 வயதான சிறுமி ஒருவர் தனது தாயின் மூன்றாவது கணவரும் அவரின் நண்பரும் நீண்டகாலமாக தன்னை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி வந்ததாகத் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, அவ்விருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். மேலும், சிறுமியின் தாயாரையும் பொலிஸார் கைது செய்துள்ளதுடன், சந்தேகநபர்கள் மூவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

சிறுமியின் வாக்குமூலத்திற்கமைய, இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவரை கைது செய்வதற்கான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (மு-312)


'விழுதுகளின் பெருவிருட்சம் விருதுகளின் நாயகன்'

உயர்திரு.தி.இராசநாயகம் அவர்களின்

சேவைநலன் பாராட்டு



தன் வாழ்நாளின் சமூகப் பணியை சுமுகமாக செய்தேற்றி
விருதுகளின் நாயகனாய் விழுதுகளின் பெருவிருட்சமாய்
நிற்கும் நீவீர் என்றும் பெருமையாய்
வாழ வாழ்த்துகின்றேன்

பட்டம் பதவிகளை பக்கத்தில் வைத்துவிட்டு
மக்களோடு மக்களாகி
மாபெரும் பணிகள்தனை நொந்தவர் எமக்களித்து
நும் பணிக்காய்
யாழ்விருது பெற்றவகையில்-என்
உளந்தொட்டு வாழ்த்துகின்றேன்.

வாழ்த்துபவர்:-
திரு.பா.சிவச்சந்திரன்
குருபந்தல் சேவை, கண்ணகிநகர். (சி-9370)


# சுண்டுக்குளியில் விபத்து வயோதிபர் காயம்

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கர வண்டியும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் வண்டியும் மோதியதில் வயோதிபர் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று மாலை 6.30 மணி அளவில் யாழ்ப்பாணம் சுண்டுக்குளி பகுதியில் இடம்பெற்றது.

இதில் ஈச்சமோட்டையை விதானை வீதியை சேர்ந்த கனகரட்ணம் சிவபாதசுந்தரம் (வயது 81) என்பவரே காயமடைந்தவராவார்.

இது தொடர்பில் விசாரணையை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (மு-30)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



கறையான் தொல்லையா?



கட்டடங்களில் கறையான்களால் ஏற்படும் அல்லது ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்களை உத்தரவாதத்துடன் இல்லாதொழித்து தரப்படும் (Warranty)

ஆலோசனையும் மதிப்பீடும் இலவசமாக வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு :-
ந.ரூபகாந்த் (169)
077 151 5897
21 499 3200



'கண்ணகிநகரின் கன்னிநாயகன்'

உயர்திரு.தி.இராசநாயகம் அவர்களின்

சேவைநலன் பாராட்டு



கண்ணியமான பணிகள்தனை களத்தினிலேயிருந்து செய்து
கண்ணகிநகர் கிராமத்தின்
தோற்றுவாய்க்கு கன்னிநாயகனாய் மிளிர்ந்த-நும்
சேவையை நாவார வாழ்த்துகின்றோம்.

மண்குடிசைகளில்தான் நம் வாழ்நாள் முழுவதும் என்றெண்ணி
வாடித் தவித்த எம்மை-நம்
மனதை தொட்ட மாளிகைகளில் வாழ வழிசமைத்த
எம் வாழ்நாளின் முதல்வன் நீரன்றோ!

அரசாங்க சேவையில் அர்ப்பணிப்பான பணிகளின்
நாயகனாய் திகழ்ந்தும் தள்ளாத வயதிலும் தளராத
நின் பணியை ஓயாமல் செய்யும் நீவீர்
என்றென்றும் பெருமையுடன் வாழ நெஞ்சார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினர்கள்
கண்ணகிநகர் மக்கள் (சி-9369)


## மரண அறிவித்தல்

### திருமதி சுசிலாதேவி வைத்தியநாதன்



பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் லண்டன் Ilfordஐ வதிவிடமாகவும் கொண்ட சுசிலாதேவி வைத்தியநாதன் (சுசி) அவர்கள் 06.08.2017 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நீர்வேலியை சேர்ந்த காலஞ்சென்றவர்களான ரட்ணம் தம்பதியினரின் அன்பு மகளும், வட்டுக்கோட்டையை சேர்ந்த காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் (சட்டத்தரணி) பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், வட்டுக்கோட்டையை சேர்ந்த வைத்தியநாதன் (தனபால்-லண்டன்) அவர்களின் பாசமிகு மனைவியும், சோபிகா (கண் வைத்தியர்-லண்டன்), கிந்துஜன் (மருத்துவ பீடம்- லண்டன்), சிரோனிக்கா (மருத்துவபீடம்-லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அருந்தவராசனின் (இத்தாலி) அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சிதம்பரநாதன் (பொறியிலாளர்) மற்றும் கனகநாயகம், சிவகுமார் (லண்டன்), காலஞ்சென்ற தையல்நாயகி மற்றும் தனலக்சுமி, சிவனேஸ்வரி (கலா) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார். நாளை ஞாயிற்றுக்கிழமை (20.08.2017) 10.30AM manor park cometery & cromalormalonutti sebort Rd forost Gato U.K தகனக் கிரியைகள் இடம்பெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வடலியடைப்பு
பண்டத்தரிப்பு (168)

தகவல்:-
கனகசுந்தரம்...

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

மண்ணில் 1957 - 04 - 28

விண்ணில் 2017 - 07 - 21



### சின்னத்தம்பி சுந்தரலிங்கம் (தங்கச்சோதி)

**(வல்வை சிவகுரு வித்தியாசாலை -சிற்றூழியர்)**

மயிலிட்டி திருப்பூரைப் பிறப்பிடமாகவும் சிவபுர வீதி, வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவர் கடந்த 21.07.2017 அன்று இறைபதமடைந்த செய்தி கேட்டு மரணச் சடங்கில் கலந்து ஆறுதல் கூறியோருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், தொலைபேசி ஊடாக அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (20.08.2017) ஞாயிற்றுக்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று ஊறணி புனித தீர்த்தக் கடற்கரையில் அஸ்தி கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்குமாறு
அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சிவன் கோவில் வாசல்,
வல்வெட்டித்துறை (சி-9361)

தகவல்:-குடும்பத்தினர்
மனைவி-சு.இராஜலட்சுமி-T.P:-0772850394

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜயதாஸவுக்கு எதிரான யோசனைக்கு அங்கீகாரம்

## திங்கள் தீர்மானம் வரும்

(கொழும்பு)

பெரும் பரபரப்புக்கு மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடிய கட்சியின் செயற்குழுக் கூட்டத்தின் போது நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக யோசனையொன்று சமர்ப்பிக்கப்பட்டது. அந்த யோசனைக்கு நிறைவேற்றுக்குழு ஏகமனதாக அங்கீகாரம் அளித்துள்ளது.

நாளை மறுதினம் 21ஆம் திகதியன்று இடம்பெற விருக்கின்ற, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக்கூட்டத்திலேயே, இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது.

கட்சியின் செயற்குழுக் கூட்டம், கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில், நேற்று முன்தினம் முற்பகல் 10.30க்கு கூடியது.

தேர்தல் வாக்குறுதிகளின் பிரகாரம், ஊழல், மோசடி தொடர்பிலான வழக்கை, விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டி, நீதியமைச்சர் விஜயதாஸவை விமர்சித்து, இந்த யோசனை சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த யோசனை தொடர்பில், சுமார் இரண்டு மணி நேரம் கருத்தாடல்கள் இடம்பெற்றன. அந்தக் கருத்தாடல்களின் பின்னர், நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவும் கருத்துரைத்துள்ளார்.

"நான் எந்தவிதமான பிழையையும் செய்யவில்லை" என, அவர் தெரிவித்துள்ளார்.


இதேவேளை, ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுகள் தொடர்பிலான வழக்குகளைத் துரிதப்படுத்துவதற்கு, தன்னால் இயலக்கூடியவை எதுவுமில்லை என்று, நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாகவும் குற்றச்சாட்டுகள் எதனையும் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்றும் அவர் தெரிவித்ததாக, பிரதியமைச்சர் ஹர்ஷ டி சில்வா தன்னுடைய டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

இதேவேளை, அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் நிறைவடையும் முன்னர், அரசுடைமையாக்கப்படும் என்று தான் ஒருபோதும் கூறியதில்லை என்றும் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நிறைவேற்றுக்குழுக் கூட்டம் நிறைவடைந்ததன் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த, கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹாசீம், கூட்டு பொறுப்புக்களை மீறியோருக்கு எதிராக கடுமையான தீர்மானங்கள் எடுக்கப்படும் என்றார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டம் நாளை மறுதினம் 21ஆம்திகதியன்று கூடவிருக்கிறது. அந்த கூட்டத்தின் போது, இறுதித் தீர்மானம் எட்டப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இந்திய இராணுவ அதிகாரியின் கல்லறை மீண்டும் புனரமைப்பு



கல்வியங்காடு தெற்கு, பகுதியில் அமைந்திருந்த இந்திய இராணுவ அதிகாரியின் கல்லறையை இலங்கை இராணுவத்தினர் மீண்டும் புனரமைத்துள்ளனர்.

கடந்த 1987 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கோப்பாய் தெற்கு, இராஜவீதியில் உள்ள வெள்ள வாய்க்கால் பிராயடி பகுதிக்கு அண்மையில் அமைந்திருந்த இந்திய இராணுவ முகாமில் பொறுப்பதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் ஒருவர் அந்த கால பகுதியில் இடம்பெற்ற மோதலின் போது உயிரிழந்துள்ளார்.

அப்போது குறித்த பகுதியில் அவரின் நினைவாக கல்லறை அமைக்கப்பட்டுள்ளது. பின்னர் இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்தின் பின்னர் அந்த கல்லறை தற்போது வரை கவனிப்பாரற்று இருந்துள்ளது.

இந்த நிலையில் குறித்த இராணுவ அதிகாரியுடன் பணியாற்றிய இராணுவச் சிப்பாயாக இருந்த பி.எம். ஹரிஸ் தற்போது இந்திய இராணுவ படைகளின் தெற்கு தளபதியாக உள்ளார். அவருடைய வேண்டுகோளுக்கு இணங்க குறித்த கல்லறை புனரமைக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டுக்கு வருகை தரவுள்ள இந்திய இராணுவ தளபதி குறித்த கல்லறைக்கு சென்று அஞ்சலி செலுத்தவுள்ளார். அதற்கான ஆயத்தங்களை நேற்றைய தினம் இலங்கை இராணுவத்தினர் மேற்கொண்டிருந்தனர். (இ-9)

# இந்திய இராணுவத்தின் தென்பிராந்தியத் தளபதி இலங்கைக்குப் பயணம்

## கல்வியங்காட்டில் இன்று அஞ்சலி





(கொழும்பு)

இந்திய இராணுவத்தின் தென்பிராந்தியத் தளபதி லெப்.ஜெனரல் பி.எம்.ஹரிஸ், இலங்கைக்கான நான்கு நாட்கள் நல்லெண்ணப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். அவருடன் உயர் அதிகாரிகள் குழுவொன்றும் கொழும்பு வந்துள்ளது.

தென்பிராந்தியத் தலைமையக நடவடிக்கை தளபதி மேஜர் ஜெனரல் வி.கே.சிங், லெப். ஜெனரல் ஹரிசின் இராணுவ செயலர் கேணல் கௌசல் ஆகியோரும் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் காலை இலங்கை இராணுவத் தலைமையகத்துக்குச் சென்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இரண்டு நாடுகளின் இராணுவத்துக்கும் இடையிலான பயிற்சி ஒத்துழைப்புக்களை அதிகரிப்பது குறித்து இந்தப் பேச்சுக்களில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை இராணுவம் அண்மைய ஆண்டுகளில் நல்ல அனுபவங்களைப் பெற்றிருப்பதாகவும், இலங்கையின் கொமாண்டோக்கள், சிறப்புப்படையினரிடமும் பயிற்சி மையங்களிலும் கூடுதலான இந்திய இராணுவ அதிகாரிகளை அனுப்பி பயிற்றுவிக்க விரும்புவதாகவும் ஜெனரல் ஹரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவம் இயந்திர காலாட்படைப்பிரிவை உருவாக்கிய போது, இந்திய இராணுவத்தின் இயந்திர காலாட்படைப்பிரிவு வழங்கிய உதவிகளை இலங்கை இராணுவத் தளபதி இதன் போது, நன்றியுடன் நினைவு கூர்ந்துள்ளார்.

இந்திய இராணுவ அதிகாரிகள் குழு, இலங்கை பாதுகாப்புச் செயலர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், முப்படைகளின் தளபதிகள், கிழக்கு பிராந்திய கடற்படைத் தளபதி, யாழ். படைகளின் தளபதி ஆகியோரையும் சந்திக்கவுள்ளது.

இந்திய இராணுவத்தின் தென்பிராந்தியத் தளபதி ஜெனரல் ஹரிஸ் இன்று யாழ்ப்பாணத்துக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ள நிலையில், இராச வீதி, கல்வியங்காடு பகுதியில், விடுதலைப் புலிகளுடனான சண்டையில் உயிரிழந்த இந்தியப் படையினர் நினைவாக அமைக்கப்பட்ட நினைவிடத்தை இலங்கை படையினர் துப்புரவு செய்துள்ளனர்.

இங்கு லெப்.ஜெனரல் ஹரிஸ் அஞ்சலி செலுத்தவுள்ளார். (இ-7)

# இலங்கைக் கடற்படையின் தளபதியாக தமிழர் நியமனம்





இலங்கை கடற்படையின் 21ஆவது கடற்படைத் தளபதியாக வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தனது நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார்.


1982ஆம் ஆண்டு இலங்கை கடற்படையில் இணைந்த ட்ரவிஸ் சின்னையா, வீர விக்ரம விபூஷ, ரணவிக்ரம, ரணசூர மற்றும் உத்தம சேவா ஆகிய விருதுகளைப் பெற்ற கடற்படையின் சிரேஷ்ட அதிகாரியாவார்.

புதிய கடற்படைத் தளபதியின் சேவைக் காலம் இம்மாதம் 22ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும். இந்த நிகழ்வில் பாதுகாப்பு செயலாளர் கபில வைத்யரத்ன, ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியத் தொடர்

# மிட்சல் ஸ்ரார்க் இல்லாத ஆஸி அணி அறிவிப்பு




இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் பங்கேற்கும் அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. போல்க்னர், கிறிஸ்டியன் அணிக்கு திரும்பினர்.

இந்தியா வரவுள்ள அவுஸ்திரேலிய அணி, செப்., 17 முதல் ஒக்., 13 வரை, ஐந்து ஒருநாள் மற்றும் மூன்று 'இருபது-20' போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

முதலில் ஒரு நாள் தொடர் (செப்., 17) ஆரம்பமாகிறது. இதற்கான அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டது.

இதில் போல்க்னர், கிறிஸ்டியன் மீண்டும் வாய்ப்பு பெற்றனர். வலது கால் பாதத்தில் ஏற்பட்ட காயத்தில் இருந்து மீளாத வேகப் பந்து வீச்சாளர் மிட்சல் ஸ்ரார்க்கிற்கு அணியில் இடம் கிடைக்கவில்லை.

**ஒரு நாள் போட்டிக்கான அணி:**

ஸ்ரீவ் ஸ்மித் (அணித் தலைவர்), வோர்னர், அஸ்டன் ஏகார், ஹில்டன் கார்ட்ரைட், நேதன் குல்டர்-நைல், கம்மின்ஸ், போல்க்னர், ஆரோன் பின்ச், ஹேசல்வுட், டிராவிஸ் ஹெட், மக்ஸ்வெல், மார்கஸ் ஸ்டாய்னிஸ், மத்யூ வேட், அடம் ஷாம்பா.

**'இருபது-20' அணி**

ஸ்ரீவ் ஸ்மித் (அணித் தலைவர்), வோர்னர், பெஹ்றரன்டர்ப், கிறிஸ்டியன், நேதன் குல்டர்-நைல், கம்மின்ஸ், ஆரோன் பின்ச், டிராவிஸ் ஹெட், ஹென்ரிக்ஸ், மக்ஸ்வெல், ரிம் பெய்ன், ரிச்சர்ட்சன், அடம் ஷாம்பா.

சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடந்து வருகிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு 3-வது சுற்றில் ருமேனியா வீராங்கனை சிமோனா ஹாலப் 6-4, 6-3 என்ற நேர்செட் கணக்கில் லாத்வியா வீராங்கனை செவஸ்டோவாவை வீழ்த்தி கால் இறுதிக்கு முன்னேறினார். அவர் கால் இறுதியில் இங்கிலாந்து வீராங்கனை கோன்டாவுடன் மோதுகிறார்.




# தந்தையின் நீண்டநாள் கனவை நிறைவேற்றிய பாண்ட்யா









இந்திய கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான ஹர்திக் பாண்ட்யா தனது தந்தையின் நீண்ட நாள் கனவான சொகுசு காரை வாங்கிக் கொடுத்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான ஹர்திக் பாண்ட்யா இலங்கை சுற்றுப்பயணத்துக்கான இந்திய அணியில் இடம்பிடித்து விளையாடி வருகிறார். கடைசி டெஸ்ட் போட்டியில் அதிரடியாக சதம் அடித்த ஹர்திக் பாண்ட்யா தனது தந்தையின் நீண்ட நாள் கனவான சொகுசு காரை வாங்கிக் கொடுத்துள்ளார்.

தான் இலங்கையில் இருந்தாலும் தனது அப்பாவுக்கு உடனடியாக கார் கிடைக்க வேண்டும் என்று விரும்பிய ஹர்திக் பாண்ட்யா, தனது சகோதரர் குணால் பாண்ட்யாவுக்கு வீடியோ கால் செய்து, அதன் மூலம் தனது அப்பாவுடன் பேசி அவர் விருப்பப்படி சிவப்பு நிற காரை வாங்கி கொடுத்து இருக்கிறார். இதனை டுவிட்டரில் ஹர்திக் பாண்ட்யா பதிவு செய்துள்ளார்.

அதில், 'எனக்காக பல தியாகங்களை செய்த என்னுடைய அப்பாவுக்கு காரை கொடுத்து சந்தோஷப்படுத்த நினைத்தேன். அதனை இப்போது செய்துள்ளேன். எனது தந்தையின் முகத்தில் மகிழ்ச்சியை பார்த்தேன். அது எனக்கு எல்லையில்லா சந்தோஷத்தை அளித்தது' என்று குறிப்பிட்டுள்ளார்.

## மரண அறிவித்தல்



# கந்தையா வைரவநாதன்

முத்துலிங்கம் என அன்பாக அழைக்கப்படும் க.வைரவநாதன் 16.08.2017 புதன்கிழமை தனது பூதவுடலை விட்டு நீங்கினார்.

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் நா.வ.கந்தையா அன் சன்ஸ் உரிமையாளரும் (தற்காலிக தொழில் முகவரி 959, பருத்தித்துறை வீதி, திருநெல்வேலி கிழக்கு நல்லூர் யாழ்.)

காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் அன்னபூரணம், அன்னலட்சுமி, நாகம்மா, செல்வரத்தினம், அமிர்தலிங்கம், நாகரத்தினம், தியாகலிங்கம், ஜம்புலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.08.2017) ஞாயிற்றுக்கிழமை இல.19, சந்திரசேகரப்பிள்ளையார் கோவில் வீதி, நல்லூர் வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு பிற்பகல் 2 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.19, சந்திரசேகர பிள்ளையார் கோயில் வீதி, நல்லூர் வடக்கு

(172)

தகவல்: குடும்பத்தினர்

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை

### பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம், மாதகல்

## ஆதனப்பெயர் மாற்ற அறிவித்தல்

**வட்டாரம்:- 03**
**உத்தேச ஆதன இல:-205**
**வீதி:- கீரிமலை வீதி**
**கிராமசேவையாளர் பிரிவு:-J/154**

வட்டாரம் 03, கீரிமலை வீதி, உத்தேச ஆதன இல.205 இல் இவ் ஆதனம் அமைந்துள்ளது. உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் தென்மேற்குப் பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று சிறுவிளான் இறை "**கரலிக்காடு**" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 17 குளி 14.79 கொண்ட இவ்வாதனம் இளவாலை, மாரீசன்கூடலைச் சேர்ந்த சுப்ரமணியம் கைம்பெண் தில்லைநாயகி ஆகிய இவர்களால் கரவெட்டி தெற்கு, விக்னேஸ்வராக் கல்லூரி வீதி, இல.155ஐச் சேர்ந்த வேலுப்பிள்ளை முருகேசபிள்ளையும் பெண் உமாதேவியும் அவர்களுக்கு அறுதிஉறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு.பாலகிருஷ்ணன் பார்த்திபன் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 1008ம் இலக்க 2015.05.24ம் திகதிய அறுதிஉறுதி மூலம் தமக்குச் சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக (மாதகல்) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நிலஅளவையாளர் திரு.A கந்தசாமி அவர்களால் வரையப்பட்ட 2015/178ம் இலக்க 18.05.2015ம் திகதிய நில அளவைப் படத்தின் Lot 01இன் பிரகாரம் இவ்வாதனமானது "**கரலிக்காடு**" நிலப்பரப்பு 17 குளி 14.79 கொண்ட குறித்த ஆதனத்தின் ஆரம்ப உறுதி வெளிப்படுத்தலாக காணப்படுவதால் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது வேலுப்பிள்ளை முருகேசபிள்ளையும் பெண் உமாதேவியும் எனும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத் தருகின்றேன்.




செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்குக் காவடி எடுக்கும் அடியவர்களுக்கு யாழ். மாநகரசபை விசேட அறிவித்தல்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டுதூக்குக்காவடி நேர்த்திக் கடன் செய்யும் அடியார்கள் தேர், தீர்த்த உற்சவத்தின் போது இம் முறை நல்லூர் கோவில் வடக்கு வீதியூடாக (சங்கிலியன் வீதியூடாக கோவில் வீதி வடக்குப் பக்கமாக) துர்க்கா மணி மண்டபத்தை அடைந்து வடக்கு வீதியில் குபேர கோபுர வாசலை அடைந்து அங்கு நேர்த்தியை முடிவுறுத்தும் படியும் பின்னர் தூக்குக் காவடியுடன் வந்த வாகனம் நல்லூர் தெற்கு வீதியூடாக (கைலாசப் பிள்ளையார் கோவிலடி பக்கம்) வெளியேறும் படியும் அத்துடன் சுவாமி வெளிவீதி உலா வந்து இருப்பிடத்தை அடையும் வரை குறித்த நேரத்தை கருத்திற் கொண்டு தூக்குக் காவடி நேர்த்தி செய்யும் அடியார் கள் உள்வருமாறும் கோவில் நிர்வாகத்தினர் கேட்டுக் கொள்கின்றனர் என யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ. வாகீசன் அறிவித்துள்ளார். (இ)



நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனத்தின் நேற்று முன்தினம் தங்கரதத்தில் கந்தன் வெளியுலாவரும் காட்சி

# தமிழ்த்தின விழா இன்று

புன்னாலைக் கட்டுவன் தெற்கு கணேச முன்பள்ளியின் தமிழ்த் தினவிழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கணேச முன்பள்ளி முன்றலில் கணேச சனசமூக நிலையத் தலைவர் தா. பாலசுப்பிரமணியம் தலைமையில் இடம் பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சங்கரப் பிள்ளை கிருபானந்தன், கௌரவ விருந்தினர்களாக திருமதி. கோமதி தவராசா, திருமதி ஞானேஸ்வரி அருந்தவநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-3)

# திருச்சொரூப பவனி

இளவாலை சேந்தாங்குளம் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இன்று மாலை 5 மணிக்கு திருச்செபமாலை வழிபாடும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு பங்குத் தந்தை பிறையன் தலைமையில் திருவிழா திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு தொடர்ந்து தூய அந் தோனியார் திருச்சொரூபபவனியும் இடம்பெறும்.(இ-10-104)

# 'இந்து சாதனம்' வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை வெளியிடும் இந்து சாதனம் பத்திரிகை சில பல காரணங்களால் சில காலங்கள் வெளிவராது நின்று போயிருந்தது. இப் பத்திரிகை மீண்டும் வெளிவர சைவ பரிபாலன சபையினர் ஆவன செய்துள்ளனர்.

இந்து சாதனம் பத்திரிகையின் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் சைவ பரிபாலன சபை யாரின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் (66, கல்லூரி வீதி, நீராவியடி) நடைபெறும். (இ)

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் உதவி தேவைப்படும் கலைஞர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தென்மராட்சிப் பிரதேச செயலகப் பரிவுக்கு ட்பட்ட வருமானம் குறைந்த அரச ஓய்வூதிய சம்பளம் அல்லது அரசாங்கத்தால் வழங்கப்படும் ஏனைய எந்தவிதமான உதவிகளையும் பெறாத (அங்கவீனமுற்ற நபர்களுக்கான பணியகத்திலிரு ந்தோ, சமூக சேவைகள் திணைக்களம் மூலம் முதியோர் செயலகத்திலிருந்தோ சமுர்த்தி அமைச்சிலிருந்தோ உதவி பெறாதவராயிருத்தல் வேண்டும்) வயது 55-77ற்கு இடைப்பட்ட கலைஞர்கள் (அங்கவீனமுற்ற கலைஞர் களுக்கு வயதெல்லை இல்லை) ஆவணி 28ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங் களை சமர்ப்பிக்கவும். மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப் பப்படிவங்களை தென்மராட்சிப் பிரதேச செயலக கலாசார கிளையில் பெற்றுக் கொள்ளலாம் என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

# களிமண் சிற்ப ஓராண்டு பயிற்சி இரண்டாவது பிரிவு விரைவில் ஆரம்பம்

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் இல. 15, நக்கா வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஓவியக்கூடத்தில் கடந்த ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்ட களிமண் சிற்ப ஓராண்டு பயிற்சி நெறியின் இரண்டாவது பிரிவு எதிர்வரும் செம்டெம்பர் மாதத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இதனை நடத்துவதற்காக கொழும்பிலிருந்து கட்புல, ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு கற்கைநெறியின் பீடாதிபதி பேராசிரியர் சரத் சந்திர ஜீவா தலைமையிலான குழுவினர் வருகைதரவுள்ளனர்.

இப்பயிற்சியில் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படவுள்ளதால் இதில் இணைந்து கொள்ள ஆர்வமுடைய மாணவர்கள் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக தமது பதிவுகளை இல 128, டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியில் மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

கடந்த ஆண்டில் இப் பயிற்சி நெறியில் இணைந்து கொண்ட 19 மாணவர்கள் முழுமையாகப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து சான்றிதழ்களைப் பெற்று வெளியேறியமையும் இவர்களின் கைவண்ணத்தில் உருவான சிற்பக்கண்காட்சி கடந்த மே மாதத்தில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-3)


ஈரவிழிகளுடன் 5ஆம் ஆண்டில்

அமரர். உயர்திரு

சின்னத்தம்பி செல்லத்துரை (சாத்திரியார்)



வையத்துள்

1943 - 07 - 12

தெய்வத்துள்

2012 - 09 - 13

திதி: ஆவணி திரயோதசி தேய்பிறை

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

இல.45/2, விசுவமடு. (சி-9367) பாசமுடன் குடும்பத்தினர்.


# இசை அர்ச்சனை

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு மிருதங்க வித்துவான் பிரம்மஸ்ரீ க. சுவாமிநாதன்சர்மாவின் இசை அர்ச்சனை-பக்தி இசை இன்று சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இடம்பெறும். (இ-3)

# 'பாரம்பரியத்தைத் தேடி' விழிப்புணர்வுக் கருத்தரங்கு

தென்மராட்சி பிரதேச கலாசார அதிகார சபையின் ஏற்பாட்டில் "பாரம்பரியத்தைத் தேடி" என்னும் தொனிப் பொருளில் மரபுரிமை களை பேணல் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை மு.ப 10 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை தென்மராட்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

இக்கருத்தமர்வில் கலாசார அதிகார சபை உறுப்பினர்கள், மாணவர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் அழைப்பு விடுத்துள்ளார். (இ-89)

# இராசி பலன்

19.08.2017
(ஆவணி 03, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
துவாதசி காலை 6.42 மணிவரை
திரயோதசி பின்னிரவு 4.31 மணிவரை
புனர்பூசம் முன்னிரவு 7.33 மணிவரை
சுபநேரம் 3.05 - 4.35 மணிவரை
இராகுகாலம் 9.05- 10.35 மணிவரை
நல்லைக்கந்தன் சப்பறம்
பிரதோஷ விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்.<br>கேட்டை, மூலம்<br>மதியம் 1.42 மணிக்கு<br>கடக-சந் | | ராகு, புத, செவ் |
| கேது | | | சூரி, சுக் |
| | சனி | | குரு |

**மேடம்** சிந்தனை ஆற்றலால் சிறப் படைவீர்கள், பெற்றோரின் ஆதரவால் பெருமை கூடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**இடபம்** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மிதுனம்** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கடகம்** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், கொடுத்த வாக்கை காப்பாற்ற அதிக பிராயாசை காட்டும் நிலை ஏற்படலாம்

**சிம்மம்** மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கலாம், சுபகாரியங்களை காலைபொழுதே நிறைவேற்றுவது வெற்றி தரும், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**கன்னி** யோகமான நாள் செல்வநிலை உயரும் வாய்ப்புண்டு, விரதங்களில் நம்பிக்கை கூடும், பயணங்களால் பலனுண்டு, சகோதர வழியில் நன்மையுண்டு.

**துலாம்** பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு, தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.

**விருச்சிகம்** தடைப்பட்ட காரியத்தில் மதியத்திற்கு பின்னர் முன்னேற்றம் ஏற்படலாம், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காணும் நாள், ஆன்றோர் சந்திப்புண்டு.

**தனுசு** காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்புமாக அமையும் தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம், குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம்

**மகரம்** நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்ப தற்கான வாய்ப்புண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கும்பம்** கடன் பிரச்சினையை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், மறைமுக போட்டிகள் மாறும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், ஆரோக்கியமான நாள்.

**மீனம்** பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை காட்டு வீர்கள் தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், பெரிய மனிதர்களின் தொடர் புகள் அனுகூலம் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 மில்லியன் ரூபாய் செலவில் வரணி பிரதேச வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு அமைப்பு

(யாழ்ப்பாணம்)

வரணி பிரதேச வைத்திய சாலையில் புதிதாக நிர்மா ணிக்கப்பட்டு வரும் வெளி நோயாளர் பிரிவுக் கட்டடத் தின் இரண்டாம் கட்ட வேலை கள் நிறைவுறும் தறுவாயில் உள்ளன. சுகாதாரத் திணைக் களத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் 25 மில்லியன் ரூபாய் செலவில் கட்டட வேலைகள் நடைபெற்று வருகின்றன. 2014 ஆம் ஆண்டு தொடக் கம் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் இந்த வைத்திய சாலையில் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. முன்பக்க மதில் , சுற்றி மதில் , அம்புல ன்ஸ் தரிப்பிடம், அம்புலன்ஸ் சாரதியின் விடுதி, சைக்கிள் பாதுகாப்பு நிலையம், காணிக் கொள்வனவு, மகப்பேற்று விடுதி புனரமைப்பு , புதிய பற் சிகிச்சை நிலையம், புதிய வெளிநோயாளர் பிரிவுக் கட்டடம் போன்ற திட்டங்கள் பல்வேறு தரப்பினரின் ஒத்த துழைப்புடன் நிறைவேற்றப் பட்டுள்ளன.

இவ்வாறான வேலைத் திட்டங்களுக்கு சுகாதாரத் திணைக்களம், நோயாளர் நலன் புரிச்சங்கம் , வரணி பிரதேச வாழ் மக்கள், புலம் பெயர் நாடுகளில் தற்போது வாழ்கின்ற நன்கொடையா ளர்கள், வேல்ட்விசன் நிறு வனம், பாராளுமன்ற உறுப் பினர்கள். மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும் பங்களித்துள்ளமை குறிப் பித்தக்கது. இவ் வேலைத் திட்டங்கள் சிறப்பாக நடை பெறுவதற்கு நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் பங்கு அளப்பரியது. வருடா வருடம் பொதுச் சபைக் கூட்டத்தில். பொதுச் சபை அங்கத்தவர் களால் நிர்வாக சபை தெரிவு செய்யப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டிற்குரிய புதிய நிர்வாக சபைத் தெரிவையும் ஆண்டுப் பொதுக் கூட்டத் தையும் புதிய வெளி நோயா ளர் பிரிவுக் கட்டடத் திறப்பு விழாவின் பின்னர் நடத்து வது என 15.07.2017 ஆம் திகதி நடைபெற்ற நலன்புரிச் சங்க நிர்வாக சபைக் கூட் டத்தில் ஏகமனதாகத் தீர்மா னிக்கப்பட்டுள்ளதாக வைத் தியசாலை வட்டாரங்கள் சுட் டிக் காட்டியுள்ளன. (இ)

## பொதுக்கூட்டமும் உறுப்பினர் தெரிவும்

யாழ். மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரின் 2017 ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டமும் புதிய உறு ப்பினர்கள் தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலய வளாகத்தில் நடைபெறும். (இ-10-102)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கந்தர்மடம் ஆத்தி சூடி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய அலங்கார உற்சவம் இன்று 19 ஆம் திகதி சனிக் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 14 நாட்கள் நடைபெறும். (இ)




## பயணிகளின் பாதுகாப்பில் கவனம் செலுத்துவார்களா?



மோட்டார் சைக்கிள்கள் , துவிச் சக்கர வண்டிகளில் பயணிப்போர் இதனால் அதி களவில் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மானிப்பாய் வீதியில் ஆனைக்கோட்டைப் பகுதி யில் குவிக்கப்பட்டுள்ள கற் களால் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பூபதி வெதுப்பகத்திற்கு முன்பாக வீதியின் மருங்கில் போடப்பட்ட கற்கள் நாளுக்கு நாள் சிதறுண்டு பயணிக்க முடியாத நிலையை ஏற்ப டுத்தியுள்ளது.

சிலர் சிறு விபத்துக்க ளையும் எதிர்கொள்ள வேண் டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி விரைந்து நடவ டிக்கையில் இறங்க வேண் டுமென பயணிகள் கோரி க்கை விடுத்துள்ளனர். (இ)





கரவெட்டி புனித தேவமாதா ஆலய வருடாந்த திருவிழா அண்மையில் இடம் பெற்றது......

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்




யாழ்.மயிலிட்டி கலைமகள் வித்தியாலய பாடசாலை மாணவர்களுக்கு இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ்.கிளை யினால் ஜேர்மன் நாட்டு ஜெயாரவி குழுவின் நிதி அனுசர ணையுடன் அண்மையில் கற்றல் உபகரணங்களும் பாதணிகளும் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் யாழ். கிளையின் தலைவர் கு.பாலகிருஸ்ணன் மற்றும் தெல்லிப் பழை பிரிவு தலைவர் நாகேஸ்வரன் மற்றும் யாழ். கிளையின் உபதலைவர் ரவிச்சந்திரன் ஆகியோருடன் நிறைவேற்று உத்தியோகத்தர் பிரகாஸும் கலந்து கொண்டார். (இ-3)

# புதிய கடன் திட்டங்கள் மக்களின் கஷ்ட நிலையை ஓரளவு போக்கும்-டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

நிதி அமைச்சர் மங்கள சமரவீர அறிவித்துள்ள புதிய கடன் திட்டங்கள் இந்த நாட் டில் தற்போது பல்வேறு இடர் களுக்கு முகங்கொடுத்து வருகின்ற மக்களின் பொரு ளாதார நிலையை மேம் படுத்துவதற்கான வாழ்வா தார வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு ஓரளவு கை கொடுக்கும் என யாழ். மாவ ட்ட நாடாளுமன்ற உறுப் பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சு வெளி யிட்டுள்ள வரிகள் குறைப்பு, வரி நீக்கம் மற்றும் கடன் திட்டங்கள் குறித்து கருத்து வெளியிட்டுள்ள டக்ளஸ் தேவானந்தா , வடக்கு மாகா ணம் அடங்கலாக நாட்டில் அண்மைக்காலமாக பல மாகாணங்கள் கடும் வரட்சி க்கு முகங்கொடுத்து வரும் நிலையில், பாதிக்கப்பட டுள்ள விவசாய மக்களுக்கு நட்ட ஈடுகள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக் கையை அர சாங்கத்திடம் முன்வைத்துள்ளோம்.

அதே நேரம், விவசாய மக்களுக் கென தற்போது அறிமுகஞ் செய்யப்படவி ருக்கும் 5 இலட்சம் ரூபா கடன் திட்ட மானது எமது விவசாய மக்க ளுக்கு ஒரு வரப்பிரசா தமாகும்.

அதேபோன்று வீட்டுக் கடன், சூரிய கல கடன், பாடசாலை வாகனங்களுக் கான கடன், தொழில் முயற் சிகளுக்கான கடன், ஊடக வியலாளர்களுக்கான கடன் போன்ற திட்டங்களும் எமது மக்களுக்கு மிகவும் பயனுள் ளவை.

மேற்படி கடன் தொகை களின் வட்டியில் அதிக விகி தத்தை அரசாங்கம் பொறுப் பேற்றிருப்பதும் பாராட்டத் தக்கதொரு ஏற்பாடாகும்.

அதே நேரம், எமது மக்க ளின் அன்றாட, அத்தியா வசிய உணவுப் பொருட்கள் உள்ளிட்ட பொருட்கள் மற் றும் சேவைகளினதும் செலவி னங்களை குறைப்பதற்கும் ஏற்பாடுகள் தேவையாக வுள்ளன.

இதனையும் இந்த அரசு அவதானத்தில்கொள்ள வேண் டும் என டக்ளஸ் தேவான ந்தா தெரிவித்திருப்பது குறிப பிடத்தக்கது. (இ-7)

## துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்



வட மாகாணசபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணம் தனது 2017 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் மூலம் யாழ்.திருக்குடும்ப கன்னியர்மட தேசிய பாடசாலையில் கல்வி கற்கும் எட்டு மாணவிகளுக்கு துவிச்சக்கர வண்டிகளை அண்மையில் பாடசாலையில் வைத்து வழங்கி வைத்தார்.





தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகம் தமிழ் இணையக் கல்விக் கழகத்துடன் இணைந்து நடத்திய பட்டமளிப்பு விழா அண்மையில் ஸ்ரீ ஐங்கரன் மணிமண்டபத்தில் தமிழ் இணையக் கல்விக் கழக வட மற்றும் மத்திய மாகாண இயக்குநர் இ.கோபிகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக தகைசார் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் பிரதம விருந்தினராகவும் ஜப்பான் காச்சுயின் [illegible] கலாநிதி திருமதி.மனோன்மணி சண்முகதாஸ் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு பட்டம் வழங்கி கௌரவித்தனர்.

## கஞ்சா விற்றவர் கைது

கஞ்சா விற்பனை செய் யும் நடவடிக்கையில் ஈடுபட் டிருந்த நபர் ஒருவர் கைது கைது செய்யப்பட்டதுடன் அவரிடமிருந்த இரண்டு கஞ் சாப் பைக்கட்டுக்களும் மீட் கப்பட்டதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் வியா ழக்கிழமை இரவு 7 மணியள வில் பருத்தித்துறை துறை முகப் பகுதியில் கஞ்சா விற் பனை செய்யப்படுவதாக பொலிஸ் புலனாய்வுப் பிரி வினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து அப்பகுதிக்கு சென்ற பொலி ஸார் திருகோணமலையைச் சேர்ந்த நபர் ஒருவரைக் கைது செய்ததுடன் இரண்டு கஞ்சா பைகளையும் பறி முதல் செய்தனர். (இ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணைமுறி மோசடியால் ட்ரில்லியன் கணக்கில் நட்டம்

## லக்ஸ்மன் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

மத்திய வங்கி பிணைமுறி மோசடியால் ட்ரில்லியனுக்கும் மேல் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ள தாக இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

மத்திய வங்கி பிணைமுறி மோசடியால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பில் நான் அச்சமின்றி கூறுவேன்.

இந்த நட்டம் பற்றி முன்னதாக கருத்து வெளியிட்ட போது எனக்கு கணக்கு தெரியாது என சிலர் கேலி செய்தனர். எனினும் எனக்கு நன்றாக கணக்குத் தெரியும் வங்கியில் ஏழு ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம் உண்டு.

2015-2016ஆம் ஆண்டுகளில் பெர்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனம் 25,000 மில்லியன் இலாபத்தை ஈட்டியுள்ளது. இதற்கு காரணம் வட்டி வீத அதிகரிப்பாகும்.

இந்த இலாபத்தினால் 30 ஆண்டுகளில் அரசாங்கத்திற்கு ட்ரில்லியன் ரூபா நட்டம் ஏற்படும் என்பது யாரா லும் புரிந்து கொள்ள முடியும் என அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)


## காணி விற்பனை

கச்சாய் கிளாலி றோட்டில் வன்னியர் கோயிலுக்கு அண்மையிலுள்ள 3 1/2 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
077 422 8705, 077 516 8856

## மணமகன் தேவை

நட்சத்திரம்- அனுஷம், பிறந்த திகதி - 12.03.1985, நேரம் -8.51 PM, தொழில் பட்டதாரி ஆசிரியை. அரசாங்கத் தொழில், கடை, தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது. சமயம்- இந்து கௌரவ குடும்பம். கிரகபாவம் - 64, 7 இல் செவ்வாய் உள்ளூர் விரும்பத்தக்கது.

(164) தொடர்புகளுக்கு:
077 088 6283

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 24 சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc/பொறியியலாளர்<br>தொ.இ: B/7623 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 49<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 151cm<br>தகைமை/தொழில்:HNDA/அரச தொழில்<br>தொ.இ: G/7633 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: பொறியியலாளர் லண்டன் NOT PR<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/7624 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்<br>தொ.இ: G/7635 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: B/7627 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: அழகுக்கலை நிபுணர்<br>தொ.இ: G/7638 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 41<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BCA<br>தொ.இ: B/7630 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 8<br>தகைமை/தொழில்:A/L/தாதி<br>தொ.இ: G/7643 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

UNIVERSITY OF CAMBRIDGE **ENGLISH COURSES @**

# Jaffna College - Undergraduate Department
## in Collaboration with British College of English

After G.C.E (A/L) எமது வகுப்புக்களில் இணைந்து வாழ்நாள் முழுவதும் பயன்படும் கல்வித் தகைமையை பெற்று பயனடையுங்கள்.

## IELTS

எமது கல்வி நிலையம் British Council இன் அங்கீகாரம் பெற்ற Registration Centre ஆகும்.

எம்மிடம் **IELTS** கல்வி கற்புவர்களுக்கு நாம் வழங்கும் விசேட சலுகைகள்.

இலவசமாக 2 நூல்கள் வழங்கப்படும்.
British Council இன் Library இல் சென்று நூல்களை வாசிக்க அனுமதி அட்டை
விரும்பிய நேரம் Listening வந்து செய்யக்கூடிய வசதிகள்.
எமது Advanced Spoken English வகுப்பில் சேர்ந்து படிக்க இலவச அனுமதி.

**OUR TARGET IS BAND : 9**

IELTS பாடங்களைப் படிப்பிக்கும் அதேவேளை Grammar and Vocabulary போன்றவற்றை புதியதோர் ஆங்கிலப் பாடநெறி மூலம் போதிக்கின்றோம்.
**Pearson English Course Level B2**
எனவே இரண்டு பாடநெறிகளையும் ஒரு கட்டணத்திலேயே நிறைவு செய்யலாம்.

யாழ்ப்பாணத்தில் IELTS நடைபெறும் திகதிகள் :
09.09.2017, 05.10.2017, 02.11.2017, 02.12.2017
நடைபெறும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்.

**வகுப்புக்கள் 23.08.2017 இல் ஆரம்பம்.**

**IELTS LIFE SKILLS A1, B1**

**COURSE SCHEDULE** Mon, Tues, Wed, Thus 60 Hours 8.30 - 11.00
Saturday & Sunday 60 Hours Time: 8.30 - 12.00

கடந்த காலங்களில் நடைபெற்ற A1, B1 பரீட்சைகளில் எமது நிறுவனத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் 100% சித்தியடைந்துள்ளனர் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். அடிப்படையில் இருந்து ஆங்கிலம் 2 மாதங்களில் பூரணமான அறிவைப் பெற்று பரீட்சையில் சித்தியடைய வைப்போம்.



எமது கல்வி நிலையம் தொடர்ச்சியாக ஏழு வருடங்கள் சிறந்த நிலையம் என British Council ஆல் Awards வழங்கி கௌரவிக்கப்பட்ட நிலையமாகும்.

- சுமார் 40 இலட்சம் மாணவர்கள் ஆண்டு தோறும் Cambridge பரீட்சைகளை எடுக்கின்றனர்.
- சுமார் 13000 பல்கலைக்கழகங்கள் Cambridge ஆங்கிலப் பரீட்சைகளை தமது அனுமதிக்காக ஏற்றுக்கொள்கின்றன.
- 40000 கல்லூரிகளும் நிறுவனங்களும் மாணவர்களை Cambridge பரீட்சைக்காக ஆயத்தப்படுத்துகின்றனர்.

**Cambridge** ன் மூன்று பாடநெறிகள் 23.09.2017 ல் ஆரம்பிக்கின்றோம்

### Cambridge - Prelimnary English Test (PET)

* இது ஓர் Intermediate B1. Level பரீட்சையாகும். U.K இல் பல கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் இதனை பல்கலைக்கழக அனுமதிக்காக ஏற்றுக்கொள்கின்றன.
* நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானால், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாடநெறியைப் பின்பற்றி பின் IELTS வகுப்பில் கற்க இலகுவாக இருக்கும்.

It covers all four language skills (Reading, Writing, Listening and Speaking) and knowledge of grammar and vocabulary.

**Exam Date : 01.12.2017**
**Centre - British Council Colombo.**

### FCE Cambridge First Certificate in English

FCE is an upper intermadiate level exam. It tests the ability to deal confidently with a range of written and spoken. communication. FCE is the most widely taken of the general English exam with over 250,000 candidates every year. This exam is at CEFR Level B2

இது ஒரு சர்வதேசப் பரீட்சையாகும் International Exam. 15000 ற்கு மேற்பட்ட கல்வி நிறுவனங்களும் Employers ம் FCE யை ஏற்றுக்கொள்கின்றன. உலகத்தின் எந்த ஒரு இடத்திலும் சிறந்த ஓர் வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள அதியுயர்ந்த தகுதியாகும். இது ஒரு வாழ்நாள் முதலீடு.

**Exam Date : 29.11.2017**
**Centre - British Council Colombo**

It covers all four skills Reading and Use of English, Writing, Listening - Speaking

### CAE Cambridge Advanced English - C1

**Who is the exam for?**
*Cambridge English: Advanced is typically taken by high achievers who want to:*
- follow an academic course at university level
- communicate effectively at managerial and professional level
- participate with confidence in workplace meetings or academic tutorials and seminars
- carry out complex and challenging research
- stand out and differentiate themselves.

**Who recognises the exam?**
Cambridge English: Advanced is accepted by more than 4,000 organisations, employers and governments around the world as being a reliable, accurate and fair test of English. This includes universities and colleges in the UK, USA, Canada, Australia, Europe and beyond.

வகுப்புக்கள் ஆரம்பம் 23.08.2017

Course Schedule: Monday, Tues, Wed, Thurs 11.00 - 1.00 pm | Sat & Sunday 3.00 pm - 6.00 pm

**Jaffna College - Undergraduate Department**
**No: 464, Hospital Road, Jaffna.** (C-9357)
**T.P: 021 222 3382, 021 222 0384, 077 880 3887**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியின் ஏ-9 வீதியில் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம்



கிளிநொச்சியின் ஏ-9 வீதியில் இரு புறங்களிலும் உள்ள வடிகான்களும் நேற்று டெங்கு ஒழிப்பு செயற்றிட்டத்தின் கீழ் சுத்தம் செய்யப்பட்டுள்ளன.

வட மாகாணத்தின் பல பகுதிகளிலும் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் கிளிநொச்சியின் நகர்ப்புறங்களில் டெங்கு ஒழிப்பு திட்டத்திற்காக வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை நேற்று நடைபெற்ற வடிகான்கள் சுத்தப்படுத்தலில் கிளிநொச்சி மாவட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொலிஸார் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (8)

# பொதுச்சிரமதானம்







கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினரால் கடந்த புதன்கிழமை பொதுச் சிரமதானப் பணி ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காலி மாவட்டத்திலிருந்து வந்த பெருமளவிலான இளைஞர்,யுவதிகள் இச்சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

நாட்டில் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தையும் சகிப்புத் தன்மையையும் சமாதானத்தையும் ஏற்படுத்தும் முகமாக இச்சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.மேலும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட இச்சிரமதானப் பணிகள் இன்றும் பொதுமக்கள் பங்களிப்புடன் 8 மணி தொடக்கம் 11 மணி வரை மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(8-277)

# சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்க நடவடிக்கை





வவுனியா, செட்டிகுளம், தட்டான்குளம் கிராமத்திற்கு நோயற்ற சுகவாழ்வு திட்டத்தின் கீழ் நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான நிர்மாணப் பணிகள் நேற்று முன்தினம் 17 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.இந்நிகழ்வு தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் மற்றும் நகர திட்டமிடல் நீர் வழங்கல் அமைச்சின் வவுனியா மாவட்ட நிலையப் பொறுப் பதிகாரி சி.சதீஸ்குமார் தலைமையில் நடைபெற்றது.

வவுனியா மாவட்டத்தில் அதிகளவிலான சிறுநீரக நோயாளர்கள் காணப்படும் இப்பகுதியில் நீண்ட காலமாக குடிநீர்ப் பிரச்சினைகளை எதிர்நோக்கி வந்த நிலையில் அம்மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்கும் முகமாக குறித்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், காதர்மஸ்தான்,செட்டிகுளம் பிரதேச செயலாளர் முகுந்தன், வவுனியா பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் பரமேஸ்வரன், கிராம மக்கள் பொது அமைப்புகள், பொலிஸார் ஆகியோர் கலந்து கொண்டனர். (8-250)




## வீதியை புனரமைத்துத் தாருங்கள்

### புலோப்பளை மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி புலோப்பளை கிராமத்தில் வடக்கு மாகாண சபையின் கீழ் காணப்படும் நான்கு கிலோ மீற்றர் வீதியானது கடந்த 10 வருடங்களாக புனர்நிர்மாணம் செய்யப்படாத நிலையில் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஏழு கிராம மக்கள் பயன்படுத்தும் இவ்வீதியால் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள் பெரிதும் சிரமப்படுவதாக அம்மக்கள் தெரிவிக்கின்றனர். (8-111)

# வாழ்வாதார உதவிகள்



வவுனியாவில் புளொட் அமைப்பின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் வவுனியா மாவட்ட இளைஞரணியின் சார்பான வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் 17 ஆம் திகதி புளொட் அமைப்பின் இளைஞரணியின் செயலாளர் சு.காண்டீபன் தலைமையில் வவுனியா பாலமோட்டை பகுதியில் ஒழுங்கமைக்கப்பட்டு மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கிவைக்கப்பட்டது.

இவ் வாழ்வாதார உதவியினை புளொட் அமைப்பின் லண்டன் கிளை இளைஞரணி உறுப்பினர் எ.முரளிதரனின் ஒழுங்கமைப்பில் அவரின் தந்தை அமரர் சுப்பிரமணியம் எதிர்வீரசிங்கம் ஐயா நினைவாக வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8-112)

# வயலின் சிறப்பு இசை நிகழ்வும் பயிற்சிப்பட்டறையும்









(குருமன்காடு)

வயலின் சிறப்பு இசை நிகழ்வும் பயிற்சிப் பட்டறையும் நேற்று முன்தினம் 17 ஆம் திகதி வியாழக்கிழமை வவுனியா, கந்தசாமி ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் இந்தியக் கலாசார உறவுகளுக்கான பேராயம், ஐ.சி.சி.ஆர். மற்றும் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து இந்நிகழ்வு மேற் கொள்ளப்பட்டது. இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல வயலின் இசைக் கலைஞர்களான மைசூர் கலாநிதி மஞ்சுநாத் மற்றும் நாகராஜ் சகோதரர்களின் வயலின் சிறப்பு இசை நிகழ்வும் பயிற்சிப்பட்டறையும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ். இந்தியத்தணைத்தூதுவர் ஆ. நடராஜ், வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஸ்குமார், வவுனியா தெற்கு வலய கல்விப்பணிப்பாளர் இ. இராதாகிருஷ்ணன், கோட்டக் கல்விப்பணிப்பாளர் எம். பி.நடராஜ், மாவட்ட செயலக கலாசார உத்தியோகத்தர் இ. நித்தியானந்தன், பிரதேச கலாசார உத்தியோகத்தர் வீ. பிரதீபன், வவுனியா அன்பக சிறுவர்கள், மாணவர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

வடமாகாணத்தில் இசை பயிலும் விஷேடமாக வயலின் பயிலும் மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படையினரின் கட்டுப்பாட்டு வளாகத்தில் நான்கு விடுதலைப்புலிகளின் தோணிகள்



முல்லைத்தீவு - முள்ளி வாய்க்கால் கடற்படையின ரின் கட்டுப்பாட்டு வளாகத் தில் 4 தோணிகள் மறைந்து வைக்கப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

சுமார் 30 அடி நீளமு டைய குறித்த தோணிகளை 2009ஆம் ஆண்டிற்கு முன் னர் விடுதலைப் புலிகளின் கடற் பிரிவினர் பயன்படுத் தியதாக கூறப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் காலத்தில் ஆழ்கடலில் மீன் பிடித் தொழிலை மேற்கொள் வதற்கு இலங்கைக் கடற் படையினர் தாக்குதல்களை மேற்கொண்டு தடை ஏற்படு த்தியுள்ளனர்.

இந்த நிலையில் விடுத லைப் புலிகளின் கடற்பிரி வின் உதவியுடன் குறித்த தோணிகளில் ஆழ்கடலுக்கு சென்று மீன்பிழத் தொழிலில் ஈடுபட்டு மீனவர்களுக்கு உத வியதாக அந்த பிரதேச மீன வர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், விடுதலைப் புலி களின் வணிகக் கப்பல்கள் ஆழ்கடலில் தரித்து நிற்கும் போது அதில் இருந்து வர்த்த கப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் குறித்த தோணிகளை பயன்படுத்தி யதாகவும் கூறப்படுகின்றது.

இதுபோன்ற தோணி களை யாழ்ப்பாணம் - கிளாலி கடலில் பொதுமக்கள் சேவைக்காக விடுதலைப் புலிகள் பயன்படுத்தியதாக வும், இதற்கு பரிபாசை பெய ராக "பாதை" என்று அவர்கள் அழைத்துள்ளதாகவும் தெரி விக்கப்படும் நிலையில் முள் ளிவாய்க்கால் மேற்கு பகுதி கடற்படை வளாகத்தில் 4 தோணிகள் மறைந்து வைக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. (8)

# 'வாழ்வு தந்த வாஸ்' வரலாற்று நாடகம் புதுக்குடியிருப்பில்

(முல்லைத்தீவு)

புனித ஜோசப் வாஸ் ஆண்டினை முன்னிட்டு திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்குகின்ற 'வாழ்வு தந்த வாஸ்' என் னும் வரலாற்று நாடகம் நாளை 20 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை மாலை 7.00 மணிக்கு முல்லைத்தீவு புதுக் குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலய முன்றலில் மேடை யேற்றப்படவுள்ளது.

இந்நாடகம் இதற்கு முன் பாக கடந்த ஜூன் மாதம் 25, 26 ஆம் திகதிகளில் யாழ்ப் பாணத்தில் மேடையேற்றப் பட்டு பலரது பாராட்டுக்களை யும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (8)

# உதவி வழங்கல்

ஜேர்மன் நாட்டில் வாழும் புலம் பெயர் தமிழரான கிருபாகரனின் நிதி அனுசர ணையில் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள மு/அமைதிபுரம் அ.த.க. பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மழைக் கவசங்களும் அப்பியாசக் கொப்பிகளும் வழங்கி வைக் கப்படவுள்ளன. இந் நிகழ்வு, இன்று சனிக்கிழமை பிற் பகல் 12.30 மணியளவில் பாடசாலை அதிபர் எஸ். வினோதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது, பாடசாலை யில் கல்வி பயிலும் மாண வர்கள் 61 பேருக்கு 30 ஆயிரம் ரூபா பெறுமதியில் மழைக் கவசங்களும் முன் னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 30 மாணவர்களுக்கு 10 ஆயி ரம் ரூபா பெறுமதியில் அப்பி யாசக் கொப்பிகளுமாக மொத்தம் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவிப் பொருட்கள் வழங்கி வைக் கப்படவுள் ளதாக வட்டு இந்து வாலிபர் சங்கத்தினர் தெரி வித்துள்ளனர். (8-15)

# விதைநெல் தேவை

கிளிநொச்சி மாவட்டத் தில் எதிர்வரும் காலபோக செய்கைக்கு ஒரு இலட்சத்து 75 ஆயிரத்து 500 புசல் விதை நெல் தேவையாக வுள்ளதாக மாவட்ட விவசா யப்பணிப்பாளர் தெரிவித்து ள்ளார்.

வடக்கின் பாரிய விவசாய மாவட்டங்களில் ஒன்றாகக் காணப்படும் கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ந்தும் நிலவி வந்த கடும் வரட்சி காரணமாக பயிர்ச் செய்கை கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், விதை நெல்லுக்கான தட்டுப் பாடும் ஏற்பட்டுள்ளது. (8)

# ஊற்றுப்புலம் ஒடுக்கு பாலத்தின் புனரமைப்புப் பணி மீள ஆரம்பம்



(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள ஊற் றுப்புலம் ஒடுக்குப் பாலம் 90 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படுகிறது என வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் தெரிவித்துள்ள னர்.

33 மீற்றர் நீளமும், 4.2 மீற்றர் அகலமுடைய குறித்த பாலத்தின் கொங்கிறீட் பணி களுக்கு 35 மில்லியன் ரூபா வும் இரும்புப் பாலத்திற்கு 55 மில்லியன் ரூபாவும் ஒதுக்க ப்பட்டுள்ளது.

குறித்த ஊற்றுப்புலம் ஒடுக்கு பாலம் ஆயிரம் பாலம் திட்டத்திற்கு கீழ் கொண்டு வரப்பட்டதோ, அல்லது தற் போது ஆரம்பிக்கப்பட்ட புதிய திட்டமோ அல்ல. கடந்த சில வருடங்களுக்கு முன் ஐக் கிய இராச்சியத்தின் நிதியுத வியுடன் முன்னைய அரசின் காலத்தில் குறித்த பாலம் அமைக்கும் பணி ஆரம்பிக் கப்பட்டு, தற்போது முன் னெடுக்கப்பட்டு வருகிறது.

இடையில் ஏற்பட்ட பருவ மழை காரணமாக எட்டு மாதங்களாக கட்டுமானப் பணிகள் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் தற்போது மீண் டும் முன்னெடுக்கப்படுகிறது. எதிர்வரும் ஒக்டோபர் மாதம் பணிகள் முழுமையாக நிறைவுபெறவுள்ளது என வீதி அபிவிருத்தி அதிகார சபை ...

# மீள் கேள்வி அறிவித்தல்-2017
## கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள 2017 ஆம் ஆண்டு குத்தகைக்கு விடப்பட்டு சபையால் மீளப்பொறுப்பேற்கப்பட்ட சந்தைகள், இறைச்சிக் கடைகள் உள்ளிட்ட குத்தகை நிலையங்களை 2017.09.01 - 2017.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட மீள்கேள்விகள் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

| விண்ணப்பப்படிவம் விநியோகிக்கப் படும் திகதி. நேரம் | கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி. நேரம் | கேள்வி திறக்கப்படும் திகதியும்.. நேரமும். |
|---|---|---|
| திகதி : 2017.08.19 ம் திகதி முதல் 2017.08.24ம் திகதி வரை. அலுவலக நாட்களில் மட்டும்<br>நேரம் : மு.ப.8.30 – பி.ப.3.00<br>இடம் : கரைச்சி பிரதேச சபை தலைமை அலுவலகம் | திகதி : 2017.08.25ம் திகதி. வெள்ளிக்கிழமை<br>நேரம் ; மு.ப.10.00 மணி | திகதி : 2017.08.25ம் திகதி. வெள்ளிக்கிழமை<br>நேரம் : மு.ப.11.00 மணி<br>இடம்: கரைச்சி பிரதேச சபை மாநாட்டு மண்டபம். |

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை செயலாளர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி என முகவரியிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்பட்டு 2017.08.24ம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படவேண்டும்.

இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என்ற முகவரியிட்டு குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விகள் யாவும் 2017.08.25 ம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப.11.00 மணிக்கு கரைச்சிப் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் கேள்விச் சபையின் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விச் சபையின் முடிவே இறுதி முடிவாகும்.

| இல | குத்தகை நிலையம் | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம்(NBT நீங்கலாக. மீளளிக்கப்பட முடியாதது) | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | தருமபுரம் சந்தைத் தொகுதி | 10,000.00 | 1.000.00 | 74,680.74 |
| 02 | தருமபுரம் மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1.000.00 | 156,333.33 |
| 03 | பரந்தன் மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1.000.00 | 468,333.33 |
| 04 | அக்கராயன் மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1.000.00 | 100,000.00 |
| 05 | ஸ்கந்தபுரம் மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 108,366.66 |
| 06 | தருமபுரம் கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1.000.00 | 36,000.00 |

நிபந்தனைகள்.

1.உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.

2.கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளை செலுத்த தவறியவர்களும் கறுப்புப்பட்டியலில் உள்ளவர்களும் குத்தகைக் கேள்விகளில் பங்குபற்றத் தகுதியற்றவர்கள்.

3.கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ, நிராகரிப்பதற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு.

4.கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ள வரும் போது தம் ஆளடையாளத்தை உறுதிப் படுத்தும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணத்தின் நிழற்பிரதியினை (தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப்பத்திரம்) கிராம சேவையாளர் மூலம் உண்மைப்பிரதி என சான்றுறுதிப்படுத்தி சமர்ப்பிப்பதுடன், கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழையும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

5.கேள்வி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும்போது சபையால் வழங்கப்பட்ட கேள்விப்படிவம், கடித உறை என்பவற்றை மட்டுமே பயன்படுத்த முடியும்.

6.சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் நான்கில் ஒரு பகுதித் தொகையினை உடனடியாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும். குறித்த கேள்விதாரர் ஒப்பந்தத்திற்கு அமைவாக குத்தகை நிலையத்தை நடத்தினால் குறித்த வைப்புத்தொகை மார்கழி மாத குத்தகைப் பணமாக மாற்றம் செய்யப்படும்.

7.இறைச்சிக்கடைகள் மற்றும் சந்தைகள், குத்தகை நிலையங்கள் அனைத்தும் குத்தகைக்கு எடுப்பவராலேயே நடத்தப்படல் வேண்டும். குத்தகைதாரர் தவிர்ந்த வேறு ஒருவரால் குத்தகை நிலையம் நடத்தப்படின் உடனடியாக ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படுவதுடன் வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

8.மாதாந்த குத்தகை கட்டணங்களை அம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவது கட்டாயமானதாகும். அக் கட்டணங்களில் எவற்றையாவது குறித்த கால எல்லைக்குள் கட்டத்தவறி அதன்பின் பத்து நாட்களுக்கு உட்பட்டு செலுத்தும் பட்சத்தில் கட்டுப்பணத்துடன் 10% தண்டப்பணத்தையும், காலதாமதம் பத்து நாட்களுக்கு மேற்படும் பட்சத்தில் 15% தண்டப்பணத்தையும் சேர்த்து செலுத்துதல் வேண்டும்.

9.தொடர்ச்சியாக இரு மாதங்கள் குத்தகைக் கட்டணத்தை செலுத்தத் தவறும் பட்சத்தில் எதுவித முன்னறிவித்தலுமின்றி குத்தகை நிலையம் சபையால் பொறுப்பேற்கப்படும்.

10.இறைச்சிக்கடையினை குத்தகைக்கு எடுத்தவர் வெட்டப்பட்ட மாட்டிறைச்சியை பிரதேச சபை எல்லைக்கு அப்பால் எக்காரணம் கொண்டும் கொண்டுசெல்ல அனுமதிக் கப்படமாட்டாது.

11.தராசுக்கொட்டகைக்கான வரி அறவீட்டினை மேற்கொள்ளும்போது தற்போது பாவனையிலுள்ளவாறு 3% வரியினையே அறவிட முடியும். வரி வீதங்களின் அதிகரிப்பையோ, குறைப்பையோ சபையின் அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.


12.ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களினதும், கேள்விப் பத்திரத்தை சபைக்கு சமர்ப்பிக்காதவர்களினதும் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

13.இந் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக தெரிவுசெய்யப்பட்ட குத்தகைதாரர் சபையுடன் செய்துகொள்ளும் குத்தகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டிய பொறுப்புடையவராகிறார்.

(C-9372)

கணேசன் கம்ஸநாதன்.
செயலாளரும் கேள்விச் சபைத் தலைவரும்.
கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனத்தின் பழனியாண்டவர் உற்சவம் நேற்றுக்காலை இடம்பெற்ற போது...

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—126

## இயற்கையென்னும் பொக்கிஷம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

இயற்கையை தாய்மைக்கு ஒப்பிடுகின்றோம். ஏனெனில் அள்ள அள்ள குறையாததை தருபவள் தாய் தானே. அந்த அன்புக்கு நிகரேது? இயற்கையை அழித்து மாற்றி செயற்கையுலகில் சஞ்சரிக்கப் பார்க்கின்றோம். இயற்கையின் மகிமைமையை உணராதவர்கள் எவருளர்? ஆனாலும் எமக்குத் தெரிந்ததெல்லாம் சிறியளவு மட்டுமே. தேடத் தேட புதிது புதிதாக வந்து கெண்டேயிருக்கும் இந்த அதிசயத்தை எத்தனைபேர் அறிந்துளர்? அந்த மகிமையில் ஒன்றினைப்பற்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய உயிரியல் துறையின் இறுதியாண்டு சிறப்பு மாணவி கோபிநந்தா சேதுகாவலர் செய்த ஆய்வு குறிப்பாக இயற்கையில் காணப்படும் உயிரியல் கட்டுப்பாடு பற்றி ஆய் இரசாயனங்களுக்கு பதிலாக மாற்று வழிகளை பரிந்துரைக்க தலைப்பட்டுள்ளோம். அந்த வகையில் மாற்று வழிகளை எங்கு தேடுவோம் என்பதற்கு பதிலாக என்னிடம் வாருங்கள் அத்தனையுமிருக்கின்றது என இயற்கைத் தாயவள்



அதுகூட அதிசயம் தான். ஆனாலும் இந்த வரட்சியில் உஷ்ணத்தில் பூஞ்சணங்களின் வளர்ச்சி, பெருக்கம் என்பன மிகவும் கேள்விக் குறியானதாகும். இந்த உஷ்ணத்தில் சிற்றுண்ணிகளின் தாக்கம் வழக்கமாகவே அதிகமாக இருக்கும். வளிமண்டல வெப்பநிலை கூடக்கூட சிற்றுண்ணி அதனது வாழ்க்கை வட்டத்தை குறுக்கிக் செய்திருந்தமையையும் காண முடிந்தது. இவ்வாறான நன்மை தரும் பூஞ்சணங்களை நாம் கண்டுபிடித்து அவற்றின் தொழிற்பாடுகளை அவதானமாக அவதானித்தால் அவை தொழிற்படும் விதம் மூலம் அவற்றினை நாம் பிரித்தெடுத்து செயற்கையாக தயாரித்து சிற்றுண்ணி பீடைகளைக் கட்டுப்படுத்த பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த கண்டுபிடிப்பு மிக முக்கியமானது. ஒன்று கடும் வரட்சியிலிருந்த பிரதேசத்தில் குறிப்பிட்ட மழைக்குப் பிறகு வளர்ந்திருந்த பூஞ்சணத்தின் வலிமையைப் பற்றி இன்னும் விபரிக்க வேண்டும். அதைப்பற்றி இன்னொரு இடத்தில் விளக்கமாகப் பார்ப்போம்.

இங்கே அவதானிக்க வேண்டியது என்னவெனில், மழைபெய்ந்ததும் அந்த ஈரப்பதனையும் குறைந்த வெப்பநிலையையும் பயன்படுத்தி வளியிலுள்ள இரைபோபஸ் என்னும் பூஞ்சணம் சிற்றுண்ணியில் இயற்கையாகவே தொற்றுதலை ஏற்படுத்தி விரைவாக வளர்ந்து



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

விளைவிக்கும் இரு புள்ளிகள் கொண்ட சிற்றுண்ணி பற்றியும் சேதத்தின் தன்மை பற்றியும் இன்னும் குறிப்பிட்ட பூஞ்சணத்தைப் பற்றியும் விரிவான

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 142

ந்து விளக்கியிருக்கின்றது. எந்த ஆய்வினதும் முடிவுகள் வெறுமனே ஆய்வறிக்கைகளுடன் மட்டுப்படுத்தப்படக்கூடாது என்னும் பிடிவாதமான கொள்கையின்பால் ஈர்க்கப்பட்டதன் முடிவாக அவர் செய்த ஆய்வினைப் பற்றி எமது மக்களும் படித்து அதனை நடைமுறையில் செய்து பார்த்து பயனுறவேண்டும். இன்னும் தொழிற்றுறை விருத்திக்கு வித்திட வேண்டும் என்பதன் அடிப்படையில் இந்த கட்டுரையினூடாக தரப்பட்டுள்ளது.

இலங்கைத் தீவினை நஞ்சற்ற தேசமாக மாற்றியே தீருவேன் என எங்களது நாட்டின் தலைவர் கங்கணம் கட்டியிருப்பது விவசாயத்தை நம்பியிருக்கும் அனைத்து விவசாயிகளுக்கும் நஞ்சினை தினந்தினம் மரக்கறி வகைகள் மற்றும் கனிகளுடன் மேலும் உணவுப் பொருட்களுடன் உட்கொள்ளும் மக்களுக்கும் நம்பிக்கையைத் தந்திருக்கின்றது. இதற்கு அனுசரணையாக எந்த நடவடிக்கைகள் நடைபெற்றாலும் அதனை நிச்சயமாக மக்கள் வரவேற்பார்கள். இவ்வாறான திட்டத்திற்கு நாமும் அனுசரணையாக இருந்து நஞ்சாக பயன்படுத்தும் வேளாண் அறைகூவி அழைத்திருந்தாள். அவள் சொல்லில் நம்பிக்கை கொண்டோம். கிடைத்தது பொக்கிஷம் தான். கேளுங்கள் கொடுக்கப்படும் தட்டுங்கள் திறக்கும் என்பதன் அர்த்தம் இங்கே புரிந்தது. தேடுங்கள் அனைத்தும் கிடைக்கும் அதிலிருந்து என்னைப் புரிந்து கொள்வீர்கள் என்ற இயற்கை தாயவளின் அர்த்தம் இந்த ஆய்விலிருந்து புரிந்தது.

என்ன யோசிக்கின்றீர்கள்? அந்த பொக்கிஷத்தைப் பற்றித் தானே கேட்கின்றீர்கள். எங்களைப் பொறுத்தவரையில் அரும்பெரும் பொக்கிஷம். பீடைகளின் பிரச்சினைக்கு பீடைநாசினிகள் தான் தஞ்சம் என இருந்த எங்களுக்கும் இன்னும் பலருக்கும் அதைவிட மாற்று வழிகள் இருப்பதைப் பறைசாற்றியிருக்கின்றது இந்த ஆய்வு. இவ்வருடம் வரண்டு போன பூமி, உஷ்ணமான காலநிலை, வரட்சி தாண்டவமாடியிருக்கும் பிரதேசம். குடிநீருக்கு மக்களை அலைக்கழிக்க வைத்திருக்கின்றது இயற்றையின் சீற்றம். இயற்கையின் இந்த அகோர தாண்டவத்திலும் கூட ஆங்காங்கே மழை பெய்திருக்கின்றது. மழையென்றால் ஆங்காங்கே இடங்களைத் தெரிவு செய்து மழை பெய்திருக்கின்றது. கொண்டு பல்கிப் பெருகிவிடும். இந்த மாதிரியான இரு புள்ளிகள் கொண்ட சிற்றுண்ணி (Two spotted Mite – Oligonychus sp). கிளிறிசிடியாவில், வேம்பில், நித்தியகல்யாணியில், சிறுகுறிஞ்சாவில் இன்னும் முருக்கமர இலையில் தாக்கத்தை அதிகமாக ஏற்படுத்தியிருந்ததை அவதானிக்க முடிந்தது. மேமாதத்தில் திடீரென ஒரு மழை, சற்று ஓங்கியடித்த மழை என்று கூறலாம். மழை ஓய்ந்து இரண்டாம் நாள் கிளிறிசிடியாவில் அதிகமாக சேதத்தை ஏற்படுத்திய இரு புள்ளிகள் கொண்ட சிற்றுண்ணியில் குறிப்பிட்ட ஒருவகை பூஞ்சணம் (Rhizopus sp). இயற்கையாக வளர்ந்திருந்திருப்பதனை அவதானிக்க முடிந்தது. அனைத்து சிற்றுண்ணிகளும் இறந்த நிலையில் அந்த சிற்றுண்ணிகளின் மேல் இந்த பூஞ்சணம் வளர்ந்திருந்தது ஆச்சரியமாக இருந்தது. அனைத்து சிற்றுண்ணிகளும் இறப்பதற்கு இந்த பூஞ்சணத்தின் வளர்ச்சியே காரணமென ஆய்வின் முடிவில் கண்டுபிடிக்கப்பட்டது. இது இயற்கையாக வளர்ந்த பூஞ்சணம் சிற்றுண்ணிகளை முழுமையாக இறக்கச் செய்து அதில் பல்விதமான பூஞ்சண வித்திகளை உற்பத்தி அனைத்து சிற்றுண்ணிகளையும் அழித்தது தான் இந்த விசித்திரம். இயற்கையிலேயே மருந்திருக்கும் போது நாம் எங்கேயோ தேடி எதையோ பயன்படுத்தி இருந்த இயற்கைக் கட்டுப்பாட்டு பொறிமுறையையும் அழித்து விடுகின்றோம். இயற்கை பொறிமுறையை நாம் அழித்து விட்டு செயற்கை கட்டுப்பாடான பீடைநாசினியை பயன்படுத்தி பீடைகளைக் கட்டுப்படுத்த முயற்சிக்கின்றோம். அதில் பீடை கட்டுப்படுகின்றதோ இல்லையோ எமது சூழலை, குடிநீரை இன்னும் உணவுகளை நஞ்சாக்கி விடுகின்றோம். இந்த நஞ்சை நாம் உணவுடன் உட்கொள்ளுவதால் ஏற்படும் விளைவுகளைப் பற்றித்தான் அறிந்திருப்பீர்களே. சிறுநீரகக் கோளாறு இன்னும் இருதயக் கோளாறுகள் இவற்றுடன் புற்றுநோய் போன்றவற்றுக்கும் இந்த பீடைநாசினி மற்றும் அசேதன பசளைகளும் காரணமாகும்.

இயற்கையாக உள்ள உயிரியல் கட்டுப்பாட்டுப் பொறிமுறையை கண்டுபிடித்த கோபிநந்தா சேதுகாவலரின் ஆய்வுத்திறமை இந்த இடத்தில் பாராட்டப்பட்டு பதிவுசெய்யப்படவேண்டியதாகும். அவரது ஆய்வில் இந்த சேதத்தை ஆய்வுகள் அதனை தொடர்ந்தும் ஆய்வுக்குட்படுத்தி அதனை சிறந்த இயற்கை கட்டுப்பாட்டு பொறிமுறையாக எமது பீடைகளுக்கு பயன்படுத்த இன்னும் ஆய்வுகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறான இயற்கைப் பொறிமுறைகளை கண்டறிந்து அவற்றை ஊக்கப்படுத்துவதன் மூலமும் இன்னும் அவற்றை பாதுகாப்பதன் மூலமும் மேலும் பல பீடைகளைக் கட்டுப்படுத்துவது இலகுவானதாகும். இயற்கை வழி பீடைக்கட்டுப்பாடு என்பதனால் விரைந்து நாம் பயன்படுத்துவதற்கான வழி வகைகளைக் கண்டாக வேண்டும். இந்த பொறிமுறையை தொழிற்றுறையாக்கி உயிரியல் பீடைக்கட்டுப்பாட்டு காரணிகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கும் மக்களுக்கும் கிடைக்கச் செய்தல் வேண்டும். நன்றே செய் அதனையும் இன்றே செய் என்பார்கள். அதற்குரிய வழி வகைகளை தேடுவதற்கு இந்த ஆய்வுக்குழு அதீத முயற்சிகளை எடுத்திருக்கின்றது. நிச்சயமாக எமது மக்களுக்கு இந்த உயிரியல் பொறிமுறை சிறந்த ஒரு கைங்கரியமாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலயச் சூழலில் புனிதத்தைப் பேணுவோம்



அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகன், சர்வ சக்திமான், சர்வக்ஜன் எனப் பலவாறாகப் போற்றப்படும் ஒரே பரம்பொருள், சித்தர்கள், ஞானிகள் எனப் பலரும் உலாவிய சிறப்பு வாய்ந்த நல்லூரில், கந்தப் பெருமானாக எழுந்தருளி அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார். இந்தியாவில் சிதம்பரம் என்றால், தில்லை நடராஜப் பெருமான் ஆலயத்தையே குறிக்கின்றது. அவ்வாறே ஈழத்திரு நாட்டில், நல்லூர் என்றால், நல்லூர்க்கந்த சுவாமி ஆலயத்தையே குறித்து நிற்கின்றது.

இத்தகைய அருள் நிறைந்த ஆலயத்தில், பேணப்படும் நேரம் தவறாத நியமம் அடியார்களின் ஆலய வழிபாட்டுக்கு பெரிதும் வசதியாக அமைந்துள்ளது. இவ்வகையான நேரம் தவறாத நியமத்தை, நமது வேத சாஸ்திரங்கள் "ரிதம்" என்று வர்ணிக்கின்றன. முருகு என்றால் அழகு, அழகு என்றால் ஒழுங்கு, ஒழுங்கு என்றால் நியமம், நியமம் என்றால் கட்டுப்பாடு என்றவாறு பெயருக்கு ஏற்ற வகையில் முருகப் பெருமானின் திருவருள் நல்லூரில் நிறைந்திருக்கின்றது.

இறைவன் சந்நிதியில் எல்லோரும் சமம் என்ற கொள்கை இவ்வாலயத்தில் முறையாகப் பேணப்படுவது ஏனைய ஆலயங்களுக்கு முன்னுதாரணமாக அமைகின்றது. நல்லூர் ஆலயத்தில் ஆரம்பிக்கப்படும் எந்த நடைமுறையும் நாடெங்கும் பரவுகின்றது. ஒரு ரூபாவுக்கு அர்ச்சனை செய்கின்ற மரபை நீண்ட காலமாகப் பேணி வருவது பெருமைக்குரியது. கடந்த வருடத்தில் இருந்து மாலையில் முருகப் பெருமான் வெளி வீதி உலா வரும் போது ஈசான மூலையில் "திருவாசகம்" பாடப்பெறுவது மனதை உருக்கும் செயலாக அமைகின்றது.

இவ் வருடம் "சண்முக ராஜதள கோபுரம்" மற்றும் அருணகிரிநாதர் ஆலயம் அமைந்திருக்கும் பகுதியில், "கந்தர் அலங்காரம்" பாடப் பெறுவது மேலும் சிறப்பும் சேர்க்கின்றது.

இத்தகைய பல சிறப்புகள் நிறைந்த ஆலயத்தில் தற்போது மஹோற்சவம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தினமும் பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடுகின்றனர். இதில் முருகப் பெருமான் மீது ஆராத பக்தி கொண்டு ஆலய தரிசனம் செய்ய வருவோர், தத்தமது வேண்டுதல்கள் நிறைவேற முருகன் அருள்புரிவார் என்ற நம்பிக்கையுடன் வருவோர் நேர்த்திக்கடன்களை நிறைவேற்ற வருவோர், வீதி உலா காட்சி கண்டுகளிக்க விரும்புவோர் எனப் பல் வகையினர் இதில் அடங்குவர். ஆலயத்திற்கு வரும் அடியார்கள் வழிபாடு செய்து தம்முள் மன ஒருமைப்பாட்டை உருவாக்கிக் கொள்வதே நோக்கமாகும்.

ஆலயத்திற்கு வரும் அடியார்கள் கீழ்க் காணும் நடைமுறைகளைப் பேணுவது அவசியமாகும். இதில் அனைவரும் எமது கலாசார உடை அணிந்து வருவது விரும்பத்தக்கது. பெண்கள் ஆலயத்தில் தலைவிரி கோலமாக வருவதைத் தவிர்ப்பது சாலச் சிறந்தது. ஆலயத்திற்கு வரும் அடியார்கள் அனைவரும் ஆசாரசீலராக ஸ்நானம் செய்து, தோய்த்துலர்ந்த ஆடையணிந்து வருவது புறச் சுத்தம் பேணுதலாம். அவ்வாறே எமது உள்ளத்திலும் அநாவசிய சிந்தனைகளின்றி தூய்மை பேணப்பட வேண்டும்.

ஆலய வாசலைக் கடந்து உட்சென்றபின் வெளியேறும் வரை, "பரம்பொருளின் பெரும் புகழைப் பாடிப் பணிதல் அன்றி ஆலயத்துக்குள் பிற வார்த்தை பேசற்க" என்ற கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும்.

எமக்கெல்லாம் கிடைத்திருக்கும் வரப்பிரசாதமாகிய நல்லைக் கந்தப் பெருமான் ஆலயச் சூழலை, பக்தி பூர்வமாகப் பேணுவது அனைவரது தலையாய கடமையாகும்.

"நல்லைக் கந்தன்
வல்லமை தாராயோ .....!"

பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா
வதிவிட ஆச்சாரியார், சின்மயா மிஷன்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

# அருள்நெறி விழா

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் யாழ். மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள் நெறிவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணி வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள கணக்காய்வாளர் எம்.ஜி.காண்டீபன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர் க. கிருஷ்ணகுமார் கலந்து கொள்வார்.

இதில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சைவ வித்தியா விருத்திச் சங்க அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நடனம், பண்ணிசை, வில்லிசை, கைலாசநாதர் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் நடனம், பேச்சு, கதா பிரசங்கம், விஸ்வலிங்க மகாகணபதி அறநெறிப்பாடசாலை மாணவர்களின் நடனம் என்பன இடம்பெறும்.

மேலும் கோப்பாய் பிதேச செயலர் பிரிவிற்குட்பட்ட செல்வக் கதிர்காம முருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் வில்லிசை, தனி நடனம், பேச்சு, நாகலிங்கேஸ்வரர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பண்ணிசை, நடனம் என்பனவும் இடம் பெறும். (இ-3)

# 'ஒருநிலைப்படுத்தப்பட்ட மனம்' ஆன்மீக அருளுரை இன்று

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் ஆன்மீக அருளுரைகள் (ஞான யக்ஞம்) இன்று சனிக்கிழமை இரவு 7.30 மணிமுதல் 8.15 மணிவரை இல.700, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சின்மயா மிஷனில் இடம்பெறும். இந்நிகழ்வில் "ஒரு நிலைப்படுத்தப்பட்ட மனம்" எனும் தலைப்பில் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா ஆன்மீக அருளுரை வழங்குவார். (இ-3)

# தெய்வீகச் சிறப்பு நிகழ்வுகள்

நல்லூர்க்கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு உலக சைவத்திருச்சபை நடத்தும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 7.45 மணிவரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் இடம் பெறும். சைவப்புலவர் சிவஸ்ரீ. கதிர் குமாரசாமி சுமுகலிங்க சிவாச்சாரியார் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் "முருகப்பெருமானும் அருணகிரிநாதரும்" எனும் தலைப்பில் சிவநெறிப்பிரியன் சைவநெறிச் சன்மார்க்கர் மு.நித்தியானந்தா சொற்பொழிவாற்றுவார். (இ-3)

# தெய்வீக இசையரங்கு

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று சனிக்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறும். இதில் பாட்டு-பரமேஸ்வரி கணேசன், வயலின்-சு.கோபிதாஸ், மிருதங்கம்-நா.மாதவன், கெஞ்சிரா-நா.சிவசுந்தரசர்மா, முகர்சிங்-சி.செந்தூரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-3)

# ஆன்மீக நிகழ்வுகளில் இன்று

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ். கதிர் கலையகத்தின் ஏற்பாட்டில் இடம் பெறும் ஆன்மீக நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு நல்லூர்க் கந்தசுவாமி கோவில் முன்பாகவுள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் சிவஸ்ரீ கதிர் குமாரசாமி சுமுகலிங்கம் சொற்பொழிவாற்றுவதுடன் கந்தபுராணம் தொடர் சொற்பொழிவினை பண்டிதர் சைவப்புலவர் பொன். சுகந்தன் நிகழ்த்துவார். (இ-3)

# "இன்று போய் நாளை வா" தொடர் இசைப்பேருரை

நல்லூர் கந்தப்பெருமானின் மஹோற்சவத்தை முன்னிட்டு சைவமகாசபை 30 வருடங்களுக்கு மேலாக நடத்தி வரும் கம்பராமாயணம் தொடர்பான தெய்வீக தொடர் இசைப்பேருரை (சங்கீத கதா பிரசங்கம்) இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணி முதல் இரவு 8 மணிவரை நல்லை ஆதீன குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் இடம் பெறும்.

இதில் "இன்று போய் நாளை வா" எனும் தலைப்பில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை நித்தியானந்த சர்மா இசைப்பேருரை நிகழ்த்துவார். (இ-3)

# நல்லூர் கந்தனுக்கு இன்று சப்பறத் திருவிழா



## விரைந்திங்கு வரவேண்டும்

மேரு மலை நிகர்த்த சப்பை இரதம் மீதமர்ந்து
மெய் அடியார்கள் தம் வினை தீர்க்க
விரைந்திங்கு வரவேண்டும் முருகா
நீ தந்த இனம் வாழ, செந்தமிழ் மொழி வாழ
விரைந்திங்கு வரவேண்டும் கந்தவேளே
எமதினம் பட்ட துயர் போதும் ஐயா
எமதினம் காத்திட மயிலேறி விரைந்திங்கு வாரும் ஐயா
நல்லூரின் திருக்குமரனே.

எ.பி.சண்முகநாதன் JP
ஈச்சமோட்டை

## பண்ணுடை நல்லூர் புகழ் பதியாய்



கண்ணருள் செய்யும் கதிர் வடிவே!
அண்ணல் விநாயகன் அருள் இணையே!
மின்னிடும் நுதல் வேலுடையாய்!
என்னுடையாய் எமை ஆள்பவனே!
மண் சுமந்தவன் நல்கிடும் அருங்கனியே!
பண்ணுடை நல்லூர் புகழ் பதியாய்!
எண்ணமெலாம் நிறை இனியவனே!

வேலணையூர் தாஸ்

## சப்பை இரதமேறி வருகிறான் வேலவன்

நல்லூரில் வீற்றிருந்து நல்லருள் புரியும் வேலவா!
நாடிவரும் அடியார்கள் குறை தீர்க்கும் வேலவா!
அப்பனுக்கு உபதேசம் செய்த அண்ணலே வேலவா!
நல்லை நகர் வீதியிலே வள்ளி தெய்வானையுடன்
மங்கல வாத்தியங்கள்,ஆடல், பாடல்கள், கற்பூர தீபங்கள் நடுவே
சப்பை இரதமேறி வந்து கோடி நன்மை தந்திடுவாய் வேலவா!

நயினை விசு இராசநாயகம்

## தந்தைக்கு உபதேசித்த தனயனே!



தந்தைக்கு உபதேசித்த தனயனே
ஞான பண்டிதா... முருகா!
கந்தை உடுத்தும் வன்னியர் வாழ
கடைக்கண் பாராய் கந்தா!
நிந்தை செய்தே மதம் மாற்றிடும்
நிலை மாற வேண்டும் வேலா!
அகந்தை அழிந்து அனுப்போர் தவிர்க்க
விரைவாய் அருள்வாய் குமரா!

நா.துஷாந்
வரணி

## சப்பை இரதமேறி சாந்தமாய் காத்தருள்வாய்



செந்தமிழ்த் தெய்வமாம் சேயோன் முருகன்
செவ்விதழ் மங்கைகள் வள்ளி தெய்வயானையுடன்
சேர்ந்திங்கு அருவுருவமாய் வேல்வடிவம் தாங்கி
சேனைகள் புடைசூழ நல்லூர் திருவீதியில்
சேமமாய் வலம்வருகின்றான் நல்லைக்கந்தன்

நாளும் நல்லூர் பதியில் நாலா புறமும்
நல்லூரான் நாமம் கொண்ட நல்லடியார்கள்
நாடியுனை நம்பிக்கை கொண்டு துதிக்கின்றார்கள்
நல்லூர் முருகா நம்பியோர் வாழ்வு செழிப்புற
சப்பைரதமேறி சாந்தமாய் காத்தருள்வாய் ஐயனே...

சைவப்புலவர் எஸ்.ரி.குமரன்

## நல்லைக்கந்த சந்தப் "பா"



அப்பு றத்திலு மிப்பு றத்திலு
மெப்பு றத்திலு மொப்புற விலான்
சப்ப றத்திலு மிப்பு றும்எழில்
செப்பு றுங்கவி வைப்பு றும்புவி
சொப்ப னத்திலும் கண்டி டாதவோர்
சோதி யானவ னாதி வேலவன்
உப்பு சூழ்வினை வெப்ப மாழ்த்தியே
ஓர்ந்து நிற்பவன் நல்லைக் கந்தப்பா!

கலாபூஷணம், சந்தக்கவிஞர் நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதா மரணம் குறித்து விசாரிக்க விசாரணை ஆணையம் அமைக்கப்படும்!

## முதலமைச்சர் அதிரடி அறிவிப்பு

(சென்னை)

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் மரணம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைக்கப்படும் என முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அறிவித்தார்.

தமிழகத்தில் ஆளுங் கட்சியான அ.தி.மு.கவில் ஏற்பட்டுள்ள பிளவை சரி செய்து அணிகளை இணைக்கும் முயற்சி தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில், அ.தி.மு.க. அம்மா அணியிலும் பிளவு ஏற்பட்டது. டி.டி.வி. தினகரன் ஆதரவாளர்கள் தனித்து செயற்படத் தொடங்கியதால் புதிய பிரச்சினை உருவானது.

அதேசமயம் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் ஓ.பி.எஸ். தரப்பினர் இணைப்பு பேச்சுவார்த்தை தொடங்கியிருக்கிறார்கள். குறிப்பாக ஓ.பி.எஸ். தரப்பினரின் முக்கிய நிபந்தனைகளை நிறைவேற்ற எடப்பாடி தரப்பினர் முன்வந்திருப்பதாக தகவல் வெளியானது.

இந்த பரபரப்பான அரசியல் சூழ்நிலைக்கு மத்தியில், முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி நேற்று அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்தினார். தலைமைச் செயலகத்தில் நடந்த இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு பின்னர் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது.

தமிழகத்தின் முதலமைச்சராக திறம்பட பணியாற்றிய முதலமைச்சர் ஜெயலலிதா உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரது இறப்பு குறித்து பல்வேறு செய்திகள் ஊடகங்கள் வாயிலாக வெளிவந்தன.



எனவே, ஜெயலலிதாவின் இறப்பு குறித்து விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க, ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைக்கப்படும்.

தமிழக முதலமைச்சராக 6 முறை திறம்பட பணியாற்றிய அவர், தமிழகத்தின் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டவர். அனைவரின் மனதிலும் நீக்கமற நிறைந்துள்ள அவர் வாழ்ந்த வேதா நிலையத்தை நினைவிடமாக்கி பொதுமக்கள் பார்வைக்கு அனுமதிக்குமாறு தொடர்ந்து கோரிக்கைகள் வந்தன. எனவே, அவரது சாதனைகளை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில், அவர் வாழ்ந்த போயஸ் தோட்ட இல்லமான 'வேதா நிலையம்' அரசு நினைவிடமாக மாற்றப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு அனுமதிக்கப்படும் என்றார்.

ஜெயலலிதாவின் மரணம் தொடர்பான சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் முதலமைச்சர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். அதேசமயம், அணிகள் இணைப்புக்கு ஓ.பி.எஸ். தரப்பினர் வைத்த கோரிக்கைகளில் இதுவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. (8)

## அமைச்சரின் அறிவிப்பிற்கு தலைவர்களின் கருத்துக்கள்

ஜெயலலிதாவின் மரணம் குறித்து விசாரணை நடத்த ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்கப்படும் என முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அறிவித்துள்ளார். மேலும் ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் இல்லத்தை அரசு நினைவிடமாக மாற்றப்படும் என்றும் அறிவித்தார். இந்த அறிவிப்புகள் தொடர்பாக பல்வேறு அரசியல் தலைவர்கள் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்துள்ளனர்.

**தம்பிதுரை** அ.தி.மு.க. அணிகள் இணைந்து செயற்படும் என்ற நம்பிக்கை உள்ளது. முதலமைச்சர் வெளியிட்ட அறிவிப்புகளில் எங்களுக்கு கருத்து வேறுபாடு எதுவும் இல்லை. ஓ.பி.எஸ் மீண்டும் கட்சியில் இணைந்து பணியாற்றுவார் என நம்புகிறேன். கருத்து வேற்றுமைகளை மறந்து அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும்.

**மாபா பாண்டியராஜன்** முதல்வரின் இரு அறிவிப்புகளையும் மனதார வரவேற்கிறேன். தர்மயுத்தத்தின் முக்கிய கோரிக்கைகளை முழுமையாக ஏற்று அறிவித்தது வரவேற்கத்தக்கது. மேலும், ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை தொடர்பான புகைப்படங்கள் மற்றும் வீடியோ ஆதாரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். அணிகள் இணைந்தால் அ.தி.மு.க. மேலும் வலுவடையும்

**எச்.ராஜா** அ.தி.மு.க. அணிகள் இணைப்புக்கு முதல்வரின் இந்த அறிவிப்புகள் வழிவகுக்கும். அ.தி.மு.க. விவகாரத்தில் பா.ஜ.க.வுக்கு எந்த தொடர்பும் கிடையாது.

**திருநாவுக்கரசர்** ஜெயலிதா மரணம் தொடர்பாக நாட்டு மக்களுக்கு உண்மை தெரிந்தால் நல்லதுதானே? வேதா நிலையம் அரசு நினைவிடமாக மாற்றப்படும் என்பதை வரவேற்கிறேன்.

**டி.கே.எஸ்.இளங்கோவன்** தி.மு.கவைப் பொறுத்த வரை விசாரணை ஆணையம் அமைக்கப்படுவது கண் துடைப்பு. நிர்ப்பந்தம் காரணமாகவே விசாரணை ஆணையம் அமைக்கப்படுகிறது. விசாரணை ஆணையம் அமைத்து அதிகாரிகளை நியமித்து யார் வீட்டு பணத்தை செலவு செய்கி றார்கள்?

**ப.சிதம்பரம்** முதல்வரின் அறிவிப்பு அரசியல் ரீதியானது. ஜெயலலிதாவுக்கு சிறப்பான சிகிச்சை கிடைத்தது.

**புகழேந்தி** டி.டி.வி. தினகரனின் கோரிக்கைக்கு ஏற்ப அரசு உத்தரவிட்டுள்ளதாகவே கருதுகிறேன். விசாரணை துரிதமாக நடைபெற வேண்டும். மக்களி டையே எழுந்துள்ள சந்தேகத்தை நிவர்த்தி செய்ய வேண்டிய கடமை அனைவருக்கும் உள்ளது. அணிகள் இணைப்புக்கான கண் துடைப்பாக இருந்துவிடக் கூடாது.

**வெற்றிவேல்** டி.டி.வி தினகரன் கேட்டுக்கொண்டதாலேயே விசாரணைக் கமிஷன் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதேசமயம், வேதா நிலையத்தை அரசு நினைவிடமாக மாற்ற இவர்களுக்கு உரிமை இல்லை. அது சட்டச் சிக்கலை ஏற்படுத்தும்.

**முத்தரசன்** ஜெயலலிதாவின் வேதா இல்லம் மட்டுமின்றி ஜெயலலிதாவின் மற்ற சொத்துக்களையும் அரசுடைமையாக்க வேண்டும். அரசியல் நெருக்கடி முற்றியுள்ளது என்பதையே முதலமைச்சரின் இந்த அறிவிப்பு காட்டுகிறது.

**திருமாவளவன்** முதலமைச்சரின் அறிவிப்பில் உள்நோக்கம் இருக்காது என்றே நினைக்கிறேன். ஜெயலலிதாவின் மரணம் குறித்து மக்களிடையே பல்வேறு சந்தேகம் எழுந்துள்ளது என்பதை மறுக்க முடியாது. ஜெயலலிதாவின் மரணம் தொடர்பாக மக்களின் ஐயத்தை போக்கவே முதலமைச்சர் நடவடிக்கை எடுத்திருக்கிறார். ஜெயலலிதாவின் மரணம் தொடர்பான சந்தேகங்களுக்கு நீதி விசாரணை தெளிவுபடுத்தும் என நம்புகிறேன்.

**வைகோ** ஜெயலலிதா மரணம் தொடர்பான விசாரணைக் கமிஷன் உள்ளிட்ட முதலமைச்சரின் அறிவிப்புகள் வரவேற்கத்தக்கது.

இதற்கிடையே, வேதா நிலையம் அரசு நினைவிடமாக மாற்றப்படும் என முதல்வர் அறிவித்ததையடுத்து, வேதா நிலையத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது..

**அன்புமணி ராமதாஸன்** இது அரசியல் சித்து விளையாட்டின் ஓர் அங்கம். இதனால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை என்றாலும், ஜெயலலிதா மரணத் [illegible] ஏற்றுக்கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது.

ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் அமைக்கப்பட்ட விசாரணை ஆணையங்களால் இதுவரை என்ன பயன் ஏற்படும் என்பது பாமரனுக்குக் கூட தெரியும். இதுவும் பெயரளவுக்கு அமைக்கப்படும் ஆணையம் தான். அடுத்த 6 மாதங்களில் அதனிடமிருந்து ஓர் அறிக்கை பெறப்பட்டு, அது கிடப்பில் போடப்படும் சடங்கு அரங்கேற்றப்படும். எனவே, வெற்றுச் சடங்குகளை நிறைவேற்றுவதற்கு பதிலாக ஜெயலலிதா மரணம் குறித்து மத்திய புலனாய்வு பிரிவு (சி.பி.ஐ.) விசாரணை நடத்த அரசு ஆணையிட வேண்டும்.

**மு.க.ஸ்டாலின்** முன்னாள் முதல்வர் ஜெய லலிதா இறந்து 8 மாதங்கள் கழித்து, "அவரது மர்ம மர ணம் குறித்து விசாரிப்பதற் காக விசாரணை ஆணை யம் அமைக்கப்படும்" என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி வெளியிட்டுள்ள அறிவிப்பு 'ஊழல் அணிகள் சங்கமம்' ஆவதற்காக அரங்கேற்றப்பட்டுள்ள கண்துடைப்பு நாடகம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், பல்வேறு அரசியல் கட்சிகள் சார்பிலும் அம்மையார் ஜெயலலிதா வின் மரணம் குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று பல மாதங்களாக தொடர்ந்து கோரிக்கை எழுப்பிய போதும், அதற்கெல்லாம் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் மர்ம மரணத்தின் தடயங்கள், வீடியோ காட்சிகள் அனைத்தும் அழிக்கப்பட வேண்டும் என்று அமைதி காத்தவர்கள்தான் முன் னாள் முதமைச்சர் ஓ.பன்னீர் செல்வமும் இன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியும் என்பதை தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். (8)




## பழனிச்சாமிக்கு தீபக் கடிதம்

(சென்னை)

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா வாழ்ந்த போயஸ் கார்டன் வீடு நினைவு இல்லம் ஆக்கப்படுவது தொடர்பாக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமிக்கு தீபக் கடிதம் எழுதியுள்ளார்.

போயஸ் கார்டன் வீடு நினைவு இல்லம் ஆக்கப்படுவதற்கு தீபாவும், தீபக்கும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். வாரிசுகளான எங்களிடம் எந்த விதமான கருத்தையும் கேட்காமல் எப்படி இதுபோன்ற ஒரு அறிவிப்பை வெளியிடலாம் என்றும் அவர்கள் கேள்வி எழுப்பி உள்ளனர்.

இதனை தொடர்ந்து ஜெயலலிதாவின் அண்ணன் மகனான தீபக், முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமிக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் தெரிவித்ததாவது,

மறைந்த முதலமைச்சரும் எங்களது அத்தையுமான ஜெயலலிதா வாழ்ந்த போயஸ் கார்டன் இல்லத்தை நினைவு இல்லமாக்கப் போவதாக அறிவித்துள்ளீர்கள். இதில் எங்களுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. ஆனால் ஜெயலலிதா வசித்து வந்த போயஸ் கார்டன் இல்லம் இருக்கும் இடம் ஜெயலலிதாவின் தாயாரும் எங்களது பாட்டியுமான சந்தியா வாங்கிய சொத்தாகும். அதற்கு இப்போது நானும் எனது சகோதரி தீபாவும் மட்டுமே உண்மையான வாரிசுகளாக உள்ளோம்.

அவர் வசித்த வீட்டை நினைவு இல்லம் ஆக்கும் முன்னர், அந்தச் சொத்தின் வாரிசுகள் என்ற அடிப்படையில் எங்கள் இருவரிடமும் சட்டப்படி கேட்டிருக்க வேண்டும். அப்படி கேட்காதது தவறாகும்.

போயஸ் கார்டன் வீடு தனது காலத்துக்கு பிறகு யாருக்குச் சொந்தம் என்பது பற்றி பாட்டி சந்தியா உயில் எழுதி வைத்துள்ளார். அதில் எனக்கும் எனது சகோதரி தீபாவுக்குமே போயஸ் கார்டன் வீடு சொந்தம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்து சொத்துரிமை சட்டப்படியும் அந்த உயிலில் குறிப்பிட்டுள்ளபடியும் நாங்கள் இருவர் மட்டுமே ஜெயலலிதாவின் வாரிசுகள் என்பது உறுதியாகும்.

எனவே, போயஸ் கார்டன் இல்லத்தை நினைவு இல்லமாக்கும் அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னர், என்னிடமும் எனது சகோதரி தீபாவிடமும் கலந்து ஆலோசித்து சட்டபூர்வ அனுமதியைப் பெற வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன் என்று தீபக் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (8)

## அப்பலோ வரவேற்பு

ஜெயலலிதா மரணம் பற்றி விசாரிக்க கமிஷன் அமைக்கப்படும் என்ற முதல்வரின் அறிவிப்புக்கு அப்பலோ வைத்தியசாலை நிர்வாகம் வரவேற்பு தெரிவித்துள்ளது.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா மரணம் பற்றி விசாரிக்க ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் விசாரணைக்கமிஷன் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார். முதலமைச்சர் பழனிச்சாமியின் அறிவிப்புக்கு, ஜெயலலிதாவுக்கு சிகிச்சை அளித்த அப்பலோ வைத்தியசாலை வரவேற்பு தெரிவித்துள்ளது. அப்பலோ வைத்தியசாலை நிர்வாகம் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில், " ஜெயலலிதா மரணம் பற்றி விசாரிக்க கமிஷன் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு வரவேற்கத்தக்கது. முதல் அமைச்சரின் அறிவிப்பு நல்ல நடவடிக்கை. ஜெயலலிதாவுக்கு சிறப்பான சிகிச்சை அளித்தது விசாரணை ஆணையம் மூலம் தெரிய வரும்.

விசாரணை ஆணையம் மூலம் தேவையற்ற ஊகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். சிறப்பான சிகிச்சை அளித்தும் ஜெயலலிதாவை காப்பாற்ற முடியாதது மிகுந்த வருத்தத்தை அளித்தது என்றுள்ளது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறையில் பயங்கர கலவரம்

## 37 கைதிகள் படுகொலை



வெனிசுலா நாட்டில் உள்ள சிறையில் இருதரப்பினருக்கு இடையே ஏற்பட்ட கலவரத்தில் 37 கைதிகள் படு கொலை செய்யப்பட்டனர்.

வெனிசுலா நாட்டில் உள்ள அமாசான்ட்ஸ் மாகாணத்தில் போர்ட்டோ அயாகுஜோ என்ற சிறிய நகரம் உள்ளது. அங்குள்ள சிறையில் 107 பேர் அடைக்கப்பட்டு இருந்தனர். இவர்களில் பலர் கொலை உள்ளிட்ட கொடூர குற்றச் செயல்களை செய்தவர்கள்.

சிறையில் கைதிகள் 2 பிரிவாக ஏற்கனவே செயற்பட்டு வந்துள்ளனர். இதனால் அவர்களுக்குள் அடிக்கடி மோதல் இருந்து வந்தது.

இந்த நிலையில் கடந்த புதன்கிழமை இரு தரப்பினரும் பயங்கரமாக மோதிக் கொண்டனர். துப்பாக்கியாலும் சுட்டனர்.

இதில் 37 பேர் கொல்லப்பட்டனர். கலவரத்தை ஒடுக்க சிறையில் அதிகாரிகள் முயற்சி செய்தனர். அவர்களையும் கைதிகள் தாக்கினார்கள். இதில் 14 சிறை அதிகாரிகள் படுகாயம் அடைந்தனர்.

கைதிகளுக்கு எப்படி துப்பாக்கி கிடைத்தது என்பது தெரியவில்லை. சிறைக்காவலர்களின் துப்பாக்கிகளை பறித்து தாக்குதல் நடத்தி இருக்கலாம் என்று கருதப்படுகிறது. (8)

# கொங்கோவில் கனமழை நிலச்சரிவில் 40 பேர் பலி!



(புனியா)

மத்திய ஆபிரிக்கா நாடுகளில் ஒன்றான கொங்கோ ஜனநாயக குடியரசில் கடந்த புதன்கிழமை கனமழை பெய்தது.

குறிப்பாக நாட்டின் வடகிழக்கு பகுதியில் உள்ள இதுரி மாகாணத்தில் பெய்த மழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இங்குள்ள டோரா மீனவ கிராமத்தையொட்டிய பகுதியில் உள்ள ஆல்பர்ட் ஏரியில் இருந்து கட்டுக்கடங்காத அளவில் தண்ணீர் வெளியேறியது.

இதையடுத்து ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி மீனவ கிராமத்தை சேர்ந்த 40 பேர் உயிரிழந்தனர். இது தொடர்பாக மாகாண ஆளுநர் கேட்டா கூறுகையில்,

கனமழை காரணமாக பல்வேறு இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது.

இறந்த 40 பேரில் 28 பேரின் உடல்கள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டன. நேற்றும் 12 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன என்றார். (8)

# அசாமில் பெருவெள்ளம்

## காசிரங்கா வனவிலங்கு காப்பகத்தில் நாற்பது வன விலங்குகள் உயிரிழப்பு



(கவுகாத்தி)

அசாம் மாநிலத்தில் பெய்து வரும் கனமழையால் புகழ்பெற்ற வனவிலங்கு காப்பகமான காசிரங்கா தேசியப் பூங்கா முழுவதும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இது வரை 140 வனவிலங்குகள் பலியாகியுள்ளன.

அசாமில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதன் விளைவாக இங்குள்ள பிரம்மபுத்திரா உள்ளிட்ட ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து பாய்கின்றது. இதனால், இம்மாநிலத்தில் உள்ள பல்வேறு மாவட்டங்கள் வெள்ளம் சூழ்ந்து காணப்படுகின்றன. வெள்ள நீரில் சிக்கித்தவிக்கும் மக்களை மீட்கும் பணியில் பேரிடர் மீட்பு படையினருடன் இராணுவ வீரர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

முக்கிய பாலங்கள், வீதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளதால் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், கோல்காட் மற்றும் நகவுன் மாவட்டங்களை ஒட்டியுள்ள புகழ்பெற்ற வனவிலங்கு காப்பகமான காசிரங்கா தேசியப் பூங்கா முழுவதும் வெள்ள நீரில் மூழ்கியுள்ளது. அங்கு பராமரிக்கப்பட்டுவரும் விலங்குகளை பாதுகாக்க மாவட்ட நிர்வாகம் சிறப்பு ஏற்பாடுகளை செய்து வருகின்றது.

சுமார் 500 சதுர கிலோமீற்றர் அளவுள்ள இந்த பூங்காவின் 80 சதவீதம் பகுதியை வெள்ளநீர் சூழ்ந்துள்ளது. இதே நிலை நீடித்தால் இந்த வனவிலங்கு காப்பகத்தில் உள்ள சிங்கம், புலி, அரிய வகை ஒற்றைக்கொம்பு காண்டாமிருகம் போன்றவை வெள்ளத்தில் மூழ்கி இறக்கவும், வெள்ள நீரில் நீந்தியபடி, அருகாமையில் உள்ள ஊர்களுக்குள் புகுவதற்கும் அதிக வாய்ப்புகள் உள்ளதாக அஞ்சப்படுகிறது.

இந்நிலையில், கடந்த பத்தாம் திகதியில் இருந்து சில நாட்களாக வெள்ளத்தில் மூழ்கி இரு யானைகள், 10 காண்டாமிருகங்கள், 120-க்கும் மேற்பட்ட சதுப்பு மான்கள், காட்டெருமைகள், முள்ளம்பன்றி உட்பட 140 வனவிலங்குள் உயிரிழந்ததாக காசிரங்கா வனவிலங்கு காப்பக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். வெள்ளத்தில் சிக்கி இறந்த விலங்குகளின் உடல்கள் அவ்வப்போது அகற்றி, அடக்கம் செய்யப்பட்டு வருவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (8)

# பாக். முன்னாள் ஜனாதிபதி சர்தாரிமீது ஊழல் வழக்கு

(இஸ்லாமாபாத்)

நவாஸ் ஷெரிப்பை தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி மீதும், பாகிஸ்தான் லஞ்ச ஒழிப்பு துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர்நவாஸ்ஷெரிப் பனாமா கேட் பேப்பர்ஸ் ஊழலில் சிக்கி பதவி இழந்தார். அது அந்நாட்டு அரசியலில் பரபரப்பையும், குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி மீதும், பாகிஸ்தான் இலஞ்ச ஒழிப்பு துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஆசிப் அலி சர்தாரியும், அவரதுமனைவியும், முன்னாள் பிரதமருமான பெனாசிர் பூட்டோவும் சட்ட விரோதமாக பாகிஸ்தானிலும், வெளிநாட்டிலும் சொத்துக்கள் வாங்கி குவித்ததாக பல்வேறு ஊழல் வழக்குகள் உள்ளன.

கடந்த 2001 ஆம் ஆண்டில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது. சர்தாரி ஜனாதிபதியாக பதவி ஏற்றதை தொடர்ந்து அந்த வழக்குகள் விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

தற்போது அவர் பதவி இழந்ததை தொடர்ந்து இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வருகிறது. அநேகமாக 6 வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (8)




# இரண்டாவது தாக்குதலை முறியடித்த பொலிஸார்

## 4 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

ஸ்பெயினின் காம்ப்ரில்ஸ் நகரில் தீவிரவாதிகள் திட்டமிட்டிருந்த இரண்டாவது தாக்குதலை முறியடித்த பொலிஸார் நான்கு தீவிரவாதிகளைச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

ஸ்பெயினின் பார்சிலோனா நகரில் உள்ள லாஸ் ராம்ப்லாஸ் என்ற சுற்றுலா பகுதியில் இருக்கும் ப்லகா கடலுன்யா பிளாசா அருகே பாதசாரிகள் வீதியைக் கடந்து கொண்டிருந்தனர். அப்போது, திடீரென அங்கு வந்த வான் ஒன்று பாதசாரிகள் மீது பயங்கர மாக மோதியது. இதனால், அங்கு கடும் பதற்றமான சூழ்நிலை நிலவியது.

மக்கள் மீது வானை மோதவிட்டு அதனை செலுத்தி வந்தவன் தப்பி ஓடிவிட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இக்கோர தாக்குதலில் 13 பொதுமக்கள் பலியானதாகவும், 30 இற்கும் அதிகமானோர் காயமடைந்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

நிச்சயமாக இது தீவிரவாத தாக்குதலாகதான் இருக்கும் என்று அந்நாட்டு பொலிஸார் கூறியிருந்த நிலையில், இது தொடர்பாக இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். எனினும், வானை செலுத்தி வந்தவன் பிடிபட வில்லை. இந்த தாக்குதலை அடுத்து நகர் முழுவதும் பலத்த பாதுகாப்பு போடப்பட் டுள்ளது.

இந்நிலையில், பார்சிலோனாவின் அருகே உள்ள காம்ப்ரில்ஸ் என்ற இடத்தில் தீவிரவாதிகள் தங்கியிருந்த பகுதியை முற்றுகையிட்ட பொலிஸார், அவர்களை நோக்கி சரமாரியான துப்பாக்கிசூட்டை நடத்தினர். சில மணிநேரம் நடந்த இத் துப்பாக்கிச் சண்டையில் 4 தீவிரவாதிகள் கொல்லப் பட்டதாக்வும், ஒரு தீவிரவாதி காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பார்சிலோனா நகரில் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட தீவிரவாதிகளுக்கு தொடர்புள்ளதாகவும், காம்ப்ரில்ஸ் நகரில் இரண்டாவது தாக்குதலுக்கு அவர்கள் திட்டமிட்டு இருந்ததாகவும் பொலிஸார் கூறியுள்ளனர். இத் துப்பாக்கிச் சண்டையின் போது 9 பொதுமக்கள் மற்றும் ஒரு பொலிஸார் காயமடைந்துள்ளதாகவும் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (8)

# விசாரணை குழு முன் ஆஜராக நவாஸ் ஷெரிப், மகன்கள் மறுப்பு

பனாமா ஊழல் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் கமிஷன் முன் நானும் எனது மகன்களும் ஆஜராக மாட்டோம் என்று பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் பிரதமர் நவாஸ் ஷெரிப் மற்றும் அவரது குடும்பத்தினர் மீது எழுந்துள்ள 'பனாமா கேட்' ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து சிறப்பு கூட்டு புலனாய்வுக்குழு அமைத்து விசாரணை நடத்த கடந்த மே மாதம் பாகிஸ்தான் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்படி, பாகிஸ்தான் மத்திய புலனாய்வு அமைப்பான எப்.ஐ.ஏயின் கூடுதல் தலைமை இயக்குநர் வாஜித் ஜியா தலைமையில் 6 உறுப்பினர்களைக் கொண்ட கூட்டு புலனாய்வுக்குழு விசாரணை நடத்தி வந்தது.

இந்நிலையில், சிறப்பு கூட்டு புலனாய்வு குழு நடத்திய விசாரணையில் கண்டறியப்பட்ட விபரங்கள் உச்ச நீதிமன்றில் அறிக்கையாக தாக்கல் செய்யப்பட்டது. அந்த அறிக்கையின் அடிப்படையில் பிரதமர் பதவியில் இருந்து நவாஸ் ஷெரிப் விலக வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதையடுத்து, கடந்த மாதம் 28ஆம் திகதி அவர் பதவியை விட்டு விலகினார். அவர்மீது மீண்டும் விரிவான விசாரணை நடத்துமாறு பாகிஸ்தான் நாட்டின் தார்மீக பொறுப்பு கமிஷனுக்கு தலைமை உத்தர விடப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்றத்தால் பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ள நவாஸ் ஷெரிப் அந்த உத்தரவை எதிர்த்து சமீபத்தில் மூன்று மேல் முறையீட்டு மனுக்களை தாக்கல் செய்தார்.

இந்நிலையில், லாகூரில் உள்ள தார்மீக பொறுப்பு கமிஷன் அலுவலகத்தில் நேற்று நடைபெறும் விசாரணையில் நேரில் ஆஜராகி விளக்கம்அளிக்குமாறு நவாஸ் ஷெரிப் மற்றும் அவ ரது இரு மகன்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது. ஆனால், நானும் எனது மகன்களும் ஆஜராக மாட்டோம் என்று பாகிஸ் தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப் தெரிவித்து ள்ளார்.

பிரதமர்பதவியில் இருந்து என்னை நீக்கியது செல்லாது என்று உச்சநீதிமன்றில் நான் தாக்கல் செய்துள்ள முறையீட்டு மனுக்கள் மீதான தீர்ப்பு வரும்வரை இந்த விசாரணையில் பங்கேற்கப் போவதில்லை என அவர் திட்ட வட்டமாக குறிப்பிட்டுள்ளார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ்மா அதிபருக்கு எதிராக எம்மால் ஒன்றும் செய்ய முடியாது

## அரசியலமைப்பு சபை கைவிரிப்பு

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடு தொடர்பில் விசாரணை செய்யும் அதிகாரம் பொலிஸ் ஆணைக்குழுவுக்கே இருப்பதாகவும் அரசியலமைப்புச் சபை அவரைப் பரிந்துரை செய்வது மாத்திரமேயாகும் எனவும் அச்சபையின் உறுப்பினர் ஏ.ரி.ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.



இதேவேளை, தேசிய பொலிஸ் சேவைகள் ஆணைக்குழுவுக்கு பொலிஸ்மா அதிபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க எந்தவித அதிகாரமும் கிடையாது எனவும் பொலிஸ் சேவையிலுள்ள ஏனைய சகல அதிகாரிகளையும் விசாரணை செய்வதற்கு ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உண்டெனவும் அதன் செயலாளர் ஆரியதாச குரே நேற்று முன்தினம் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தேர்தல் குறித்த வர்த்தமானி அறிவித்தல் ஒக்டோபரில் வரும்

## அமைச்சர் அமரவீர தகவல்



உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தலை எதிர்வரும் ஒக்டோபர் அல்லது நவம்பர் மாதத்தில் அரசாங்கம் அறிவிக்கும் என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

இதற்காக வேண்டி உள்ளூராட்சி சபைகள் தொடர்பிலான சட்டமூலத்தை எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ள எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

வர்த்தமானி அறிவித்தலின் பின்னர் தேர்தல்கள் ஆணைக்குழு தனது அறிவித்தலை விடுக்கும்.

பெரும்பாலும் டிசெம்பர் அல்லது ஜனவரி ஆரம்பத்தில் தேர்தல் இடம்பெறலாம் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ரணிலுக்கு சந்திரிகா புகழாரம்

## அவதூறு ஏற்படுத்திய போதும் அமைதி காத்தாராம்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிலர் பிரதமரின் பெயரைக் குறிப்பிட்டு அவதூறு செய்கின்ற போதும், பிரதமர் மோசமான பதில் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், இதுவே நாட்டுத் தலைவர்களிடம் நாம் எதிர்பார்க்கும் ஒழுக்கமாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நான்கு தசாப்த கால அரசியல் வாழ்க்கையில் முக்கியமான தருணங்களை சித்தரிக்கும் கண்காட்சியின் ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்காலத்தை காணும் ரணில் என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கண்காட்சியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த 16ஆம் திகதி ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மேலும் உரையாற்றுகையில்,

பிரதான கட்சிகள் இரண்டின் தலைவர்கள் குறுகிய கட்சி அரசியல் எல்லைகளுக்கு அப்பால் சென்று இணக்கப்பாட்டு அரசாங்கத்தை அமைக்க முடிந்துள்ளது.

இதில் பல்வேறு குறைபாடுகள் இருந்தாலும் இரு தலைவர்களும் ஆச்சரியமான விதத்தில் மக்கள் அபிலாஷைகளை நிறைவேற்ற திடசங்கற்பம் பூண்டுள்ளார்கள்.

இங்கு எமது கட்சியைச் சேர்ந்த சிலர் கட்சியின் விதிமுறைகளையும் அங்கீகரிக்கப்பட்ட ஜனநாயக மரபுகளையும் மீறி மோசமான முறையில் நடந்து கொள்கிறார்கள்.

அவர்கள் பிரதமரின் பெயரை குறிப்பிட்டு அவதூறு செய்கிறார்கள். ஆனால் பிரதமர் மோசமான பதில் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. இதுவே நாட்டுத் தலைவர்களிடம் நாம் எதிர்பார்க்கும் ஒழுக்கமாகும்.

பிரதமர் மிகவும் முதிர்ச்சியான தலைவராக நிதானமான முறையில் நாட்டின் முன்னேற்ற பயணத்திற்கு உரமூட்டுகிறார். இவ்வாறு நாட்டை முன்னேற்றிச் செல்ல முடியுமென நாம் நம்புகிறோம்.

ஜனாதிபதியும் தமது தரப்பில் முதிர்ச்சியாக கையாளுகிறார். இரு முனைகளைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் இருவர் மக்கள் நலனுக்காக வாதப் பிரதிவாதங்களை மறந்து செயற்படுகிறார்கள்.

இது ஏனைய ஆசிய நாடுகளில் காண முடியாத அபூர்வமான நிலைமை என்றும் சந்திரிகா குமாரதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## போய்ப் போய் விழுகிறீர்களா?

வேண்டாம்! பலர், சிலர் மீது போய்ப் போய் விழுகிறார்கள்.

இது பார்க்கவும் சரி, கேள்விப்படும் போதும் சரி, அவ்வளவு நன்றாக இல்லை.

எதிலும் எவரும் எல்லை வகுத்துக் கொள்வது நல்லது.

அடிக்கடிப் போய்ப் பார்ப்பது; போன் இருந்தால் அதை அவர்களுக்குச் சுழற்றியபடி இருப்பது; எதற்கெடுத்தாலும் அவர்களுக்குக் கடிதம் இடுவது என்பதெல்லாம் "என்னடா இந்தாளோட பெரிய தொல்லையாப் போச்சு" என்று சம்பந்தப்பட்டவர்களைச் சலிப்படையவே செய்யும். "எனக்கு எந்தக் காரியமும் ஆக வேண்டியதில்லை; நான் போய் விழுவதெல்லாம் நட்பையும் அன்பையும் பாசத்தையும் பெருக்கிக் கொள்ளத்தான்" என்று சிலர் இதற்கு விளக்கம் தரலாம். இதெல்லாம் எடுபடாத வாதம். காரணம், இவர்களையும் அறியாமல் இவர்கள் மனத்தில் ஒரு சுயநலம் ஒளிந்திருக்கிறது. நெருங்கிப் போய் இதயத்தில் இடம் பிடித்து இவர்களைச் சமய சந்தர்ப்பம் பார்த்து எப்படி பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது அது. இந்த உண்மை உரியவர்களுக்கு மட்டுமன்றி மற்றவர்களுக்கும் புரியாமல் போகாது.

மேலும் அவரவர்களுக்கு என்று தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் உண்டு. அது அதற்கென்று நேரம் காலம் என்று உண்டு. எல்லா நேரமும் எல்லோரும் எல்லோரையும் சந்திக்கவோ உபசரிக்கவோ, தனிப்பட்ட பிரச்சினைகளை மறந்து நாம் பிரியம் காட்டும் அளவுக்கு நம்மிடம் அவர்கள் பிரியம் காட்ட வேண்டும் என்கிற அவசியமோ இல்லை.

"ஐயையோ அந்த ஆளா? தலைவலி? தூங்குறாங்கன்னு போய்ச் சொல்லு!" என்று கூட நாம் தவிர்க்கப்படலாம். போய்ப் போய் விழுபவர்களின் நோக்கம் மனதளவில் நாம் நெருங்கி விட வேண்டும் என்பதுதான். இந்த முயற்சியில் அவர்கள் வெற்றியடைந்து விட்டாலும்கூட இதில் ஒரு பெரிய சங்கடம் எழ வாய்ப்பு இருக்கிறது.

முன்பின் தெரியாதவர்கள் அல்லது அதிகமாக நெருக்கம் இல்லாதவர்கள் நம்மைப் புண்படுத்தும் நோக்கத்துடன் ஒன்றைச் சொல்லிவிட்டால் அல்லது நடந்து கொண்டால் அது நம்மை அவ்வளவாகப் பாதிப்பது இல்லை.

ஆனால் யாரை நெருங்க வேண்டும் என்று எண்ணுகிறோமோ அவர்கள் நாம் சங்கடப்படும்படி நடந்து கொண்டுவிட்டால் நாம் ரொம்பவும் பாதிக்கப்படுகின்றோம்.

இதுபோக, நெருங்க வேண்டும் என்கிற நினைப்பு, இரு தரப்பிலும் இருக்க வேண்டும். ஒரு பகுதியினரிடம் மட்டும் இருந்தால் அது ஏற்கனவே இருக்கிற கொஞ்ச நஞ்சப் பிரியமும் கெட்டுப் போய்க் கடைசியில் ஒன்றுமே இல்லாமல் போய்விடும்.

இது இரும்புச் சட்டியிலிருந்து தப்பித்து அடுப்புக்குள் விழுந்ததைப் போன்ற கதையைப் போன்றது!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்ய பாதுகாப்பு ஆலோசகர் கபிலவுடன் கொழும்பில் சந்திப்பு



இலங்கைக்கான ரஷ்ய தூதரக பாதுகாப்பு ஆலோசகர் கேணல் டிமிற்றி ஏ மிக்கெலோவ்ஸ்கி பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்னவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இது ஒரு மரியாதை நிமித்தமான சந்திப்பாக இருந்தது என்றும் இதன் போது இருதரப்பு விவகாரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில், பாதுகாப்புச் செயலராக, கபில வைத்தியரத்ன நியமிக்கப்பட்ட பின்னர், வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் பாதுகாப்பு ஆலோசகர்கள் அவரைச் சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)




# நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தவே தேசிய பொருளாதாரச் சபை நிறுவப்பட்டது

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



நாட்டின் பொருளாதார முகாமைத்துவத்தை முறைப்படுத்தி தேசிய பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்காகவே தேசிய பொருளாதார சபையை நிறுவுவதற்கு தீர்மானித்ததாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஏற்றுமதி வருமானத்தை அதிகரித்தல் மற்றும் தேசிய கைத்தொழிற்றுறையின் அபிவிருத்தி என்பன இதனூடாக எதிர்பார்க்கப்படுகின்றன. விவசாய நாடு என்ற வகையில் விவசாயத்துறையின் அபிவிருத்திக்கான மிக வலுவானதொரு செயற்றிட்டத்தின் தேவைப்பாடு தற்போது ஏற்பட்டுள்ளதுடன், கைத்தொழில் அபிவிருத்திக்கான அரசாங்கத்தின் பொறுப்பினை யும் மேலும் சிறப்பாக நிறைவேற்றுவதே தேசிய பொருளாதார சபை நிறுவப்படுவதற்கான நோக்கமாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கொழும்பு கலதாரி ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை தேசிய கைத்தொழில் சபையின் வருடாந்த திட்டமிடல் விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய பொருளாதாரச் சபையினை நிறுவுவதற்கு முன்னர் உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் பிரதிநிதிகளுடனும் தேசிய பொருளாதார துறை நிபுணர்கள் மற்றும் வெளிநாடுகளில் பணிபுரியும் எமது நாட்டைச் சேர்ந்த நிபுணர்களுடன் தான் கலந்துரையாடலில் ஈடுபட்டதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டின் எதிர்காலத்திற்கு தேவையான முறையானதும்வினைத்திறனானது மான செயற்றிட்டத்தின் தேவையை நிறைவேற்றுவதன் பொருட்டு ஆரம்பிக்கப்பட்ட தேசிய பொருளாதார சபையின் செயற்பாடுகளுக்கு அனைவரது ஒத்துழைப்பின்னையும் தான் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, உள்நாட்டு கைத்தொழில்களுக்கும் வர்த்தகர்களுக்கும் அநீதி ஏற்படும் வகையிலோ அல்லது அச்சுறுத்தல் ஏற்படும் வகையிலோ அமைந்த எந்தவொரு வர்த்தக உடன்படிக்கையிலும் அரசாங்கம் கைச்சாத்திடாது என்றும் தெரிவித்தார்.

வர்த்தகத்துறையை சாராத ஒரு பிரிவினரால் வர்த்தக சமூகத்தினருக்கு தவறான தகவல்கள் வழங்கி அவர்களை அச்சுறுத்துவதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி தேசிய கைத்தொழில்களை பாதுகாப்பதுடன், தேசிய பொருளாதாரத்தைப் பலப்படுத்தும் கொள்கையுடனேயே அரசாங்கம் வெளிநாடுகளுடன் உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் வலியுறுத்தினார்.

தேசிய கைத்தொழில் அபிவிருத்திக்காக கடந்த காலத்தில் வழங்கப்பட்ட அரசாங்கத்தின் அனுசரணை போதுமானதாக அமையவில்லை என்றும் தேசிய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்து சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களை ஊக்கப்படுத்துதல் மற்றும் அவர்களுக்கு தேவையான வழிகாட்டல்களை வழங்குவதற்கான திட்டம் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-7)

# விஜயதாஸ தொடர்பில் தீர்மானம் எடுக்க குழு



(கொழும்பு)

கூட்டு பொறுப்பை மீறும் ஐக்கிய தேசிய கட்சியின் அமைச்சர்கள் தொடர்பில் தற்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அவர்கள் சம்பந்தமாக கடுமையான தீர்மானம் எடுப்பதற்கு ஐக்கிய தேசிய கட்சியின் மத்திய செயற்குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் அந்தக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் மத்திய செயற்குழு நேற்று முன்தினம் பிற்பகல் அந்தக் கட்சியின் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடியிருந்தது.

இதன்போது விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்கள் கூறுவது சம்பந்தமாகவும் வழக்குகள் தாமதிக்கப்படுவதாக கூறப்படுவது தொடர்பிலும் அதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத்த அமைச்சர் அகில விராஜ் காரியவசம், மத்திய செயற்குழுக் கூட்டத்தில் விஜயதாஸ ராஜபக்ஷ தொடர்பில் உறுப்பினர்களின் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்ததாகவும் இது தொடர்பில் குழுவொன்று அமைத்து குழுவின் பரிந்துரைப்படி தீர்மானம் எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (இ-7)

# மதுபான விலை அதிகரிப்பால் வடக்கு சபை உறுப்பினர் கவலை

இந்த அரசாங்கம் அனைத்துப் பொருட்களின் விலைகளையும் அதிகரித்துள்ளது. குறிப்பாக மதுபானங்களின் விலைகளை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது என வடமாகாண சபை உறுப்பினர் செனவிரட்ன கவலையுடன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கைதடியில் அமைந்துள்ள மாகாண பேரவைச் செயலகத்தில் இடம்பெற்ற விசேட அமர்வின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஒரு போத்தல் சாதாரண மதுபானத்தை கொள்வனவு செய்வதற்கு 1500 ரூபா செலவாகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்போது மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும் சிரிப்புடன் சபையில் இருந்தனர். (மு-89)

# பொலிஸ் விசேட அதிரடிப்படையின் முதலாவது கட்டளை அதிகாரி பலி!

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் போதி லியனகே மரணமடைந்துள்ளார். படி ஒன்றில் சறுக்கி விழுந்ததன் பின்னர் கண்டி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வேளையில் அவர் நேற்றுக்காலை உயிரிழந்துள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் முதலாவது கட்டளை அதிகாரியாக போதி லியனகே 1983 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# எனது வாயை எவராலும் அடைக்க முடியாது-ரஞ்சன்



எனது வாயை எவராலும் அடைக்க முடியாது என பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியில் அவர் இதனைத் தெரிவித் தார்.

கள்வர்கள், ஊழல்மோசடிகளில் ஈடுபடுவோர், கொலைகாரர்கள் மற்றும் மதுபான விற்பனையாளர்களை அம்பலப்படுத்துவதற்கு நான் எடுக்கும் முயற்சியை எவராலும் தடுக்க முடியாது.

1948ஆம் ஆண்டின் பின்னர் இந்த நாட்டில் உருவான மிகவும் ஜனநாயகமான அரசாங்கம் இதுவாகும். இந்த 2020ஆம் ஆண்டை விடவும் நீண்ட காலத்திற்கு ஆட்சியில் இருக்கும்.

தற்போதைய அரசாங்கம் எவருக்கும் தொல்லை கொடுப்பதில்லை. தொழில் வாய்ப்பு வழங்கும் போதும் பிரதான கட்சிகளுக்கு சம சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.(இ)

# மாணவர்களின் கலைத்திறனை இலவசமாக அரங்கேற்றலாம்

(யாழ்ப்பாணம்)

நாட்டியம், சங்கீதம், வீணை மற்றும் கலை வகுப்புக்களை நடத்தும் ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் கலைத்திறனை இலவசமாக அரங்கேற்றச் சந்தர்ப்பம் வகுக்கும் வகையில் நவராத்திரி விழாக் காலத்தில் நாள்தோறும் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகளுடன் நவராத்திரிப் பெருவிழாவை நடத்த இந்து வித்தியா விருத்திச் சங்கம் தீர்மானித்துள்ளது.

இச் சந்தர்ப்பம் பாடசாலைகளுக்கும் ஏனைய இந்து நிறுவனங்களுக்கும் வழங்கப்படும்.

புரட்டாதி மாதம் 4 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி (20.09.2017 முதல் 30.09. 2017) வரை இப்பெருவிழா இடம் பெறும். விண்ணப்பதாரிகளின் தேவையை மதிப்பீடு செய்து சந்தர்ப்பம் ஒதுக்கப்படும்.

இச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்த விரும்புவோர் தயவு செய்து சரஸ்வதி மண்ட அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு தங்களின் விருப்பத்தை எழுத்துமூலம் தெரிவிக்குமாறும் அத்தகைய விருப்பத்தைத் தெரிவிப்போரை அழைத்து நிகழ்ச்சி ஒழுங்குகள் பற்றி ஆவன செய்ய இந்து வித்தியா விருத்திச் சங்கம் நடவடிக்கை எடுக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ரணிலின் தூரநோக்கு" புகைப்படக் கண்காட்சியை ஜனாதிபதி திறந்து வைப்பு



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நான்கு தசாப்தகால அரசியல் வாழ்க்கையின் முக்கியமான சந்தர்ப்பங்களை சித்திரிக்கும் புகைப்படக் கண்காட்சி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது. ரணிலின் தூரநோக்கு எனப் பெயரிடப்பட்டுள்ள இக்கண்காட்சி நாளை 20ஆம் திகதி வரை முற்பகல் 10 மணியிலிருந்து இரவு 8 மணி வரை திறந்திருக்கும். புகைப்படக் கண்காட்சியை திறந்து வைத்த ஜனாதிபதி அதனைப் பார்வையிட்டார்.

# இலங்கைக் கடற்படைத் தளபதியான தமிழர் குறித்து ஜனாதிபதியின் பதிவு

இலங்கை கடற்படையின் புதிய தளபதியாக ரியல் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா நியமிக்கப்பட்டுள்ளமைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வரவேற்பளித்துள்ளார்.

இது குறித்து ஜனாதிபதி தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் சில கருத்துக்களை பதிவிட்டுள்ளார்.



Maithripala Sirisena
@MaithripalaS
Follow

Rear Admiral Travis Sinniah, who has served Sri Lanka Navy with immense loyalty for many decades, took office as the Navy Commander today.

10:29 AM - Aug 18, 2017

7 33 86

ரியல் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா, இலங்கை கடற்படையில் பல தசாப்தங்களாக விசுவாசத்துடன் சேவையாற்றியுள்ளார். இன்று இவர் கடற்படையின் புதிய தளபதியாக பதவியேற்றுள்ளார் என குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்திற்குப் பின்னர் முதன் முறையாக இலங்கையின் முப்படைகளில் ஒன்றான கடற்படைக்கு தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை கடற்படையின் கிழக்கு பிராந்திய கட்டளைத் தளபதியாக கடமையாற்றிய ரியல் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் கடற்படையின் புதிய தளபதியாக நேற்று நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



நல்லூர்க் கந்தன் ஆலயச் சூழலில் நேற்று முன்தினம் மாலை அமைக்கப்பட்ட மணற் சிற்பம்.

# ரயன் ஜயலத் மறியலில்

பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவ செயற்பாட்டாளர்கள் குழுவின் இணைப்பாளர் ரயன் ஜயலத்தை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாலிகாகந்த நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

ரயன் ஜயலத் உட்பட ஐவரை கைது செய்யுமாறு கடந்த 10 ஆம் திகதி மாளிகாகந்த நீதவான் நீதிமன்று பிடியாணை பிறப்பித்திருந்தது.

இந்நிலையிலேயே ரயன் ஜயலத் தனது சட்டத்தரணிகளுடன் நேற்று நீதிமன்றில் ஆஜராகியிருந்தார்.

இந்நிலையில் அவரை எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார். (இ-7)

# நீதி அமைச்சராக சரத் பொன்சேகா

நீதியமைச்சு பதவியிலிருந்து விஜயதாஸ ராஜபக்ஷ விலகினால் அந்த பதவியை பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா அல்லது, அஜித் பீ பெரேராவுக்கு வழங்குங்கள், பிரதி அமைச்சு பதவியை எனக்கு தாருங்கள் என பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக 99வீதம் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் விசேட நீதிமன்றம் ஒன்றை அமைத்து விசாரணை நடத்த பிரதமர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

விஜயதாஸவுக்கு நீதி அமைச்சை விட சிறந்த பதவி ஒன்று வழங்கப்படவுள்ளது. இதனால் அவராகவே முன்வந்து நீதி அமைச்சு பதவியை இராஜினாமா செய்வார் என்று எதிர்பார்ப்பதாகவும் ரஞ்சன் தெரிவித்தார்.

குறிப்பாக பெண்கள் விவகாரம் தொடர்பான அமைச்சே விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு பொருத்தமாக இருக்கும். அவ்வாறான சாதாரண அமைச்சை அவர் சிறப்பாக நடத்திச்செல்வார் என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும், நீதி அமைச்சுப்பதவி என்பது பண்பு இல்லாத திருடர்களை சிறையில் அடைப்பவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

இதன்படி சரத் பொன்சேகா, அஜித் பீ பெரேரா அல்லது எனக்கு வழங்குங்கள். அல்லது பிரதி அமைச்சு பதவியையாவது எனக்கு வழங்குங்கள் என தாம் கோரிக்கை விடுத்ததாக பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# நகரச்சுத்தம் மிக முக்கியம்

நாம் வாழ்கின்ற நகரத்திற்குரிய அழகியலைக் கொடுக்கின்ற முதன்மையான காரணிகளுள் நகரச் சுத்தம் என்பது மிக முக்கியமான தொன்றாகும். நகரச்சுத்தமானது மக்களுடைய வாழ்வியக்கத்திற்கும் ஆரோக்கியமான சமூகத்திற்குமான பிரதான காரணியாகின்றது. வெறுமனவே நகரச் சுத்தம் என்பது மாநகர சபை சார்ந்த செயற்பாடின்றி மாநகர வாழ் மக்கள் ஒவ்வொருவருக்குமான தலையாய கடமையாக விளங்குகின்றது. இச் சீரிய திட்டத்தை மக்கள் மயப்படுத்தி மக்களுக்கூடாக அதனைச் செயற்படுத்துவதும் அவற்றிற்கான பணிகளைச் செய்து கொடுப்பதும் மாநகர சபையின் பிரதான கடமையாகின்றது. நகரச் சுத்தமானது யாழ்ப்பாணம் பற்றிய எண்ணத்தை மேலும் மெருகூட்டி மிளிரச் செய்யும் ஒன்றாகும்.

அந்த வகையில் எமது மாநகர சபையானது திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவத்தை மிகவும் சீராகவும் நேர்த்தியாகவும் வெவ்வேறான திட்டங்களுடன் செயற்படுத்த பல முயற்சிகளை எடுத்து வருகின்றது. எமது யாழ்ப்பாண மாநகரின் சனத் தொகை சாராசரியாக 92000 ஆகக் காணப்படுகின்றது. மேலும் வெவ்வேறு தேவைகளுக்காக பல்வேறு பிரதேசங்களிலிருந்து யாழ்ப்பாண நகரிற்கு வருகை தரும் மக்களின் சனத்தொகையும் அதிகமானதே. இதனால் எமது பிரதேசத்தில் சேரும் கழிவுகளும் பெருந்தொகையானதென்பது தவிர்க்க முடியாததொன்றே.

எமது சபையால் சமையலறைத் திண்மக் கழிவுகள் சேகரிப்பு, ஒழுங்குமுறைமையொன்றின் கீழ் அகற்றப்பட்டு வருகின்றன. வீடுகளில் முறையாகச் சேகரித்து வைத்து எமது கழிவகற்றல் வாகனங்களில் சமர்ப்பிக்க முடியும். உணவு விடுதிகள் தாம் உருவாக்குகின்ற கழிவுகளின் அளவுகளுக்கேற்ப கட்டணம் செலுத்தி அவற்றை அகற்ற முடியும். அதே போன்று வீட்டு உரிமையாளர்களும் கட்டணம் செலுத்தி வீட்டு இடிபாடுகள், தாவரக் கழிவுகள் போன்றவற்றை அகற்றும் ஏற்பாடும் எம்மிடம் உண்டு. அவை தவிர்ந்த உக்காத அபாய கரமான கழிவுகளான பற்ற றிகள், பொலித்தீன், பிளாஸ் ரிக், மின்குமிழ்கள் மற்றும் இலத்திரனியல் கழிவுகள் என்பன வற்றைத் தரம் பிரித்து எமது சேகரிப்பு மையங்களில் நேரடியாக வழங்க முடியும். இச்சேகரிப்பு மையங்களை நிறுவி திண்மக் கழிவு சேகரிப்பினை முறைமைப்படுத்துவதற்காக ரூபா 26 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

இச் சேகரிப்பு மையங்கள் நல்லூர், குருநகர், பாஷையூர், வண்ணார் பண்ணை, அரியாலை, காக்கைதீவு ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

மிகவும் அபாயகரமான கழிவுகளை (சிகிச்சைக் கழிவுகள், வாகன சுத்திகரிப்புக் கழிவுகள், சாயக்கழிவுகள்) உருவாக்குபவர்கள் அவற்றை அகற்ற சிறப்புப் பொறிமுறைகளைத் தாமாகவே உரிய தொழில்நுட்ப நிறுவனங்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்று நிறுவிக் கொள்ள வேண்டும்.

இத் திண்மக்கழிவு சேகரிப்புச் செயற்பாட்டில் தடங்கல்கள் ஏதும் இருப்பின் மாநகரசபையுடன்தொடர்புகொண்டு அதனை நிவர்த்திக்கலாம். வீதிகளின் ஓரங்களிலும் மூலைகளிலும் தரம் பிரிக்காமல் போடப்படும் திண்மக் கழிவுகளை சேகரித்துத் தரம் பிரிப்பதென்பது மிகக்கடினமான காரியம் ஆகும். 'எனது பின்முற்றத்தில் இல்லைத்தானே' (Not in my backyard) என்ற ஒருவித எண்ணமே அதனை வெளியில் வீசுவதற்குக் காரணமாகின்றது. விலங்குகள் அவற்றை வீதியில் இழுத்துப் பரப்புகின்றன.

சுத்தம் செய்யப்பட்ட சில மணித்துளிகளிலேயே கழிவுச் சிதறல்களால் கண்கொண்டு பார்க்க முடியாத இடமாகிப் போகின்றன நம் வீதிகளும் ஒழுங்கைகளும். மனிதர் சிறிது இளைப்பாறலாமென நிற்கும் மரநிழல் குடைகளும்.

இவ்வாறான செயற்பாடு வீட்டுமுற்றத்திற்கு வருபவரை வீதியிலேயே அசுத்தமாக்கி வீட்டினுள் நோய்க்கிருமிகளைக் காவி வரும் செயற்பாட்டிற்கு உதவுகிறது என்பதை வீசுபவர்கள் சிந்திக்க வேண்டும்.

இத் திண்மக் கழிவகற்றல் செயற்பாடுகளை சீரிய முறையில் ஒவ்வொருவரும் கூட்டுப் பொறுப்புணர்வோடு மேற்கொள்ளும் பட்சத்தில் தொடர்ந்து வரும் மழைக் காலங்களில் எமது மாநகரை டெங்கு போன்ற நோய் நொடிகளற்ற அழகிய பிரதேசமாக மிளிரவைக்க முடியும் என்பது நிதர்சனமான உண்மை.

பொ.வாகீசன்
ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வஞ்சகப் பேச்சால் மக்களைக் குழப்பும் மகிந்த துரோகி

## மங்கள ஆவேசம்

வஞ்சகப் பேச்சால் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்திவரும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தன்னை தோல்வியடையச் செய்த மக்களை பழிவாங்கும் நோக்கில் தொடர்ந்தும் செயற்படுகின்றார் என நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மங்கள சமரவீர நேற்று முன்தினம் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அம்பாந்தோட்டை துறைமுகம் தனியார்மயமாக்கப்பட்டதன் ஊடாக நாட்டிற்கு பாரிய அழிவு ஏற்பட்டுள்ளதாக அறிக்கைவிடும் மகிந்த ராஜபக்ஷ தனது ஆட்சிக் காலத்தில் தேசிய வளங்களை மீளப் பெறமுடியாதவாறு அந்நிய நாடுகளுக்கு விற்பனை செய்ததை மறந்து விட்டார்.

கொழும்பு துறைமுகத்தில் ஒரு பகுதியை 85:15 என்ற வீதத்தின் அடிப்படையில் சீனாவிற்கு மகிந்த ராஜபக்ஷ வழங்கினார்.

இதே போன்றதொரு வீதத்தில் அம்பாந்தோட்டை துறைமுகத்தையும் சீனாவிற்கு வழங்குவதற்கு 2014 ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஒன்று செய்தார்.

இந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் மேலும் 350 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான தொகையை சீனாவிற்கு கடனாக செலுத்தும் நிலை ஏற்பட்டிருக்கும்.

10 ஆண்டுகள் நாட்டை ஆட்சி செய்து தோல்வியடைந்து வீட்டிற்கு சென்ற முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆவார். இன, மத வாதத்திற்கு மீண்டும் நாட்டை பலிகொடுத்த நிலையிலேயே அதிகாரத்தை விட்டுச் சென்றார்.

தற்போது முன்னெடுக்கப்படுகின்ற ஊழல் மோசடி விசாரணைகளின் பின்னர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தினர் வசம் இருந்த சட்டவிரோதமாக சேர்த்துக் கொள்ளப்பட்ட 500 கோடிக்கும் அதிகமான சொத்துக்கள் நீதிமன்றம் மற்றும் அரச உடைமைகளாக காணப்படுகின்றன.

தானோ தனது குடும்பத்தினரோ ஒரு ரூபாயேனும் திருடியிருந்தால் வயிற்றை கிழித்துக்கொள்வோம் எனக் கூறிய மகிந்த ராஜபக்ஷ தற்போது அந்த உறுதிமொழியையும் மறந்து விட்டார்.



உத்தேச புதிய அரசியலமைப்பு தொடர்பில் போலியான பிரசாரங்களை முன்னெடுப்பதோடு அரச சொத்துக்கள் தனியார்மயமாக்கப்படுகின்றன.

தேசிய சொத்துக்கள் அந்நிய நாட்டவர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றது என மக்கள் மத்தியில் குழப்பத்தை தோற்றுவித்து வருகின்றார்.

விகாரைகளில் அரசியல் செய்து நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் பாரிய துரோகத்தை மகிந்த ராஜபக்ஷ செய்கின்றார் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# தங்கக் கடத்தல்; அரச புலனாய்வு அதிகாரி கைது

சுமார் இரண்டு கிலோகிராம் தங்க ஆபரணங்களை சட்ட விரோதமான முறையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து வெளியே விடுவிப்பதற்கு முயற்சித்த அரச புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம்இரவு கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்த விமானம் மூலம் சிங்கப்பூரில் இருந்து கொண்டுவரப்பட்ட சுமார் 9.1 மில்லியன் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களை சூட்சுமமான முறையில் விமான நிலையத்தில்இருந்து வெளியே கொண்டுவர புலனாய்வுப் பிரிவு அதிகாரி முயற்சித்துள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதன்பின்னர் சந்தேக நபர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# புத்தளத்தில் குப்பைகளை கொட்டும் தீர்மானத்தை உடன் கைவிடுங்கள்

கொழும்பில் சேகரிக்கப்படும் குப்பைகளை புத்தளம் அறுவைக்காடு பிரதேசத்தில் கொட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. எனினும் அங்கு குப்பை கொட்டுவதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளை கைவிடுமாறு அரசாங்கத்திடம் தாம் வேண்டுகோள் விடுப்பதாக முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் பொரளையிலுள்ள என்.எம். பெரேரா நிலையத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பில் சேகரிக்கப்படும் குப்பைகளைக் கொட்டுவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ள புத்தளம் அறுவைக்காடு பிரதேசமானது. அப்பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தில் முக்கிய வகிபாகமுள்ள பகுதியாகும்.

அப்பிரதேசத்தை பொன்பரிப்புபற்று என மக்கள் அழைக்கின்றனர். எனவே அந்த பொன்பரிப்பு மண்ணை குப்பை பரப்பும் மண்ணாக மாற்றக்கூடாது என அரசாங்கத்திடம் வேண்டிக்கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1166


சைந்தவி




வதனி




கரிகரன்



பிரியங்கா




நிருத்திகா



நர்மதா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த பிக்போஸ்




## புதுவரவு வதந்தியே

பிக்போஸ் நிகழ்ச்சியில் புதுப்புது மாற்றங்கள் நடந்து வருகின்றன. ஓவியா சென்றதுமே பேர்த்திகள் முதல் பாட்டி வரை பல வீடுகளில் புலம்பி வருகின்றனர். இளைஞர்கள் கூட வீ வோண்ட் ஓவியா என சொல்லி வருகின்றனர். இன்னமும் ஓவியாவிற்கு ஆதரவுகள் குவிந்து வருகின்றன. ஏற்கனவே பிந்து மாதவி எண்ட்ரி கொடுத்த நிலையில், ஹரிஷ் கல்யாண் சுவர் ஏறி வீட்டிற்குள் குதித்தார்.

ஆனால் நீண்ட நாட்களாக விடிவி கணேஷ் பிக்போஸ் வீட்டிற்குள் வரப்போகிறார் என்ற தகவல்கள் சுற்றி வருகின்றன. ஆனால் பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் அது பெரும் வதந்தி.

என்னிடம் கேட்டார்கள். ஆனால் எனக்கு சினிமாப் பட வேலைகள் இருப்பதால் அங்கே போகவில்லை எனக் கூறியுள்ளார்.

## சுஜாவின் மறுபக்கம்




பிக்போஸ் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட போட்டியாளர்களில் இப்போது புதியதாக நடிகை சுஜா வந்துள்ளார். கிளீனிங் கமிட்டியில் சேர்ந்து கொண்டவர் பணிகளை சிறப்பாக செய்து வந்தார். பின் சினேகனோடு தன்னை பற்றிய விடயங்களை பகிர்ந்து கொண்டார்.

தன் சிறுவயதிலேயே பெண் குழந்தை என்பதால் எங்களை என் அப்பா விட்டுவிட்டு போய்விட்டார். நாங்கள் அம்மா மற்றும் தாத்தாவின் வளர்ப்பில் இருந்தோம். 14 வயதிலேயே குடும்ப பொறுப்பை சுமக்க ஆரம்பித்து விட்டேன். இன்று நினைத்தாலும் பெருமையாக இருக்கிறது.

நான் தான் குடும்ப தலைவி. 3 வருடங்கள் படம் இல்லாமலே மிகவும் சிரமப்பட்டேன். என்னுடைய அம்மாவை வைத்தியசாலைக்கு அழைத்து செல்லும் போது திடீரென தொலைபேசி அழைப்பு வந்தது. அப்படி தான் தொடர்ந்து பாடல்களில் ஆடிவந்தேன். ஒரு கட்டத்தில் என்னை நானே திரும்பி பார்த்தேன். பின் அதுபோல நடிப்பதை விட்டுவிட்டேன் என கூறினார். ஒரு கட்டத்தில் சினேகனை, என்ன முறச்சு பாக்குறீங்க என கேட்டார். என்னுடைய பார்வையே அப்படித்தான் என சொல்லாமல் சொல்லி சமாளித்தார் சினேகன். உடனே பின் சுஜா என்ன ஏதும் கவலையா என கேட்டார்.

சினேகனும் ஆம், நிறைய இருக்கிறது என சொல்ல, எல்லோருக்கும் அட்வைஸ் பண்ணும் அவருக்கே சுஜா, ரிலீஸ் பண்ணிடுங்க. ஏன், பிரசர் கொடுக்குறீங்க என அட்வைஸ் செய்தார்.

## ஹரிஷின் குறும்பு



பிக்போஸ் வீட்டில் தற்போது புது வரவுகள் சிலர் வர தொடங்கியுள்ளனர் . அதில் நடிகர் ஹரிஷ் கல்யாண் பிக்போஸ் வீட்டில் நுழைந்தார்.

வீட்டிலில் நுழைந்தவுடன் பிக்போஸ் எனக்கு பெண்கள் சமைத்து கொடுக்கும் டாஸ்க் கொடுத்திருக்கிறார் என்றார். காயத்ரி , பிந்து ஒரு அணியாகவும் ரைசா, சுஜா ஒரு அணியாகவும் செயற்பட்டு ஹரிஷ்க்கு உணவு ரெடி செய்தனர் .

உடனே ஹரிஷ்க்கு சப்பாத்தி சமைத்து கொடுத்தனர், சாப்பிட்டு முடித்த பிறகுதான் இது பிக்போஸ் கொடுத்த டாஸ்க் இல்லை, நான் உங்களை ஏமாற்றினேன் என்று கூறினார். இதை அறிந்த ரைசா அதிர்ச்சியடைந்தார், மேலும் நாளைக்கு ஹரிஷை சும்மா விடக் கூடாது என்று வீட்டில் உள்ள மற்றவர்களிடம் ரைசா தெரிவித்தார்.

## மீண்டும் சண்டை

BiggBoss வீட்டில் எப்போதும் அமைதியாக இருப்பவர் சிநேகன். மற்றவர்கள் கஷ்டத்தால் இருந்தால் ஓடிப்போய் உதவுவார்.

தற்போது வீட்டில் பிந்து மாதவியை தொடர்ந்து, நடிகை சுஜா, நடிகர் ஹரிஷ் கல்யாண் ஆகியோர் சென்றுள்ளனர். இந்த நிலையில் போட்டியாளர்களுக்கு கடுமையான போட்டி ஒன்று நடைபெற்றுள்ளது. அதில் தோற்ற அணியினருக்கும், மற்ற அணியினருக்கும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அதோடு ஆரவ், சிநேகன் ஆகியோர் இடையில் கடும் சண்டை ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது.

## வில்லி போகமாட்டார்



பிக்போஸ் வீட்டில் இருந்து கடந்த வாரமே வெளியே போயிருக்க வேண்டியவர் காயத்ரி. ஆனால் பிக்போஸ் ஒரு வித்தியாசமான டாஸ்கை கொடுத்து காப்பாற்றி விட்டார்.

இந்த வாரம் காயத்ரி நாமினேஷன் லிஸ்டில் வந்து விட்டார். எனவே கண்டிப்பாக இந்த வாரம் வெளியேறுவார் என்று தான் அனைவரும் எதிர் பார்த்துள்ளனர்.

ஆனால் ஓவியா வெளியேறும் முன்பு எப்படி நடந்து கொண்டாரோ அதேபோலத்தான் இந்த வாரம் ரைசா நடந்து கொள்கிறார். எந்த ஒரு டாஸ்கையும் செய்ய மறுக்கிறார்.

மேலும் கன்பஷன் றூமுக்கு சென்று பிக்போஸிடம் நான் இங்கே இருக்க மாட்டேன். வெளியே செல்ல வேண்டும். இந்த இடம், மொழி எனக்கு புதிதாக உள்ளது என்று புதிதாக வந்தவர் போல கூறுகிறார்.

இதனை எல்லாம் வைத்து பார்க்கும் போது காயத்ரி வெளியே போக மாட்டார் என்று தெரிகிறது. மேலும் பிக்போஸ் வீட்டில் வில்லி ஒருவர் இருந்தால்தான் நிகழ்ச்சி பரபரப்பாக நகரும்.

எனவே காயத்ரியை பிக்போஸ் வீட்டில் இந்த வாரம் வெளியே அனுப்ப மாட்டார்கள் என தெரிகிறது. இது ரசிகர்களுக்கு பெரும் அதிர்ச்சியை அளித்துள்ளது.

## சக்தியின் நன்றி



இறுதியாக BiggBoss நிகழ்ச்சியில் இருந்து வெளியேறியவர் சக்தி. தற்போது இவர் நிகழ்ச்சி முழுவதையும் பார்த்துவிட்டு தனது கருத்தை தெரிவித்துள்ளார்.

அதில், பார்வையாளர்களுக்கு நன்றி தெரிவித்த அவர், பெண்களுக்கு எதிராக ஏதாவது கருத்தை தான் தெரிந்தோ தெரியாமலோ கூறியிருந்தால் அதற்கு உலகம் முழுவதிலும் உள்ள பெண்களிடம் வருத்தம் தெரிவிப்பதாக கூறியுள்ளார்.

BiggBoss வீடு பல புதிய அனுபவங்களை தந்ததாக கூறிய சக்தி தினமும் ஒன்றரை மணி நேரம் மட்டும் நிகழ்ச்சியை பார்க்கும் பார்வையாளர்கள் இதன்மூலம் மட்டுமே யார் நல்லவர்? அல்லது யார் கெட்டவர் என்பதை முடிவு செய்ய முடியாது என்று கூறியுள்ளார்.

அதேநேரத்தில் எல்லாப் பிரச்சினைகளுக்கும் பதில் சொல்ல தான் தயாராக இல்லை என்றார். தற்போதுதான் தனக்கு ரியல் கேம் ஆரம்பித்துள்ளதாகவும், இதற்காக தொலைக்காட்சி மற்றும் BiggBoss குழுவினர் எல்லோருக்கும் நன்றி கூறிக் கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 17.08.2017-16.09.2017



விட்டுக் கொடுத்துச் செல்வதே வாழ்க்கை என்று சொல்லும் துலாம் இராசி அன்பர்களே!

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்ரன் 9ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். 3,6 இற்கு அதிபதியான குருபகவான் 12இல் சஞ்சரிக்கிறார். எனவே முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கும் சூழ்நிலை உருவாகும். முக்கிய புள்ளிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். விபரீத இராஜ யோகம் செயற்படுவதால் தனவரவிற்கு பஞ்சம் இருக்காது.

உத்தியோகத்தில் எதிர்பாராத விதத்தில் ஏற்பட்ட இடமாற்றத்தில் இருந்து விடுபட்டு, மீண்டும் பழைய இடத்திற்கே வந்து பணி புரியும் யோகம் உண்டு. மேலதிகாரிகளின் பகை மாறும். ஓய்வின்றி உழைத்தும் பலனில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு, இனி மகிழ்ச்சியடையும் விதத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறப் போகிறது.

குரு- சந்திர யோகத்தோடு இந்த மாதம் தொடங்குவதால், குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுகள் கைகூடும். உணவுக் கட்டுப்பாட்டால் உடல் நலத்தை சீராக்கிக் கொள்வீர்கள். மனக்குழப்பத்தை அதிகப்படுத்திய எதிரிகள் இனி விலகுவர். செவ்வாய் நீச்சம் பெற்றிருப்பதால் சொத்துகளால் பிரச்சினைகள் உருவாகலாம். சொந்த பந்தங்களிலும் ஒருசிலர் உங்களுக்கு போட்டியாக மாறலாம்.

11 ஆம் இடத்தில் சூரியன் இருப்பது யோகம் தான். உத்தியோகம் சம்பந்தமாக வெளிநாடு சென்று பணிபுரிய விண்ணப்பித்திருந்தால் அது கைகூடும். இராகு-கேதுக்களின் ஆதிக்கம் நல்ல நிலையில் இருக்கிறது. தொழில் ஸ்தானத்தில் இருக்கும் இராகு, தொழில் வளத்தை மேம்படுத்திக் கொடுக்க, இராகுவிற்குரிய ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது.

அதேநேரத்தில் இம்மாதம் பெயர்ச்சியாகும் குரு, உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கப் போவதால் ஒரு சிலருக்குத் திடீரென இடமாற்றம், ஊர்மாற்றம், வீடுமாற்றம் உருவாகலாம். வரும் மாற்றங்களை ஏற்றுக் கொள்ளாவிட்டால் பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும். காரணம் ஜென்ம குருவின் ஆதிக்கமாகும். எனவே குரு வழிபாட்டை பெயர்ச்சிக்கு முன்னதாகவே சிறப்பாகச் செய்து கொண்டால் பிரச்சினைகளில் இருந்து விடுபட இயலும். மன நிம்மதி கிடைக்கும்.

## பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும்

கடக சுக்ரனும், சிம்ம சுக்ரனும்

ஓகஸ்ட் 22 ஆம் திகதி கடகத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். அதன்பிறகு செப்டம்பர் 15 ஆம் திகதி சிம்மத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இந்த இரண்டு பெயர்ச்சிகளுமே உங்களுக்கு நன்மைகளையே உருவாக்கித் தரும். நீதிமன்றத் தீர்ப்புகள் உங்களுக்கு சாதகமாக அமையும். நிலையான வருமானம் வந்து சேரும். பெரிய மனிதர்களின் தொடர்பால் நல்ல காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். அரசு வழிச் சலுகைகள் எதிர்பார்த்தபடி கிடைக்கும். குழந்தைகளுக்கான நகைகளை வாங்கிச் சேர்க்கும் யோகம் உண்டு.

சிம்ம செவ்வாய் சஞ்சாரம்!

உங்கள் இராசிக்கு 2,7 இற்கு அதிபதியான செவ்வாய் ஓகஸ்ட் 28 ஆம் திகதி இலாப ஸ்தானத்திற்கு வருகிறார். இக்காலத்தில்




வாழ்க்கைத் துணையின் உத்தியோகம், தொழில் சம்பந்தமாக ஏதேனும் நீங்கள் முயற்சி செய்திருந்தால் அது கைகூடும். வெளிநாட்டில் இருக்கும் சொத்துகள் விற்பனையாகி ஒருபெரும் தொகை உங்களுக்கு கிடைக்கலாம். மூத்த சகோதரர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு கைகொடுத்து உதவுவர்.

சிம்ம புதன் சஞ்சாரம்!

செப்டெம்பர் 2 ஆம் திகதி சிம்மத்திற்கு புதன் வருகிறார். இதன் விளைவாக உறவினர்களுக்காக ஏதேனும் கொடுத்து உதவும் சூழ்நிலை உருவாகலாம். குறிப்பாக மாமன், மைத்துனர் வழியில் இல்லங்களில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிகளுக்கு பொருளுதவி செய்ய நேரிடும். பூர்வீக சொத்துப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும்.

குருப்பெயர்ச்சிக் காலம்!

உங்கள் இராசிக்கு செப்டெம்பர் 2 ஆம் திகதி குருபகவான் பெயர்ச்சியாகி வருகிறார். இந்தக் காலத்தில் எண்ணற்ற மாற்றங்கள் வந்து சேரும். ஜென்ம குருவிற்கு பரிகாரங்கள் செய்து கொள்வது நல்லது. வரவைக் காட்டிலும் செலவு கூடும். வீடு மாற்றங்கள் உருவாகலாம். வியாபார போட்டிகள் அதிகரிக்கும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறும் மாதம் இது. ஆனால் குருப்பெயர்ச்சிக்குப் பிறகு கூடுதல் விரயம் ஏற்படலாம். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். தாய்வழி ஆதரவு உண்டு. சகோதரர்களில் ஒருசிலர் உங்களை விட்டு விலகினாலும், மற்றச் சகோதரர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். பிள்ளைகளின் திருமண வாய்ப்புகள் கைகூடலாம். கடல் தாண்டும் முயற்சிக்கும் வழிவகுத்துக் கொடுக்கலாம். மருத்துவச் செலவு அதிகரிக்கும். சனிக்கிழமை தோறும் அனுமனை வழிபட்டால் சந்தோசம் நிலைக்கும். உத்தியோகத்திற்காக முயற்சித்தவர்களுக்கு புதிய வாய்ப்புகள் வந்து சேரும். விநாயகர் சதுர்த்தியன்று விநாயகப் பெருமானை முறையாக வழிபடுவது நல்லது.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



சொல்லும் சொற்களையெல்லாம் வெல்லும் சொற்களாக மாற்றும் விருச்சிக இராசி அன்பர்களே!

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் செவ்வாய் புதனோடும், இராகுவோடும் இணைந்திருக்கிறார். எனவே பொருளாதார நிலை உயரும்.

புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அதிகாரத்துவ யோகம் பெற்றவர்களின் அனுகூலம் வந்து சேரும். மதிப்பும், மரியாதையும் உயரும். நண்பர்களின் ஒத்துழைப்போடு பல நல்ல காரியங்களைச் செய்து முடிப்பீர்கள்.

தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சூரியன் பலம் பெற்று விளங்குவதால், தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். எதிர்பார்த்த இலாபம் இதயம் மகிழும் விதத்தில் கிடைக்கும். வேலையாட்களின் ஒத்துழைப்பும், வீட்டில் உள்ள குடும்ப உறுப்பினர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும் மாதம் இது. உங்கள் உணர்வுகளை புரிந்து கொண்டு அதற்கு ஏற்ற விதம் தங்கள் குணங்களை மாற்றிக் கொண்டு செயற்படுவர்.

அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கும். நீண்ட நாட்களாக முடிவடையாத சில காரியங்கள், இப்பொழுது திடீரென முடிவாகி மகிழ்ச்சியை வரவழைத்துக் கொடுக்கும். வங்கிகளில் உதவிகளை எதிர்பார்த்திருப்பவர்களுக்கு அது கைகூடும். வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைக்க சூரியபலம் கைகொடுக்கும் என்பதால், ஞாயிறு தோறும் சூரிய வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

சமீபத்தில் பெயர்ச்சியான இராகு 9 ஆம் இடத்தில் வருவதன் மூலம் ஒளிமயமான எதிர்காலம் அமையப்போகிறது. அதற்கு முன் ஏற்பாடாக இராகு- கேதுக்களுக்குரிய பிரீதியையும், நாகசாந்திப் பரிகாரங்களையும் இம்மாதம் அனுகூல நாளில் செய்து கொள்வது நல்லது. அதேநேரத்தில் விநாயகர் சதுர்த்தி அன்று விரதமிருந்து ஆனைமுகப்பெருமானை வழிபட்டால், ஆனந்தத்தை வரவழைத்துக் கொள்ள இயலும்.

## வசதி வாய்ப்புக்கள் அதிகரிக்கும்

கடக சுக்ரனும், சிம்ம சுக்ரனும்!

ஓகஸ்ட் 22 ஆம் திகதி கடக இராசிக்கு சுக்ரன் செல்கிறார். 7.12 இற்கு அதிபதியான சுக்ரன் 9இல் சஞ்சரிக்கும் பொழுது, பயணங்களால் பலன் கிடைக்கும். புதிய வாகனம் வாங்க விரும்புவீர்கள்.

பூர்வீக சொத்துகளில் பெண்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். செப்டெம்பர் 15 ஆம் திகதி சிம்மத்திற்கு சுக்ரன் செல்லும் பொழுது, மிகுந்த யோகத்தைக் கொடுக்கும். அரசுவழி அனுகூலங்களும் ஆதாயம் தரும். காரியங்களும் ஏராளமாக நடைபெறும். வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும் நேரமிது.

சிம்ம செவ்வாயின் சஞ்சாரம்!

ஓகஸ்ட் 28 ஆம் திகதி சிம்மத்திற்கு




செவ்வாய் செல்கிறார். இது ஒரு அற்புதமான நேரம். இராசிநாதன் செவ்வாய் 10 ஆம் இடத்தில் பலம்பெற்ற சூரியனோடு இணையும் பொழுது தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். பட்டம், பதவிகளால் பெருமையும், பாராட்டு மழையில் நனையும் வாய்ப்பும் உருவாகும். திட்டங்கள் அனைத்தும் வெற்றி பெறும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு அதிகாரப் பொறுப்புகள் கிடைக்கும்.

சிம்ம புதனின் சஞ்சாரம்!

செப்டெம்பர் 2 இல் சிம்மத்திற்கு வரும் புதனால், தொழில் வளர்ச்சி மேலோங்கும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். உடன்பிறப்புகளின் இல்லங்களில் நடைபெறும் விழாக்களை முன்னின்று நடத்துவீர்கள். வெளிநாட்டு முயற்சிகள் வெற்றி தரும்.

குருப்பெயர்ச்சி காலம்!

உங்கள் இராசிக்கு செப்டெம்பர் 2 ஆம் திகதி குருப்பெயர்ச்சியாகி துலாம் இராசிக்கு செல்கிறார். அதன் பார்வை 4,6,8 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே சுகங்களும், சந்தோசங்களும் வந்து சேரும்.

பயணங்களால் உங்களுக்கு பலன் கிடைக்கும். வீடு வாங்கும் யோகம் அல்லது கட்டும் யோகம் உண்டாகும். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். இடமாற்றம், ஊர்மாற்றம், இலாகா மாற்றங்கள் எண்ணியபடி வந்து சேரும். வருமானம் திருப்திகரமாக இருக்கும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் நன்மைகள் அதிகம் நடைபெறும் மாதமாகும். சுபவிரயங்கள் அதிகரிக்கும். கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் கூடும். பிள்ளைகளால் பெருமை சேரும்.

குழந்தைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிட்டும். உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. உத்தியோக மாற்றங்களால் நன்மை கிடைக்கும். வாகனம் வாங்கும் யோகம் உண்டு. விநாயகர் வழிபாடு வெற்றியை வழங்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## நடப்பதெல்லாம் நன்மைக்கே

காட்டு ராஜா சிங்கத்தின் குகை வாசலில் ஏக்கப்பட்ட மிருகங்களின் கூட்டம். காட்டு ராஜா வேட்டையாடச் சென்றபோது கால் விரலில் அடிபட்டு விரல் துண்டாகி விட்டதென்று அறிந்து துக்கம் விசாரிக்கத்தான் காட்டுப் பிரஜைகளான மிருகங்கள் கூடியிருந்தன. ஒவ்வொரு மிருகமாக வரிசையில் நின்று குகையின் உள்ளே சென்று சிங்க ராஜாவைப் பார்த்து விட்டுத் திரும்பின.

சிங்கராஜா காலில் பலமான கட்டுடன், கட்டிலில் படுத்துக் கிடந்தது. அருகே சிங்கராணி, வழியும் கண்ணீரும் சிந்திய மூக்குமாக அமர்ந்து இருந்தது.

ஒவ்வொரு மிருகமாக வரிசையாகச் சென்று கொண்டிருந்தபோது, வரிசையின் இடையே வந்து, புகுந்து கொண்ட குள்ளநரி, சிங்கராஜாவின் அருகே சென்றதும் பெருமூச்சு விட்டபடி "ஊம் நடப்பது எல்லாம் நன்மைக்கே" என்றது. சிங்கராஜாவுக்கு கடுங்கோபம் வந்துவிட்டது.

நமது காலிலுள்ள ஒரு விரலே போய்விட்டது. இந்தக் குள்ளநரி நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று கூறுகிறதே. "பிடி அதை அடைத்துவை குகைச்சிறையில்!" எனக் கட்டளை இட்டது சிங்கராஜா.

சிப்பாய்க் குரங்குகள் பாய்ந்து நரியைப் பிடித்து இழுத்துச் சென்றன.

"ஒவ்வொரு காரியமும் நமது நன்மைக்குத்தான் நடக்கிறது என்ற உண்மையைத்தானே சொன்னேன்" என்று புலம்பியபடி சென்றது குள்ளநரி.

சிங்கராஜாவின் காலிலுள்ள புண் குணமாவதற்கு மூன்று மாதகாலம் கடந்தது. காலில் ஒருவிரல் இல்லாமையால் சிங்கராஜா கம்பீரமாக நடக்க இயலாமல், நொண்டி நொண்டி நடந்தது. அதனால் மிருகங்கள் எல்லாம் மறைமுகமாக "நொண்டி ராஜா" என அழைத்தன.


இப்படிச் சிங்கராஜாவை எல்லாரும் கேலி செய்வதைக் கேட்டு, சிங்காராணிக்கு மிகுந்த வருத்தம். என்ன செய்வது? இந்தப் பட்டத்தைச் சூட்டியது எந்த மிருகம் என்பது தெரிந்தால், இளவரசன் சிங்கக்குட்டியிடம் தண்டனை கொடுக்கச் சொல்லலாமே என நினைத்தது.

உண்மையில் இப்படி பெயர் வைத்தது, குறும்புக்கார முயல் என்பது எவருக்கும் தெரியாது.

சிறையில் அடைபட்டிருந்த குள்ளநரிக்கு, சைவ உணவே தினசரி ஒரு வேளை தரப்பட்டது. காட்டுக் கிழங்கையும், கனிகளையும் பார்த்தாலே குள்ளநரிக்கு குமட்டிக் கொண்டு வரும். என்ன செய்வது? வாயை வைத்துக்கொண்டு சும்மா இருக்காமல், வார்த்தையைக் கொட்டிவிட்டு, வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்டோமே என ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தது குள்ளநரி.

வெகுநாட்களாகியும் குணமாகாமல் காலை நொண்டிக் கொண்டே ஒரு நாள் காட்டில், வெகுதூரம் வேட்டைக்கு வந்துவிட்ட சிங்கம், ஒரு இடத்தில் திறந்து வைக்கப்பட்டிருந்த ஒரு கூண்டுக்குள், ஆட்டுக்குட்டி ஒன்று இருந்ததைக் கண்டது. ஆவலுடன் ஆட்டுக்குட்டியின் மீது பாய்ந்து, கடித்துக் குதறித் தின்றது.

தின்று முடிந்து, ஏப்பம் விட்டபடி திரும்பிய சிங்கம் அந்த இரும்புக் கூண்டில் கம்பிக்கதவால் மூடப்பட்டிருந்ததைக் கண்டு, திகைத்தது. மடத்தனமாக கூண்டுக்குள் அகப்பட்டுக் கொண்டோமே என்று நினைத்து வேதனைப்பட்டது. ஆத்திரத்தில் கர்ஜனை செய்தது. அப்போது கூண்டில் அடைபட்ட சிங்கத்தை தங்கள் வண்டியில் கட்டி இழுத்துச் சென்ற காவலர்கள், "நம் இளவரசர் கேட்டபடி அவர் விளையாடுவதற்கு ஒரு சிங்கம் கிடைத்துவிட்டது. இதைப் பார்த்தால் மிகவும் மகிழ்ச்சியடைவார். இளவரசரின் மகிழ்ச்சியைக் கண்டு மன்னர் நமக்குப் பரிசுகள் கொடுப்பார்" என்றெல்லாம் பேசிக்கொண்டே அரண்மனையை அடைந்தனர்.



' கூண்டிலிருந்த சிங்கத்தை இறக்கியபோதுதான் அது நொண்டி நொண்டி நடந்ததை அறிந்தனர்.

இதைக்கண்டு வருந்திய அவர்கள், "இது ஊனமுற்ற சிங்கம். இதை நம் இளவரசர் விளையாடப் பழக்கப்படுத்த முடியாது. "எனவே இதைக் காட்டில் கொண்டு போய் விட்டுவிடுவதே நல்லது" என்று கூறியபடி சிங்கத்தை மீண்டும் காட்டுக்குள் கொண்டு சென்று விட்டுத் திரும்பினர் காவலர்கள். சிங்கத்திற்கு மகிழ்ச்சி பொங்கியது.

"நமது கால் விரல், இல்லாததால்தான் நம்மை விட்டு விட்டார்கள். "நடப்பது எல்லாம் நன்மைக்கே" என்று அன்றைக்கு நரி சொன்னபோது ஆத்திரப்பட்டு அதைக் கூண்டில் அடைத்தோம். ஆனால் அது சொன்னது சரியென்று இப்போதுதான் உணர முடிகிறது" என்றெல்லாம் நினைத்தபடி தனது குகைக்குச் சென்ற சிங்கம், தனது மனைவியிடமும் குட்டிகளிடமும் நடந்ததைச் சொன்னது.

உடனடியாக, சிப்பாய்க் குரங்குகளை அழைத்து, "சிறையைத் திறந்து குள்ளநரியை வெளியில் அனுப்புங்கள்" என்று உத்தரவிட்டது.

அதன்படி சிறையை விட்டு, வெளிவந்த குள்ளநரியை வரவேற்ற சிங்கராஜா, "அறிவுக் கடலே, இன்று முதல் நீங்கள்தான் எனது அமைச்சர், நடப்பது எல்லாம் நன்மைக்கே என்று அன்று நீங்கள் சொன்னது உண்மையாகி விட்டது.

யார் எதைச் சொன்னாலும் அவசரப்படாமல் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டேன் என்று மகிழ்ந்தது.




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1862 - மினசோட்டாவில் லகோட்டா பழங்குடியினர் நியூ ஊல்ம் குடியேற்றத்திட்டத்தைத் தாக்கி பல வெள்ளையர்களைக் கொன்றனர்.
- 1980 - சவுதி அரேபியாவில் பயணிகள் விமானம் ஒன்று தரையிறங்குகையில் தீப்பிடித்ததில் 301 பேர் கொல்லப்பட்டனர். 1895 - கொழும்புத் தலைமை அஞ்சல் அலுவலகம் திறக்கப்பட்டது.
- 1934 - ஜேர்மனியில் பியூரர் பதவியை ஏற்படுத்த நாட்டின் 89.9% மக்கள் ஆதரவாக வாக்களித்தனர்.
- 1944-இரண்டாம் உலகப் போர்: நாசி ஜேர்மனியின் ஆக்கிரமிப்புக்கு எதிராக நட்பு நாடுகளின் உதவியுடன் பாரிஸ் தாக்குதலைத் தொடுத்தது.
- 1945 - ஹோ ஷி மின் தலைமையில் வியெட் மின் படைகள் வியட்நாமின் ஹனோய் நகரைக் கைப்பற்றின.
- 1946 - கல்கத்தாவில் முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் இடையில் இடம்பெற்ற கலகத்தில் 3000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1953 - பனிப்போர்: அமெரிக்காவின் சிஐஏயின் உதவியுடன் ஈரானின் முகமது மொசாடெக்கின் அரசு கவிழ்க்கப்பட்டு ஷா முகமது ரேசா பாலாவி தலைமையில் அரசு அமைக்கப்பட்டது.
- 1960-சோவியத்தின் ஸ்புட்னிக் 5 விண்கலம் பெல்கா, ஸ்ட்ரெல்கா என்ற இரு நாய்களையும் 40 சுண்டெலிகளையும் 2 எலிகளையும், பல வகைத் தாவரங்களையும் கொண்டு சென்றது.

பிறப்புகள்

- 1869-ஐசாக் தம்பையா, இலங்கைத் தமிழ்க் கல்விமான், இறையியலாளர் (இ. 1941)
- 1887 - சத்தியமூர்த்தி, இந்திய அரசியல்வாதி (இ. 1943)
- 1895-செ.சுந்தரலிங்கம், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (இ. 1985)
- 1929 - ச. அகத்தியலிங்கம், தமிழக மொழியியலாளர் (இ. 2008)
- 1931-ஜி.கே.மூப்பனார் தமிழக அரசியல்வாதி (இ. 2001)
- 1950-சுதா மூர்த்தி, இந்திய சமூக சேவையாளர், எழுத்தாளர்
- 1953-ஆ.பு.வள்ளிநாயகம், வரலாற்று வரைவாளர், எழுத்தாளர் (இ. 2007)
- 1967-சத்ய நாடெல்லா, இந்திய-அமெரிக்கத் தொழிலதிபர்

இறப்புகள்

- 1927-சுவாமி சாரதானந்தர், சுவாமி இராமகிருட்டிணரின் நேரடிச் சீடர் (பி. 1865)
- 1982-வைணு பாப்பு, இந்திய வானியலாளர் (பி. 1927)
- 2014-அடையார் கே.லட்சுமணன், பரதநாட்டியக் கலைஞர், நடன ஆசிரியர் (பி. 1933)

சிறப்பு நாள்

- ஆகத்து புரட்சி நாள் (வியட்நாம்)
- விடுதலை நாள் (ஆப்கானிஸ்தான், 1919)
- உலகப் புகைப்பட நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 120 | 70 | 80 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 85 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 240 | 200 | 200 | 250 | 300 | 300 |
| தக்காளி | 140 | 200 | 110 | 170 | 160 | 170 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 60 | 80 | 80 | 80 |
| கோவா | 100 | 100 | 60 | 120 | 100 | 130 |
| கரட் | 100 | 200 | 120 | 200 | 200 | 200 |
| பூசணி | 60 | 200 | 35 | 60 | 60 | 80 |
| புடோல் | 60 | 100 | 50 | 100 | 120 | 60 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 160 | 150 | 140 | 200 | 200 | 140 |
| பெரிய வெங்காயம் | 120 | 140 | 120 | 140 | 120 | 150 |
| பாகற்காய் | 200 | 250 | 150 | 100 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 50 | 100 | 70 | 100 | 120 | 60 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 80 | 140 | 120 | 140 |
| பயற்றங்காய் | 160 | 100 | 70 | 150 | 120 | 180 |
| லீக்ஸ் | 100 | 100 | 60 | 120 | 100 | 100 |
| பீற்றூட் | 40 | 100 | 40 | 60 | 60 | 80 |
| கறிமிளகாய் | 100 | 200 | 100 | 150 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 80 | 20 | 20 | 60 | 60 | 50 |
| போஞ்சி | 200 | 200 | 120 | 200 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 70 | 120 | 100 | 120 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 30 | 30 | 40 | 35 |
| தேசிக்காய் | 80 | 80 | 100 | 60 | 200 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 70 | 65 | 50-80 | 60 |
| இராசவள்ளி | 200 | 200 | 200 | — | — | — |
| வெங்காயப்பூ | 200 | 200 | 150 | 200 | 160 | 250 |
| முள்ளங்கி | 80 | 100 | 30 | 80 | 60 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | 80 | 60 | 50 | — | 70 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை. எதிரிக்கு சகுனப் பிழையானால் சரி.

– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கின் முதலமைச்சரின் பக்கபலம் தமிழர்களே!

வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களுக்கு எப்படியும் தொந்தரவு கொடுத்தாக வேண்டும் என்பதில் ஒரு பலமான சக்தி பின்னணியாக இருக்கின்றது.

இதன்காரணமாக வடக்கு மாகாண சபையில் இருக்கக்கூடிய ஆளுந்தரப்புச் சார்ந்த உறுப்பினர்கள் சிலரும் எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய ஒரு சிலரும் சேர்ந்து முதலமைச்சரை எதிர்ப்பது தெட்டத் தெளிவாகின்றது.

அதிலும் இரண்டு வகையில் இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

அதில் ஒன்று வடக்கு மாகாண சபை எதுவுமே செய்யவில்லை என்பது போன்ற பிரசாரம்.

இரண்டாவது முதலமைச்சருக்கு தேவையில்லாத தொந்தரவுகளை கொடுத்து அதன் மூலம் அவரை உளச்சோர்வுக்கு உட்படுத்துவது.

இந்த இரண்டு விடயங்களிலும் முதலமைச்சரை எதிர்ப்பவர்கள் கனகச்சிதமாக வேலை செய்து வருகின்றனர்.

இதுதவிர வேறு சிலர் முதலமைச்சருக்கு ஆதரவு போல செயற்பட்டுக்கொண்டு முதலமைச்சருக்கு எதிரானவர்களுக்கு தகவல் வழங்கிக் கொண்டிருக்கின்றனர்.

அத்துடன் முதலமைச்சரின் கடிதங்கள், நிர்வாகம் சார்ந்த விடயங்களை வெளியில் கசிய விடுவதிலும் இவர்கள் கடுமையாகப் பாடுபடுகின்றனர்.

இதன்காரணமாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் மிகப்பெரும் உபாதைக்கு ஆளாக வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது என்பது நிறுதிட்டமான உண்மை.

இவை ஒருபுறமிருக்க முதலமைச்சரை எதிர்ப்பவர்களின் உள்ளார்ந்த நோக்கம் என்ன? அவர்கள் தனிப்பட்ட விக்னேஸ்வரன் மீது கோபம் கொண்டவர்களா? என்று ஆராய்ந்தால் நீதியரசர் விக்னேஸ்வரன் மீது அவர்களுக்கு எந்தத் தனிப்பட்ட கோபமும் கிடையாது.

மாறாக, முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் தமிழ் மக்களின் உண்மைக்காகக் குரல் கொடுக்கிறார். வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அவலங்களை பட்டவர்த்தனமாகக் கூறிவருகின்றார்.

இஃது அரச தரப்புகளுடனும் முன்னாள் அரசுகளுடன் தொடர்புடையவர்களுக்கும் இனப்பிரச்சினைக்கான தீர்வை நலினப்படுத்துவதற்கு நாங்கள் உதவி செய்தோம் என்று உத்தரவாதம் அளித்து அதற்காக சன்மானம் பெற்றவர்களுக்கும் வடக்கின் முதலமைச்சர் மிகப்பெரும் இடைஞ்சலாக இருக்கின்றார்.

இதை நாம் கூறும்போது அதனை அப்படியே ஏற்க வேண்டும் என்று நாம் ஒருபோதும் கூறவில்லை.

மாறாக முதலமைச்சரை எதிர்ப்பவர்கள் அவரை ஆதரிப்பவர்கள் தொடர்பில் தமிழ் மக்கள் தமது பார்வையைச் செலுத்த வேண்டும்.

முதலமைச்சரை எதிர்ப்பவர்கள் எமது இனப்பிரச்சினை தொடர்பில் எத்தகைய நிலைப்பாட்டில் உள்ளனர் என்பதை ஆராய வேண்டும். அப்போதுதான் உண்மை தெரியவரும்.

எது எப்படியாயினும் இத்துணை எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் வடக்கின் முதலமைச்சர் அவர்கள் தமிழ் மக்களின் உரிமை விடயத்தில் உறுதியாக இருப்பதற்கு ஒட்டுமொத்த தமிழ் மக்களின் பேராதரவு அவருக்கு இருப்பதுதான் காரணம் என்பதால் தமிழ் மக்கள் முதலமைச்சருக்கான தங்கள் ஆதரவை ஏதோவொரு வகையில் தொடர்ந்து வெளிப்படுத்த வேண்டும். இது காலத்தின் கட்டாய தேவை.

## நெருக்கடியில் கணக்காய்வு ஆணைக்குழு

தேசிய கணக்காய்வு சட்டம் நிறைவேற்றப்படாத காரணத்தால், கணக்காய்வு ஆணைக்குழுவை இயங்கச்செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேசிங்க குறிப்பிட்டார்.

ஊடக சந்திப்பொன்றில் கலந்துகொண்டு அவர் நேற்று இது தொடர்பில் கருத்துக்களைக் கூறினார்.

முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் சரத் மாயாதுன்னேயும் இந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டிருந்தார்.

19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின்பிரகாரம், தேசிய கணக்காய்வு ஆணைக்குழுவை நடை முறைப்படுத்துவதற்குத் தேவையான சட்ட ஒதுக்கீடுகள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

இதன்பொருட்டு தேசிய கணக்காய்வு சட்டம் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், இது வரை அதனை பாராளுமன்றத்தில் முன்வைக்க முடியாமற்போயுள்ளது.

அதிக பளு சுமத்தப்பட்டுள்ளதால், இந்த சட்டமூலத்திற்கு எதிர்ப்பு தோன்றியுள்ளதாக கணக்காய்வாளர நாயகம் காமினி விஜேசிங்க குறிப்பிட்டார். (மு-11)

## ஐக்கிய தேசியக் கட்சியை நிராகரிக்க வேண்டும்

### டிலான் கூறுகிறார்

(கொழும்பு)

நாட்டை சரியான பாதையில் கொண்டுசெல்ல வேண்டும் என்றால் ஐக்கிய தேசியக் கட்சியைய் நிராகரித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாக ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும். கட்சியில் அவசியமில்லாத நபர்கள் தொடர்பில் சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லை என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஊடகப் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.

கட்சியை பிளவுபடுத்தும் நபர்களை நிராகரித்து பயணிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பதுளையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)




## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

மன்னா மனம் தளராதே! அயோத்தி அரசன் தசரதன் வாரிசு அற்று வயோதிபனான பின்பும் வசிஷ்டரின் வாக்குப்படி புத்திரகாமேஷ்டி யாகம் செய்தான். புவி போற்றும் புதல்வர் நால்வரைப் பெற்றான். அதுபோல் நீயும் புத்திரகாமேஷ்டி யாகத்தை நடத்து வருத்தம் தொலைப்பாய் என்றார்.

ஆசார்யனின் வாக்கு ஆண்டவனின் வாக்குப்போல ஆகாசராஜா ஆனந்தம் அடைந்தான். யாகத்துக்கென அப்போதே ஒரு முகூர்த்தத்தை முடிவு செய்தான்.

அந்த முக்கிய முகூர்த்தத்தில் யாகம் நடத்த குலகுரு குறித்துக்காட்டிய இடத்தை தங்க ஏரினால் செம்மைப்படுத்தலானான். பூமியை உழுத ஏர் அதில் புதைந்திருந்த ஒரு பெட்டியை இடித்து அதைச்சுற்றி இருந்த மண்ணைப் பெயர்த்தது. (தொடரும்)

## அயடீன் உப்பை பாவிக்கும்போது கவனிக்க வேண்டியவை

உப்பை நீரில் கழுவக் கூடாது.
ஒளிபுகாத கடும் நிறமான போத்தல்களிலேயே உப்பை சேமித்து வைத்தல் வேண்டும்.
சேமித்து வைக்கும் போத்தலை சூரிய வெளிச்சமோ, அடுப்பு வெக்கையோ படாத இடத்தில் வைத்தல் வேண்டும்.
சமைத்ததன் பின்பே உப்பை உணவில் சேர்த்தல் வேண்டும்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகர சபை

## கேரளக் கஞ்சாவுடன் நபர் ஒருவர் கைது!

### அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

சங்குக்குள் மறைத்து கேரளக் கஞ்சா தம்வசம் வைத்திருந்த நபர் ஒருவர் இளவாலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 17ஆம் திகதி வடலியடைப்பு பகுதியில் வீதி ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சந்தேகத்தின் பேரில் குறித்த நபரை சோதனைக்குட்படுத்திய போது 20 ரூபாய் தாளில் சுற்றி சங்குக்குள் மறைத்து வைத்திருந்த 2300 மில்லிகிராம் கேரளக் கஞ்சாவுடன் 38 வயதான நபரே கைது செய்யப்பட்டார்.

கைதான நபர் நேற்று மல்லாகம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். இதன்போது மல்லாகம் நீதவான் 5 ஆயிரம் ரூபாய் அபராதம் அறவிட்டதாக இளவாலைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (மு-10,104)

## கௌரவிப்பு

யாழ் மாவட்ட சாரணர்கள் 1961ஆம் ஆண்டு தொடகம் தொடர்ந்து நல்லூர் உற்சவத்தின் போது சேவையை வழங்கி 2017ஆம் ஆண்டு 56 வருடங்களை பூர்த்தி செய்துள்ள நிலையில் இவ்வருடம் தொடக்கம் சிறந்த சேவையாளருக்கு தங்கப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

இநநிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை நல்லூர் நல்லை ஆதினத்தில் மாலை 3.30 மணிமுதல் 5.00 மணிவரை நடைபெறவுள்ளது. (மு)

## ரணில் எப்படிப்பட்டவர் மனோகணேசன் விளக்கம்

(கொழும்பு)

சிங்கள பௌத்த பெரும்பான்மையினர் மட்டுமல்லாது தமிழ்,முஸ்லிம் மக்களும் சம உரிமைகளை பெற்று வாழவேண்டும் என நினைக்கும் ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே யாவார. புதிய அரசியல்அமைப்பின் மூலமாக சகல இன ஒற்றுமையையும் உறுதிப்படுத்த முயற்சிக்கின்றார் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

புலிகளுடன் சமாதான ஒப்பநதத்தை எழுதிக் கொடுத்திருந்தால் 2005ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதி ஆகியிருப்பார் எனவும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் 40 ஆண்டு கால அரசியல் பயணத்தை வெளிப்படுத்தும் வகையிலான புகைப்பட கண்காட்சி நேற்று முன்தினம் பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்ஆரம்ப நிகழ்வில்கலந்து கொண்ட போதே அமைச்சர் மனோ கணேசன் இதனைத் தெரிவித்தார்.(இ-7)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**வசியப் பொருத்தம் என்றால் என்ன?**

வசியப் பொருத்தம் என்பது கணவன், மனைவி அந்நியோன்யத்தையும் வசியப்பட்டு வாழ்வதையும் குறிக்கும்.

இப்பொருத்தம் பெரும்பாலும் குறைவாகவே உள்ளது.

**வசிய இராசிகள்**

பெண் இராசி- ஆண் இராசி
மேடம்- கன்னி, விருச்சிகம்
இடபம்- கடகம், துலாம்
மிதுனம்- கன்னி
கடகம்- விருச்சிகம், தனுசு
சிம்மம்- மகரம்
கன்னி- ரிஷபம், மீனம்
துலாம்- மகரம்
விருச்சிகம்- கடகம், கன்னி
தனுசு- மீனம்
மகரம்- கும்பம்
கும்பம்- மீனம்
மீனம்- மகரம்

(தொடரும்)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ நீங்கள் உ ண்மையிலேயே என் குழந்தைகளானால் எதற்குமே அஞ்சி ஸ்தம்பித்து நின்றுவிட மாட்டீர்கள். நீங்கள் சிங்க ஏறுகளைப் போலத் திகழ்வீர்கள். இந்தியாவையும் இந்த உலகம் முழுவதையும் நாம் தட்டி எழுப்பியாக வேண்டும். தங்களுடைய பணியைச் செய்து முடிப்பதற்காகத் தீயில் குதிப்பதற்கும் என் குழந்தைகள் தயாராக இருக்க வேண்டும்.

❖ நீங்கள் கடவுள் நம்பிக்கையுடையவனாக இருந்தாலும் சரி அல்லது நாத்திகனாக இருந்தாலும் சரி உன் சுக துக்கங்களை மறந்து வேலை செய். இதுதான் நீ இப்போது கற்றுக்கொள்ளவேண்டிய முதல் பாடமாகும்.

❖ இந்த ஏழை மக்களையே உங்கள் தெய்வமாகக் கொள்ளுங்கள். அவர்களைப் பற்றியே சிந்தனை செய்யுங்கள். அவர்களுக்காகவே உழையுங்கள். அவர்களுக்காகவே இடைவிடாமல் பிரார்த்தனை செய்யுங்கள். அப்போது ஆண்டவன் உங்களுக்கு வழிகாட்டுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடியகாடு விளையாட்டு விழா

## வலைப்பந்து சுற்றுப்போட்டி; நீல இல்ல அணி முதலாமிடம்









நெடியகாடு விளையாட்டு விழாவில் அண்மையில் வலைப் பந்து சுற்றுப்போட்டி நடைபெற்றது.

இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய நீல இல்ல அணி முதலாம் இடத்தையும், சிவப்பு இல்ல அணி இரண்டாம் இடத்தினையும், மஞ்சள் இல்ல அணி மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டன. (க)

## நெடியகாடு விளையாட்டு விழா உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்





நெடியகாடு விளையாட்டு விழாவில் அண்மையில் இடம்பெற்ற உதைபந்தாட்ட இறுதி ஆட்டத்தில் கீழ்ப்பிரிவு ஆண்களுக்கான போட்டியில் மஞ்சள் இல்லமும், மேற்பிரிவு ஆண்களுக்கான போட்டியில் நீல இல்லமும் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டன. (க)

## ஆவரங்கால் இந்துவை வீழ்த்தி புத்தூர் கலைமதி வி.க வெற்றி

இடைக்காடு விளையாட்டு கழகத்தினால் 16.08.2017)அன்று இரண்டா வது முறையாக நடத்தப்பட்ட A பிரிவினருக்கான கரப்பந்தாட்டப் போட்டியின் முதலாவது அரையிறுதிப்போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழத்தினை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டு கழகம் மோதியது.

இதில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் 3:0 (28:26, 25:23, 25:16 ) என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.போட்டியின் சிறந்த



விளையாட்டு வீரராக புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகத்தின் வாகீசன் தெரிவு செய்யப்பட்டார். (க)

## இடைக்காடு விளையாட்டு கழகத்தின் A பிரிவினருக்கான கரப்பந்தாட்டம்

### ஆவரங்கால் மத்தி வெற்றி

17.08.2017 அன்று இடைக்காடு விளையாட்டு கழகத்தினால் இரண்டாவது முறையாக நடத்தப்பட்ட A பிரிவினருக்கான கரப்பந்தாட்டப் போட்டியின் இரண்டாவது அரையிறுதிப்போட்டியில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் மோதி யது. இதில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் 3:1 (25:11, 25:21, 28:30, 25:18 ) என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

போட்டியின் சிறந்த விளையாட்டு வீரராக ஆவரங்கால் மத்திய விளையாட்டுக கழகத்தின் சுஜீவன் தெரிவு



செய்யப்பட்டார். (க)

## சுப்பர்மடம் சித்திவிநாயகரை தோற்கடித்து காலிறுதிக்குள் நுழைந்தது பலாலி விண்மீன்



அபி ரான்ஸ்போட் அனுசரணையுடன் கொட்டடி துள்ளுமீன் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான மாபெரும்கடற்கரை கபடி சுற்றுப்போட்டி 17.08. 2017 அன்று மாலை 5 மணிக்கு ஆரம்பமானது .

முதல்போட்டியில் சுப்பர் மடம் சித்திவிநாயகர் விளையாட்டுக்கழகத்தை எதிர் கொண்ட பலாலி விண்மீன் ஆரம்பம் முதலே விண்மீனின் ஆதிக்கமே போட்டியில் காணப்பட்டது.



விண்மீன் அணி வீரர்கள் எதிரணிவீரர்களை மடக்கிப்பிடித்தமை பார்வையாளர்களுக்கு விருந்தளிப்பதாக இருந்தது.

போட்டி முடிவில் 62:30 என்ற புள்ளியடிப படையில் வெற்றிபெற்று காலிறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது .

போட்டியின் சிறந்த ஆட்டக்காரனாக விண்மீன் அணி வீரர் சாந்தன் தெரிவுசெய்யப்பட்டு பதக்கம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டார். (க)

## பாரதியின் கால்பந்தாட்ட தொடர் சக்திவேல் இறுதிக்குத் தகுதி



உடுத்துறை பாரதியின் கால்பந்தாட்டத் தொடரில் அண்மையில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில சென்.செபஸ்ரியன் வி.கழகத்தினை எதிர்த்து சக்திவேல் வி.கழகம் மோதியது. விறுவிறுப்பாக நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் முதலில் சென்.செபஸ்ரியன் வி.கழகத்தினர் முதலாவது கோலினை போட போட்டியானது மேலும் விறு விறுப்பானது. உடனே சுவீகரித்துக் கொண்ட சக்தி வேல் அணியினர் அடுத்தடுத்து 3 கோல்களை போட்டு வெற்றியை தம் வசப்படுத்தி இறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றது. சக்திவேல் அணி சார்பாக [illegible] (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாமலை விசாரிக்க...

மன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக பொலிஸ் அதிகாரத்தைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பு மேலதிக மாஜிஸ்ட்ரேட் சந்தன களங்சூரிய நேற்று உத்தரவிட்டுள்ளார்.

குற்றவியல் சட்டத்தின் கீழ் நாமல் ராஜபக்ஷவை நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரணை நடத்துவதற்கு உத்தரவிடக் கோரி, நிதிமோசடி தொடர்பான விசாரணைப் பிரிவு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது. அந்தக் கோரிக்கை நேற்று நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.

பொலிஸ் அதிகாரத்தின் கீழ் நாமலை விசாரணை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (மு-11)

## கீழே விழுந்த...

காலை 11.30 மணியளவில் சாவகச்சேரி டச்சு றோட் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் 4ஆம் கட்டை ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கந்தையா நாகராசா (வயது 59) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

மேல் இருந்து கீழே விழுந்தவர் படுகாயமடைந்த நிலையில் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் செல்லும் வழியில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் ஸில் முறையிட்டதனை தொடர்ந்து பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (மு-30)

## பொது வாக்கெடுப்பு...

அனுமதி வழங்கப்பட்டால் 6 வாரங்களுக்குள் வாக்கெடுப்பை நடத்தலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

அரசமைப்பு திருத்தம் மற்றும் அது தொடர்பான விடயங்களை தவிர வாக்கெடுப்பு தொடர்பில் சுயமான முடிவை எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார். (மு-11)

## எதற்கெடுத்தாலும்...

ந்தும் கருத்து வெளியிட்டுள்ள இராஜாங்க அமைச்சர்,

தேர்தல்களைப் பிற்போடும் எண்ணம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இல்லை. மாகாண சபைத் தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்த வேண்டும் என்றே கூறுகின்றோம்.

தேர்தலைகளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிற்போட நடவடிக்கை எடுத்து வருவதாக தவறான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சு.கவுக்கு தேர்தலைப் பிற்போடவேண்டிய எந்தவொரு அவசியமும் இல்லை. மாகாண சபைத் தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்துமாறே தெரிவிக்கின்றோம்.

தேர்தலை ஒரே தினத்தில் வையுங்கள் என்று சுதந்திரக் கட்சி கூறுவது இறுதியாக கால எல்லை முடிவடையும் ஊவா மாகாண சபை கலைக்கப்படும் வரை இருக்க வேண்டும் என்று அர்த்தம் இல்லை.

விரைவில் அதாவது, 2018இல் ஒரே தினத்தில் தேர்தலை வைப்பதில் எங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை.

மாறி மாறி கடந்த காலங்களில் விருப்பு வாக்கு முறையில் தேர்தல்கள் நடத்தப்பட்டமையால் ஏற்பட்ட விளைவுகள் குறித்து அனைவரும் அறிவோம். நாட்டின் சொத்துகள் முதல் கோடிக்கணக்கான பணங்கள் செலவிடப்பட்டன.

ஒரே தினத்தில் தேர்தலை நடத்துவதன் மூலம் தேர்தல் செலவும் குறைவடையும். தேர்தல் ஆணையாளர், ஆளுநர்கள், மாகாண முதலமைச்சர்களுக்கு இணக்கம் என்றால் ஒரே தினத்தில் தேர்தலை நடத்த முடியும்.

வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாண சபைகளில் சு.கவின் முதலமைச்சர்களே உள்ளதால் இந்த விடயத்தைப் பேசி ஓர் இணக்கப்பாட்டுக்கு வர முடியும்.

தேர்தலைப் பிற்போடுவது எமது இலக்கல்ல. தேர்தல் முறை மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு உள்ளிட்ட விடயங்களை வாக்குறுதிகளாகக் கொடுத்தே மக்களிடம் வாக்குகளைப் பெற்றோம்.

சு.க தேசிய அரசில் இணையாவிடின் இன்று பிணைமுறி மோசடியை ஆராய ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்குமா? அரசின் அமைச்சர் ஒருவரை விசாரணை செய்யக்கூடிய சாத்தியம் கடந்த ஆட்சியில் இருந்ததா?

இன்று வடக்கில் எந்தவொரு பிரச்சினை நடந்தாலும் விடுதலைப் புலிகள் என்கின்றனர். ஆவா குழு பற்றிப் பேசுகின்றனர். சமூகத்தில் ஏற்படும் சில பிரச்சினைகளைக் காரணங்காட்டி எதற்கெடுத்தாலும் புலிகள் மீளத் தோற்றம் பெறுகின்றனர் எனப் பொய்ப் பிரசாரத்தை மேற்கொள்கின்றனர்.

இந்த நாட்டில் மீண்டுமொரு யுத்தம் இடம்பெறாத வகையில் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

விசேட நீதிமன்றத்தை அமைக்கப் போகின்றனர் எனவும் கூறினர். அவ்வாறு அமைக்கப்பட்டதா? தேசிய அரசில் இரண்டு கட்சிகள் உள்ளதால் மாறுபட்ட கருத்துகள் இருக்கும்.

இரண்டு கட்சிகளும் பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் செயற்படுகின்றோம். சு.க்வின் 66ஆவது மாநாட்டை சக்திமயப்படுத்த ஜனாதிபதியுடன் அனைவரும் கைகோத்து செயற்பட வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன விசனம் தெரிவித்துள்ளார். (மு-11)

## ரணிலே தொடர்ந்தும்...

எமது விருப்பம். உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் நாம் வெற்றிபெறவே விரும்புவோம். கட்சி என்ற அடிப்படையில் எமது நோக்கமும் அதுதான். ஜனாதிபதித் தேர்தலிலும் எமது கட்சியின் வேட்பாளர் ஒருவரை நிறுத்தவே நாம் விரும்புவோம். பிரதமரை மாற்றும் திட்டம் எதுவும் இல்லை.

பிரதான இரு கட்சிகளும் இணைந்தமைக்கு காரணம் இருக்கின்றது. எந்தவொரு கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. இரண்டு கட்சிகளும் எதிர்க்கட்சியிலிருந்து சில ஆசனங்களைப் பெற்று ஆட்சி அமைத்திருக்க முடியும்.

எனினும் தனியாக ஒரு கட்சியால் சாதிக்க முடியாத அல்லது அடைந்துகொள்ள முடியாத இலக்கினை அடைந்துகொள்வதற்கு சக்திமிக்க அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்காகவே இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைத்துள்ளோம். இதுவே எமது நோக்கம். அதனை நாம் கைவிடவில்லை. இது தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட அரசாங்கமல்ல.

ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து உருவாக்கிய தேசிய அரசாங்கம் இது. ஆகவே பிரதமரை வெளியேற்றி புதிய பிரதமரை நியமிக்க வேண்டிய எந்தவொரு தேவையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இல்லை. மத்திய செயற்குழுவின் அனுமதிக்கு அமையவே தேசிய அரசாங்கத்ததை அமைத்துள்ளோம்.

டிசம்பர் மாதம் எமது ஒப்பந்தம் நிறைவடைகின்றது. ஆகவே அந்த சந்தர்ப்பத்தில் எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்னவென மீண்டும் பேசி தீர்மானிக்க முடியும். அந்த சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒரு தீர்மானத்திற்கு வரும். ஆகவே இரண்டு கட்சிகளும் மீண்டும் பேசி தொடர்ந்து பயணிப்பதா இல்லையா என்பது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ள முடியும்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தகுதியான நபர் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே

# அ.தி.மு.க அணிகள் இணைப்பு நேற்றும் இடம்பெறவில்லை




(சென்னை)

நீண்ட இழுபறிக்குப் பிறகு ஓ.பி.எஸ்., இ.பி.எஸ். அணிகள் நேற்று ஜெயலலிதா நினைவிடத்தில் இணையும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், இணைப்பு இன்று (நேற்று) நடைபெறாது என நேற்றிரவு ஓ.பி.எஸ் தரப்பு அறிவித்துள்ளது.

முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அணியும், முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையிலான அணியும் இணைவதற்கான வாய்ப்புகள் நேற்று இறுதிக் கட்டத்தை எட்டியது. முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி சமீபத்தில் தினகரனுக்கு எதிராக கொண்டு வந்த தீர்மானமும், ஜெயலலிதா மரணத்தில் ஏற்பட்டுள்ள மர்மத்துக்கு விடை காண நீதி விசாரணை நடத்தப்படும் என்ற அறிவிப்பும் அ.தி.மு.கவின் இரு அணிகளை நெருங்க செய்தது.

எடப்பாடி பழனிசாமியின் சாதகமான அறிவிப்புகளை தொடர்ந்து ஓ.பன்னீர்செல்வம் தலைமையிலான அணியினர் பேச்சுவார்த்தையை தொடங்கினர். அப்போது ஓ.பி.எஸ். தரப்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் முக்கிய கோரிக்கைகள்ள ஏற்க எடப்பாடி பழனிச்சாமி தரப்பும் முன்வந்துள்ளது.

இந்நிலையில், நேற்று முதலமைச்சர் இல்லத்தில் அமைச்சர்கள் மற்றும் எம்.எல்.ஏ.க்கள், நிர்வாகிகள் அவசர ஆலோசனை நடத்தினர். அப்போது ஓ.பி.எஸ். தரப்பில் யார் யாருக்கு பதவி கொடுக்கலாம்? என்பது குறித்து விவாதிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டதாக தெரிகிறது. அதேசமயம் ஓ.பன்னீர்செல்வம், கிரின்வேஸ் சாலையில் உள்ள தனது வீட்டில் ஆதரவாளர்களுடன் நீண்ட நேரம் ஆலோசனை நடத்தினார்.

இதற்கிடையே மெரினா கடற்கரையில் உள்ள ஜெயலலிதாவின் நினைவிடம் நேற்று மாலையில் அலங்கரிக்கப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட்டது. அ.தி.மு.க. தலைமை அலுவலகம் மற்றும் ஓ.பன்னீர்செல்வம் இல்லத்திற்கும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது. எனவே, நினைவிடத்தில் அணிகள் இணைப்பு நடைபெறும் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கியது. மாலை முதலே எம்.எல்.ஏ.க்கள், கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் குவியத் தொடங்கினர்.

ஆனால், ஓ.பி.எஸ் இல்லத்தில் சுமார் 3 மணி நேரம் ஆலோசனை நடத்தியும் ஒருமித்த முடிவு எட்டப்படவில்லை. அணிகள் இணைப்புக்கு சிலர் எதிர்ப்பு தெரிவித்துள்ளதாக தெரிகிறது. இலாகா ஒதுக்கீடு மற்றும் நிர்வாக பொறுப்புகள் ஒதுக்கீட்டில் கே.பி. முனுசாமி, மைத்ரேயன், மனோஜ் பாண்டியன் ஆகியோருக்கு திருப்தி ஏற்படவில்லை என்றும், அவர்கள் எதிர்ப்பு தெரிவிப்பதால் இணைப்பு முயற்சியில் பின்னடைவு ஏற்பட்டிருப்பதாகவும் தகவல் வெளியானது.

அதனை உறுதி செய்யும் வகையில், ஓ.பி.எஸ் இல்லத்தில் ஆலோசனை முடிந்ததும் தலைவர்கள் புறப்பட்டுச் சென்றுவிட்டனர். அணிகள் இணைப்பு குறித்த முடிவை ஓ.பன்னீர்செல்வம் வெளியிடுவார் என்று தெரிவிக்கப்பட்டது. சற்றுநேரத்தில் அறிவிப்பு வெளியாகலாம் என்று எதிர்பார்த்த நிலையில், அணிகள் இணைப்பு இன்று (நேற்று) இல்லை என ஓ.பி.எஸ் தரப்பு கூறிவிட்டது.

அதேசமயம், கடற்கரை பகுதியில் திடீரென கன மழை பெய்ததாலும், இணைப்பு அறிவிப்பு தாமதம் ஆனதாலும் ஜெயலலிதா நினைவிடத்தில் திரண்டிருந்த எம்.எல்.ஏக்கள் மற்றும் தொண்டர்கள் கலைந்து சென்றனர். (மு-11)

## ரெயன் ஜயலத்திற்கு விளக்கமறியல்

மருத்துவ பீட மாணவ செயற்பாட்டாளர்கள் குழுவின் இணைப்பாளர் ரெயன் ஜயலத்தை எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாலிகாகந்த நீதிவான் உத்தரவு பிறப்பித்து ள்ளார்.

ரெயன் ஜயலத் உட்பட ஐவரை கைது செய்யுமாறு கடந்த 10ஆம் திகதி மாளிகாகந்த நீதிவான் நீதிமன்று பிடியாணை பிறப்பித்திருந்தது.

இந் நிலையிலேயே ரெயன் ஜயலத் தனது சட்டத்தரணிகளுடன் நேற்று நீதிமன்றில் ஆஜராகியிருந்த நிலையில் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

என சுட்டிக்காட்டினார்.

துமிந்த திசாநாயக்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஊடாக களமிறங்கக்கூடிய தகுதியான வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவே. அவரே இந்த காலப்பகுதியில் மக்களுக்கு வெற்றியை தேடித்தந்த பிரதான தலைவர்.

யாப்பிற்கு அமையவும் மீண்டும் ஜனாதிபதியாகக்கூடிய தகுதி அவருக்கு மாத்திரமே காணப்படுகின்றது. முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்காவிற்கோ அல்லது மகிந்த ராஜபக்ஷவிற்கோ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது. ஆகவே அவரே தகுதியான நபர் என்பது எமது கட்சியின் கருத்து. எனினும் அவரது தனிப்பட்ட முடிவுகள் எவ்வாறு அமையுமென்பதை பொருத்திருந்தே பார்க்க வேண்டும் என்றார். (மு-11)

## சர்வதேச நீதிபதி...

பாடுகள் நிவர்த்தி செய்யப்படும் என புதிய வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்றுக் காலை புதிய வெளிவிவகார அமைச்சராக திலக் மாரப்பன கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இலங்கையின் நற்பெயரையும், நன்மதிப்பையும் சர்வதேச மட்டத்தில் பிரபல்யப்படுத்தும் நோக்கில் தூதுவராலயம், உயர்ஸ்தானிகர் அலுவலகங்களை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று புதிய வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதும் தமது எதிர்பார்ப்பு என்று சுட்டிக் காட்டியுள்ளார். (மு-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளை நூலகம்

## லொத்தர் சபை...

துடன் வெளியிடப்பட்டுள்ள குறித்த வர்த்தமானி அறிவித்தல், ஓகஸ்ட் மாதம் 16-ம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் என்று கூறப்பட்டுள்ளது.

முன்னதாக நிதியமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்க வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்ட பின்னர் குறித்த இரண்டு நிறுவனங்களும் வெளிவிவகார அமைச்சின் கீழ் இணைத்துக் கொள்ளப்பட்டன.

இந்த விடயம் பெரும் சர்ச்சையாக நீடித்து வந்த நிலையில், ரவி கருணாநாயக்க பதவியை விட்டு விலகியுள்ள போதும் மீண்டும் அந்த இரண்டு நிறுவனங்களும் நிதியமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. (மு-11)

## இராணுவத்தாலே...

கரனின் 12 வயது மகன் பாலச்சந்திரன் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு, பின்னர் அவர்களால் படுகொலை செய்யப்பட்டார் என்றே நாங்கள் மிகமிக வலுவாக சந்தேகிக்கிறோம்.

இது முற்றிலும், மிக மோசமான பொறுப்பற்ற, தீய செயல். இந்த விடயத்தில் படையினர் மிகமிக நன்றாகச் செயற்படாதது துரதிர்ஷ்டம் என்றும் அவர் கூறியுள்ளார். (மு-11)

## புலிகள் சரணடை...

அதன்படியே, நிச்சயமாக அதனை இலங்கை தலைவர்களுக்கு தெரியப்படுத்தினோம். நாங்கள் அப்போதைய ஜனாதிபதி ராஜபக்ஷவின் ஆலோசகரும் சகோதரருமான பஸில் ராஜபக்ஷவுக்குத் தெரியப்படுத்தினோம்.

நாங்கள் மட்டுமல்ல, முக்கியமான சில தமிழர்கள் மூலமும் புலிகள் அதனைச் செய்தனர். சில இந்தியா இடைத்தரகர்களும் கூட, இலங்கை தலைமைக்கு தகவல் அனுப்பினார்கள் என்று நான் நினைக்கிறேன் என நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடம், வெள்ளைக் கொடி சம்பவம் தொடர்பாக அனைத்துலக ஊடகம் ஒன்றில் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

அதற்கு அவர் அளித்துள்ள பதிலில், கடைசியாக புலித்தேவனிடம் இருந்து அழைப்பு வந்த போது, தாம் நேரடியாக பேசவில்லை என்றும், வேறொரு சகாவே அவருடன் பேசினார்.

அத்துடன், இந்த உரையாடலின் போது, தாம் வழங்கிய வாய்ப்புகளை உதறி விட்டு காலம் கடந்து உதவி கோருவதாக, புலித்தேவனுக்குப் பதிலளிக்கப்பட்டது.

இந்தச் செவ்வியில் எரிக் சொல்ஹெய்ம் மேலும் தெரிவிக்கையில், அது மே 17ஆம் திகதி. அது நோர்வேயின் தேசிய நாளும் கூட. அதனால் நினைவில் வைத்திருக்கிறேன்.

ஒஸ்லோவில் அணிவகுப்புக்காக நான் சென்று கொண்டிருந்தேன். அப்போது, புலித்தேவனிடம் இருந்து அழைப்பு வந்தது.

அவர் விடுதலைப் புலிகளின் மிகச்சிறந்த உறுப்பினர்களில் ஒருவர். விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவின் தலைவராகவும் இருந்தார். இராணுவத்தினரிடம் தாங்கள் சரணடைய் விரும்புவதாகவும், அதற்கு எம்மால் உதவ முடியுமா என்றும் அவர் எம்மிடம் கேட்டார்.

நான் அவருடன் நேரடியாகப் பேசவில்லை. ஆனால், நாங்கள் தலையீடு செய்வதற்கு மிகவும் தாமதமாகி விட்டது என்று எமது சகா ஒருவர் அவருக்கு கூறினார். ஏனென்றால் போர் முடிவுக் கட்டத்தை நெருங்கி விட்டது.

நாம் தலையீடு செய்வதற்கு சாத்தியங்கள் இருந்த போது, போராட்டத்தைக் கைவிடுவதற்கு முன்னர் நாங்கள் அவர்களுக்கு வாய்ப்புகளை வழங்கியிருந்தோம் என்பதை நாம் அவர்களுக்குச் சுட்டிக்காட்டினோம். ஆனால் இப்போது அது மிகவும் தாமதமாகி விட்டது.

பெரியதொரு வெள்ளைக்கொடியை ஏந்திச் செல்லுங்கள். ஒலிபெருக்கிகள் மூலமோ வேறெந்த வழியிலோ உங்களின் எண்ணத்தை, இலங்கை இராணுவத்துக்கு தெரியப்படுத்துங்கள் என்பதைத் தான் எம்மால் உங்களுக்கு கூற முடியும் என்றோம்.

ஒரு நாள் கழித்து, நடேசனும், புலித்தேவனும் கொல்லப்பட்டு விட்டதாக எங்களுக்குத் தகவல் கிடைத்தது. அவர்களின் மரணம் நடந்த சரியான சூழ்நிலைகள் தொடர்பாக இன்னமும் தெரியவில்லை.

அந்த நேரத்தில் அவர்கள் பிரபாகரனுடன் இருந்திருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. ஆனாலும், சரியாக எனக்குத் தெரியவில்லை. பிரபாகரன் எப்படிக் கொல்லப்பட்டார் என்றும் எனக்குத் தெரியவில்லை.

இந்தக் கொலைகள் தொடர்பாக பெரியதொரு கேள்விக்குறி உள்ளது. ஏன் அவர்கள் சரணடைதலை ஏற்றுக் கொள்ளவில்லை, நீதிமன்றத்தில் நிறுத்தாமல், அவர்களை ஏன் கொன்றார்கள்? என்று கேள்வியும் எழுப்பியுள்ளார். (மு-11)

## பிரபாகரனுடன் அதி...

பேச்சுக்களிலும், அமைதி முயற்சிகளிலும் நடுநிலையாளராகப் பங்கேற்ற எரிக் சொல்ஹெய்ம், அனைத்துலக ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் கொண்டிருந்த உறவு, நட்பு ரீதியானதா அல்லது அதனை விடவும் அதிகமானதா என்று இந்திய ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளித்துள்ள எரிக் சொல்ஹெய்ம்,

உலகிலுள்ள வேறெந்த வெளிநாட்டவரையும் விட, பிரபாகரனை நான் அதிகமாக அடிக்கடி சந்தித்திருக்கிறேன். அவர் தமிழ் மக்களைப் பொதுவாகச் சந்திப்பது வழக்கம்.

முஸ்லிம் பிரதிநிதிகள் குழுவை ஒரு முறை சந்தித்திருக்கிறார். சில சிங்களவர்களையும் சந்தித்திருக்கிறார். ஆனால் தமிழ் மக்களை அவர் எப்போதும் சந்தித்து வந்தார்.

அவருடன் இன்னும் கூடுதலான நேரத்தை செலவிட்டிருந்தால், நாம் பெரும்பாலும், அவர் மீது இன்னும் செல்வாக்குச் செலுத்தியிருக்க முடியும்.

பிரச்சினைகள் பற்றி பேசுவதன் மூலம் அவருடன் தனிப்பட்ட உறவை ஏற்படுத்த நாங்கள் முயன்றோம். அவர் உண்மையில் அதுபற்றி அக்கறை கொண்டிருந்தார்.

அவர் நிச்சயம் திரைப்படங்களில் ஆர்வம கொண்டிருந்தார். உணவு விடயத்தில், அவர் ஒரு நல்ல சமையற்காரராக அறியப்பட்டார். இயற்கை மீது ஆர்வம் கொண்டிருந்தார்.

ஆனாலும் தனிப்பட்ட உறவை வளர்ப்பது கடினமாக இருந்தது. ஏனென்றால், எமக்கு மட்டுப்படுத்தப்பட்ட நேரமே இருந்தது. மேலும இலங்கை அரசாங்கத்தினால், வடக்கிற்குச் செல்வதற்கும் அனுமதிக்கப்படவில்லை.

அதைவிட, மொழித் தடையும் இருந்தது. அவர் தமிழில் பேசுவதை புரிந்து கொள்ள எமக்கு மொழிபெயர்ப்பாளர் தேவைப்பட்டார்.

இறுதியாக அவர் வெளிப்படையாக திறந்தநிலையில் இல்லாத பாத்திர வகையாகவே இருந்தார். கவர்ச்சிகரமானவராக, ஆனால் இன்னும் அதிகம் மூடிய, எச்சரிக்கையுடன் அவர் இருந்தார் என்றும் எரிக் சொல்ஹெய்ம் குறிப்பிட்டுள்ளார். (மு-11)

## வடக்கில் தாதியர்...

பரீட்சை நடத்தப்பட்டு அதில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு கடந்த ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி அலரிமாளிகையில் வைத்து நியமனம் வழங்கப்பட்டது.

அதில் யாழ் மாவட்டத்தில் இருந்து 91 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 12 பேரும் , முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து ஒருவரும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். குறிப்பாக அவர்கள் அனைவரும்தமிழ்மொழிமூல மானவர்கள் ஆவர்.

குறித்த கற்கை நெறி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதால் கடந்த 16 ஆம் திகதி குறித்த நியமனம் வழங்கப்பட்டவர்களை பதிவு செய்யுமாறுகோரப்பட்டிருந்தது.

ஆனால் குறித்த கற்கை நெறிக்கு அன்றைய தினம் 46 பேர் மட்டுமே தமது பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். குறித்த கற்கை நெறியில் இணைய விரும்புபவர்கள் உரிய ஆதாரங்களுடன் வந்து பதிவினை மேற்கொள்ள முடியும் என்றும் இணைய விரும்பாதவர்கள் முற்கூட்டியே அறிவிக்குமாறு தாதிய கல்லூரி அதிபரால் அறிவிக்கப்பட்டுள்ளது.(மு-9)

## வர்த்தகர்களை நீதி...

முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இருந்த போதிலும் இக் காணியானது கடந்த ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் மாநகரசபையினால் வியாபாரிகளுக்கு வியாபார நிலையங்களை அமைப்பதற்காக வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறு வழங்கப்பட்ட இடத்தில் ஒன்பது வியாபார நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இதனை தொடர்ந்து குறித்த காணியினை மீள ஒப்படைக்குமாறு கோரி யாழ்.பிரதேச செயலகத்தால் யாழ். நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ் வழக்கினை விசாரணை செய்த நீதிமன்றானது குறித்த வியாபார நிலையங்களை அங்கிருந்து அகற்றுமாறு வியாபார நிலையங்களின் உரிமையாளர்களுக்கு கட்டளை பிறப்பித்து இருந்தது.

இதனையடுத்து யாழ்.நீதிவான் நீதிமன்ற பதிவாளர் மற்றும் பொலிஸார் குறித்த வியாபார நிலையங்களுக்கு சென்று அங்கிருந்து குறித்த வியாபா நிலையங்களை அகற்றும் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள் தாமாக தமது வியாபார நிலையங்களை விட்டு வெளியேறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதேவேளை குறித்த விடயம் தொடர்பாக வியாபாரிகள் தமது அதிருப்தியையும் தம் பக்க நியாயத்தை கேட்பதற்கு சந்தர்ப்பம் ஒன்றை வழங்க வேண்டும் எனவும் கோரியிருந்தனர். குறிப்பாக இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டு தாம் சட்டத்தரணிகளுடன் செல்வதற்காக சந்தர்ப்பம் வழங்கி கடந்த 24.07.2017 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட போது சட்டத்தரணிகளின்பணிப் புறக்கணிப்பு காரணமாக சட்டத்தரணிகள் மன்றில் முன்னிலையாகாததால் நீதிமன்றான வெளியகற்றல் கட்டளையை அன்றைய தினமே பிறப்பித்திருந்தது.

இதன்பின்னர் நாம் இது தொடர்பாக யாழ்.மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்த போதும் வழக்கினை மேல் நீதிமன்றானது தள்ளுபடி செய்திருந்தது. இதனையடுத்து இவ் வழக்கினை கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்திருக்கும் நிலையில் அவ் வழக்கானது நேற்று 18ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. இதில் மனுதாரர்கள் சார்பில் கே.வி.எஸ். கணேசராஜா ஆஜராகியிருந்தார்.

எதிர்வரும் 06 ஆம் திகதி எதிராளிகளை மன்றில் தோன்றுமாறு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது. இதேவேளை நேற்றைய தினம் கடை ஒன்று இடிக்கப்பட்டுள்ளதாக வர்த்தகர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-4)

## இந்திய இராணுவ...

இராணுவ முகாமில் பொறுப்பதிகாரியாக இருந்த கப்டன் பாத் வால் அந்த கால பகுதியில் இடம்பெற்ற தமிழீழ விடுதலை புலிகளுடனான மோதலின் போது உயிரிழந்துள்ளார். அவரின் நினைவாக அப்பகுதியில் கல்லறை அமைக்கப்பட்டிருந்தது.

1990 ஆம் ஆண்டுகளில் இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்தின் பின்னர் அந்த கல்லறை தற்போது வரை கவனிப்பாரற்று இருந்தது.

உயிரிழந்த இராணுவ அதிகாரியுடன் பணியாற்றிய சக இராணுவ அதிகாரியான பி.எம்.ஹரிஸ் (தற்போது இந்தியாவின் தெற்கு கட்டளை தளபதி) இனுடைய வேண்டுகோளுக்கு இணங்க குறித்த கல்லறை புனரமைக்க ப்பட்டுள்ளதுடன் இன்றைய தினம் அஞ்சலி நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

குறித்த கல்லறையை புனரமைக்கும் பணிகளை இரண்டு நாட்களாக இலங்கை இராணுவத்தினர் மேற்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் கடந்த 16 ஆம் திகதி இலங்கைக்கு வந்திருந்த இந்திய இராணுவ உயர் அதிகாரிகளான தளபதி ஹரேசின், தளபதி வி.கே.சிங் மற்றும் கட்டளை தளபதி பி.எம்.ஹரிஸ் உள்ளிட்ட குழுவினர் இன்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர். பலாலியில் உள்ள பாதுகாப்பு படைகளின் தலைமையகத்தில் கலந்துரையாடலை முடித்த பின்னர் இன்று பகல் 11 மணியளவில் குறித்த கல்லறையில் அஞ்சலி செலுத்தவுள்ளனர். அத்துடன் அக் குழுவினர் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கும் சென்று வழிபடவுள்ளனர். (செ-4-9)

யாழ்ப்பாணத்தில்
AYARPADI ASTROLOGY
ஆயர்பாடி - ராமகிருஷ்ணன்
28, கல்லூரி கல்வளை ஒழுங்கை, சண்டிலிப்பாய் மத்தி T.P-0758-006096 (140)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
UK - 550/= (C-9334)
கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப
CANADA - 400/= மட்டுமே (நிபந்தனைக்குட்பட்டது)
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
070 330 5500
அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com (C-9347)
கனடாவுக்கு (Canada) மிகக் குறைந்த கட்டணத்தில் கப்பல் ஊடாக அனுப்பிடவும்
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்
யாழ்ப்பாணம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா | திருகோணமலை

V2 TRAVELS
PASSPORT
வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.
VISA EXTENSION
FOR FOREIGN PASSPORT
(வீசா எக்ஸ்ரென்சன்)
0768227499 (C-9338)
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

வீடு காணி தேவை
தேவைப்படும் இடங்கள்:-
யாழ்.நகரில் இருந்து கச்சேரி, நல்லூர், கோண்டாவில், கொக்குவில் ஆகிய இடங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் 2 தொடக்கம் 5 பரப்புக்குள் தேவை. C-9371)
தொடர்புகளுக்கு: 077 361 1282

பணியாளர் தேவை
வரவேற்பாளர்
(பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்)
■ ஆங்கிலம் எழுத, பேசத் தெரிந்திருத்தல் வேண்டும்
■ கணனி மற்றும் தகவல் தொழில்நுட்ப அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.
■ வயதெல்லை 21-30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
மேற்குறிப்பிட்ட தகைமைகள் உடையோர் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளவும்.
நேர்முகத் தேர்வு:-18, 19, 20 ஆகஸ்ட் 2017
காலை 10.00-பி.ப 4.00 மணிவரை
TES
திருவி கல்விச் சேவைகள்
இல.273, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
021 4548464, 0212217400 (162)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org